விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
dishtv
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்ஜினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை.
(பழைய தபால் கந்தோர் வீதி.
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-3550)

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 05 செவ்வாய்கிழமை (21.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 245

## வடக்கு, கிழக்கை தெற்கு அடக்கி வைக்க நினைத்தால் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது

### வெளிநாட்டு பிரதிநிதிகளிடம் முதல்வர் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்) வடக்கு, கிழக்கை தெற்கு அடக்கி வைக்க நினைத்தால் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என வெளிநாட்டு பிரதிநிதிகளிடம் முதல்வர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார். (02-ம் பக்கம்...)

## போராளிகளுடன் இணைய மக்கள் அஞ்சுகின்றார்கள்!

### வெளிநாட்டு பிரதிநிதிகளிடம் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

சிறையில் இருக்கும் போது இராணுவத்தினர் வசம் ஆக்கப்பட்ட முன்னாள் போராளிகளுடன் இணைவதற்கு ஊர்மக்கள் அஞ்சுகிறார்கள் என தெரிவித்த வடக்கு 24

## வடக்கு, கிழக்கில் பொதுமக்களின் காணியை இராணுவம் விடுவிக்க

### 780 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில், இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களுக்கு சொந்தமான மேலும் 500 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கு, அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு திறை 24

## சுவர் இடிந்து வீழ்ந்ததில் இளம் குடும்பஸ்தர் பலி

### மண்டைதீவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மேசன் வேலை செய்து கொண்டிருந்த போது வீட்டின் சுவர் இடிந்து இளம் குடும்பஸ்தர் மீது வீழ்ந்ததில் குறித்த நபர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் மண்டைதீவைச் 23

### பலாலி விமான நிலைய அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வதற்கு

## இந்திய அதிகாரிகள் இன்று யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலாலி விமானத் தளத்தை பிராந்திய விமான நிலையமாக விரிவாக்கும் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிப்பது தொடர்பில் இந்திய அதிகாரிகள் மூவர் இன்று நேரில் வந்து ஆராயவுள்ளனர்.

பலாலி விமான நிலையத்துக்கு இன்று முற்பகல் 9.30 மணிக்கு வருகை தரும் இந்திய அதிகாரிகள் மூவரும், விமான ஓடு 24

## புராதன சின்னங்களை சுற்றுலா தளமாக மாற்ற

### யாழ்.மாநகர சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசினால் கையகப்படுத்தப்படும் யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட புராதன சின்னங்களை சுற்றுலா தளமாக மாற்றி சபையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் மேற்குறித்த பிரேரணையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் வை.கிருபாகரன் முன்மொழிந்தார்.

அதில் வடக்கில் உள்ள 24

### புனர்வாழ்வளிக்கப்பட்ட

## பட்டதாரிகளுக்கு அரச நியமனம்

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது.

புனர்வாழ்வளிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு அரச தொழில் வாய்ப்புக்களுக்கு உள்ளீர்க்கும் முகமாக மீள்குடியேற்றம், புனர் 24

### மானிப்பாய் பகுதியில்

## 6 கைக்குண்டுகள் பொலிஸாரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் கிணற்றில் இருந்து 6 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள காணி ஒன்றில் காணப்பட்ட கிணற்றில் இருந்தே இந்த குண்டு மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை இந்த 23

### மருத்துவர் அச்சுறுத்தலை கண்டித்து

## போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் போராட்டம்



23

### திலீபனின் தூபிக்கு சுற்றுவேலியை

## உறுப்பினர் ஒருவர் தனியாக மேற்கொண்டமைக்கு எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் தூபியை சுற்றி வேலி அமைப்பதற்கு புலனாய்வு துறையின் அச்சுறுத்தலின் பின்னரும் மாநகரசபை உறுப்பினர் ஒருவர் தனியாக அந்த பணியை மேற்கொண்டமைக்கு யாழ்.மாநகர சபையில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் முதல்வரின் அனுமதியுடனே எந்த விடயத்தையும் மேற்கொள்ளுமாறு முதல்வர் ஆனல்ட் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று சபை மண்டபத்தில் நடைபெற்றது. 23

## பெரும்பான்மையான மக்கள் அதிகார பகிர்வை விரும்பவில்லை

### பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா




(கொழும்பு)

அதிகார பகிர்வை பெரும்பான்மையான மக்கள் விரும்பவில்லை என அமைச்சரும், முன்னாள் இராணுவத்தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள விசேட 23

## மாகாணச்சபை தேர்தல் தாமதமாவதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்

### மகிந்த தேசப்பிரிய குற்றச்சாட்டு



(கொழும்பு)

மாகாண சபை தேர்தல் தாமதமடைவது தொடர்பில் தற்போதைய நல்லாட்சி அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், தற்போது மாகாண 02

## நல்லிணக்கத்தை...

வடக்கு கிழக்கு மாகாணங்களை தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தெற்கிலுள்ளவர்கள் நடந்துகொள்வார்களாயின் எங்களால் எந்தக் காலத்திலும் நல்லெண்ணைத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியாது என தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், நாங்கள் சமநிலையிலுள்ளவர்களாக நடத்தப்பட்டால் தான் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என வெளிநாட்டு பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த சுமார் நாற்பதிற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது அலுவலகத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்கள். குறித்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்

எங்களிடையே நல்லெண்ணத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதென்றால் மக்களுடைய மனங்களில் மாற்றங்கள் ஏற்படவேண்டும். வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தெற்கிலுள்ளவர்கள் நடந்து கொள்வார்களாயின் எங்களால் எந்தக் காலத்திலும் நல்லெண்ணத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியாது.

இங்கு சாந்தி சமாதானம் ஏற்படவேண்டுமாயின் நாங்கள் சமநிலையிலுள்ளவர்களாக நடவடிக்கைகளில் ஈடுபட்டால்தான் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என தெரிவித்தேன். வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் அதனை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் பல விதமான கேள்விகளைக் கேட்டு இங்கு நடப்பவற்றை அவர்கள் அறிந்துகொண்டார்கள்.

இராணுவம் இங்கு தொடர்ந்து நிலை கொண்டிருப்பது, தெற்கிலிருந்து மகாவலித் தண்ணீரைத் தருவதாகக் கூறிவிட்டு, தென்னிலங்கை மக்களைக் கொண்டுவந்து குடியேற்றுவது மகாவலித் தண்ணீரைத் தராமல் இருப்பது போன்ற இங்கு நடப்பவற்றை அவர்களுக்கு எடுத்துக் கூறினேன். தமக்குத் தெரியாத பல விடயங்கள் எம்முடன் சந்தித்துப் பேசியதால் தெரிந்துகொண்டுள்ளதாக அவர்கள் கூறினார்கள்.

இது சுமுகமான கலந்துரையாடல் பல நாடுகளையும் சேர்ந்தவர்கள் சந்தித்திருந்ததால் எமக்கு நன்மையாக இருந்தது. அவர்களுடைய பின்னணி, யோசனைகள், என்ன அடிப்படையில் அவர்கள் ஒவ்வொரு கேள்வியையும் எழுப்புகின்றார்கள் என்பது எமக்கு நன்மையளிப்பதாக இருந்தது என மேலும் தெரிவித்தார். (ம-9)

## மாகாண சபை தேர்தல்...

பைத் தேர்தல் முறைக்கான பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளனர். அந்த முறைமைக்கு எந்தத் தொகுதி என்பதை முதலில் அடையாளங்காண வேண்டும். எந்தெந்த தொகுதி என தற்போது அறிக்கையும் தயார் செய்துள்ளனர்.

தொகுதி பிரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் காணப்படும் திருத்த சட்டமூலத்தை நாடாளுமன்றம் அங்கீகரிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தைத் தாண்டி தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு செல்லக்கூடிய அதிகாரத்தை வழங்கவில்லை. இந்த் விடயம் தொடர்பில் முக்கியமானதொரு வழக்கு தீர்ப்பும் காணப்படுகின்றது. கடந்த வருடம் டிசம்பர் மாதம் குறித்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

அப்படியென்றால் இந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் அல்லது அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் கலைக்கப்பட்டுள்ள 3 மாகாண சபைகள் மற்றும் கலைக்கப்படவுள்ள 3 மாகாண சபைகளையும் சேர்த்து ஒரே தடவையில் தேர்தலை நடத்த முடியும். தேவை ஏற்படும் பட்சத்தில் மார்ச் மாதம் பதவிக் காலம் நிறைவடையவுள்ள ஏனைய 2 மாகாணசபைகளையும் இணைத்துக் கொண்டு தேர்தலை நடத்த முடியும் என தெரிவித்துள்ளார். (ம)

# வெலிக்கடையில் மோதல் 8 சிறை அதிகாரிகள் காயம்

(கொழும்பு)

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் நேற்று திங்கட்கிழமை ஏற்பட்ட மோதல் காரணமாக 8 சிறை அதிகாரிகள் காயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை பெண் சிறைக் கைதிகளுக்கிடையில் ஏற்பட்ட அமைதியின்மையை தடுக்க சென்ற அதிகாரிகளே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

இதன்போது காயமடைந்த 8 சிறை அதிகாரிகளும் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, சிறைச்சாலையில் கலவரத்தில் ஈடுபட்ட 52 பெண் கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில் தற்போது வெலிக்கடை பெண்கள் சிறைச்சாலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (ம)

## நல்லைக் குமரன் மலர் வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தின் சைவ சமய விவகாரக்குழுவின் ஏற்பாட்டில் நல்லைக்குமரன் மலர் (26) வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகரசபை ஆணையாளரும் சைவசமய விவகார்ரக்குழுவின் தலைவருமான இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் மற்றும் சிறப்பு விருந்தினராக வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் 2018ஆம் ஆண்டுக்கான யாழ்விருது சந்நிதியான் ஆச்சிரமத்தின் இயக்குநர் கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகளுக்கு வழங்கப்படவுள்ளது. (ம)

## நெல்லியடியில் விபத்து சிறுமி படுகாயம்

(கரணவாய்)

நெல்லியடி நகர்ப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த சிறுமி ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை மாலை பெற்றோர் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக நகருக்கு சென்றதாகவும் இதன்போது வீதியைக் கடக்கமுற்பட்ட இரண்டு வயதான சிறுமியை லொறி மோதியதாக கூறப்படுகிறது.

இதல் தொண்டைமானாறு அக்கரையைச் சேர்ந்த நிர்மலராஜ் திவ்வியா என்ற சிறுமியே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (ம-60)

**சேல்ஸ்மன் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் எமது ஜவுளி நிறுவனத்திற்கு வியாபாரம் பழக அல்லது அனுபவம் உள்ள ஆண்/ பெண் விற்பனையாளர் தேவை.

**சென்னை பெசன் வேல்ட்**
63, பெரிய கடை, யாழ்ப்பாணம் (5430)









# "நீங்கள் ஒரு பெரிய மனிதர்-தூரநோக்குடையவர்"

# எம் இனத்தின் இலக்கை அடைய உதவுங்கள்

## முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் டெனீஸ்வரன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்த வேண்டுமென்று நினைத்துக்கொண்டு எம்மினத்தின் எதிர்கால இலக்கினை சிதைத்து விடாதீர்கள். பலர் இதனைச் செய்வதற்கு முனைப்பாக உள்ளனர். நீங்கள் ஒரு பெரிய மனிதர்-தூரநோக்குடையவர் இத்தவறினைச் செய்ய மாட்டீர்கள் என நம்புகிறேன். கடந்த கால உயிர்த் தியாகங்களுக்கு அர்த்தம் தேடவேண்டும். தயவு செய்து அழித்து விடாதீர்கள் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

முன்னாள் போராளிகளையும் மாவீரர் குடும்பங்களையும் உள்வாங்கி புதிய கட்சி ஒன்றை உருவாக்குவதற்கான சில யோசனைகள் கடந்த காலத்தில் என்மனதில் எழுந்ததுண்டு. எம்மினத்திற்காக தங்கள் உயிர்களை தியாகம் செய்ய துணிந்தவர்களிடம் நிர்வாகத்தை ஒப்படைத்தால் இதைவிட இரண்டு மடங்கு வினைத்திறனாகவும், நேர்மையாகவும் செய்வார்கள். செய்யக்கூடிய பலர் இருக்கின்றனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு துரோகம் செய்யுமெனில் அவ்விடயம் தூசி தட்டப்படும். என்னைப் பொறுத்த மட்டில் கூட்டமைப்பு சரியாக பயணிக்கின்றது. கடந்த காலத்தில் பிரிந்து சென்றவர்களிடம் அதற்கான காரணத்தை கேட்டுப்பாருங்கள். அதற்கு பின்னால் ஒரு உப்புச்சப்பில்லாத காரணம் தான் அதிக்மாக இருக்கும். தங்களுடைய சுயநலனும்



தனிப்பட்ட கட்சி அரசியலும், ஆசன ஒதுக்கீட்டு பிரச்சினைகளும்தான் அதிகம். மக்கள் நலனும், கடந்த கால உயிர் இழப்புகளுக்கு அர்த்தம் தேடவேண்டுமென்று ஒரு துளியேனும் நினைத்திருந்தால் அத்தவறை செய்திருக்க மாட்டார்கள். ஒரு சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதனை சீர்செய்ய வேண்டிய பொறுப்பு உங்களைப் போன்ற பெரியவர்களிடம் உள்ளது. இப்பொறுப்பில் இருந்து தவறிவிட வேண்டாம். தந்தை செல்வா கூறிய ஒரு விடயம் ஞாபகத்துக்கு வருகின்றது " தமிழரை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று. உங்களைப் போன்ற எம்மை வழிநடத்த வேண்டியவர்களும், பெரியவர்களும் வழிதடுமாறிச் செல்வீர்கள் என்றால் உங்களைப் போன்றோரை கடவுளும் மன்னிக்கமாட்டார். உங்களைப் போன்றோருக்கு அறிவுரையும் ஆலோசனையும் சொல்லக்கூடிய அனுபவமும் வயதும் எனக்கில்லை, ஒத்துக்கொள்கின்றேன்.

ஆனால் கடந்த காலத்தில் விதைக்கப்பட்ட ஒவ்வொரு விலைமதிப்பற்ற உயிர்களும் அர்த்தமற்றதாகிவிடும் என்ற வேதனையிலும் வலியிலும் இந்த வேண்டுகோள்களை தங்களிடம் முன்வைக்கின்றேன். எனக்கும் உங்களுக்கும் இடையில் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கலாம். அதை மனதில் வைத்துக்கொண்டு மேற்படி விடயத்தைப் பார்க்க வேண்டாம். அவ்வாறு பார்ப்பீர்கள் என்றால் நான் கூறுவது பிழையாகத்தான் தெரியும்.

தென்பகுதியில் உள்ளவர்கள் எம்மை எவ்வாறு பிரித்து கையாளலாம் என்று நினைக்கின்றார்களோ அதற்காக அவர்கள் எந்த வித முயற்சியும் எடுப்பதற்கு முன்னமே நாம் பிரிந்து நிற்கின்றோம். ஆண்டாண்டு காலமாக எம்மினத்தின் பின்னடைவுக்கும் வீழ்ச்சிக்கும் பின்னால் பிற இனத்தவர்களை விட எம்மினத்தவர்கள்தான் அதிகமாகவுள்ளனர். நாம் ஏன் இதை மாற்றி அமைக்கக்கூடாது? சிந்தித்து செயற்படுங்கள் செயல்வடிவம் கொடுப்பதற்கு நான் தயார் என டெனீஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த எல்லோரும் ஒன்றிணைய வேண்டும்

## சபாநாயகர் வேண்டுகோள்



(கொழும்பு)

எல்லோரும் ஒன்றிணைந்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மத ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் வேறுபாடுகள் இருப்பின் நாட்டை முன்னேற்ற முடியாது எனவும் இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் ஜப்பான் மற்றும் இலங்கை நாணயங்களுக்கு இடையில் வேறுபாடுகள் இருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திரம் கிடைத்து 70 வருடங்கள் கடந்திருப்பினும் இறந்த காலத்தை உற்று நோக்கும் போது நாட்டில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை எனவும் இனங்களுக்கும் பல்வேறு குழுக்களுக்கும் இடையில் காணப்பட்ட முரண்பாடுகளால் பயங்கரமான யுத்தத்தை சந்திக்க நேர்ந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் இறந்த காலத்தை உற்று நோக்கி அப்போது ஏற்பட்ட தவறுகளை இனங்கண்டு எதிர்கால சந்ததியினருக்காக ஏதாவது செய்ய வேண்டும் எனவும் சபாநாயகர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# முஸ்லிம் அமைச்சர்களிடம் ஆயுதங்கள் இல்லை!

## அமைச்சர் றிசாத் மறுப்பு



(கொழும்பு)

**விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட அனைத்து ஆயுதங்களும் முஸ்லிம் அமைச்சர்களிடம் இருப்பதாக புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சியினர் சுமத்தும் குற்றச்சாட்டுகளை அமைச்சர் றிசாத் பதியுதீன் மறுத்துள்ளார்.**

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் அரசாங்கம் ஆழமான பார்வையுடன் அக்கறை செலுத்தி, உரிய விசாரணைகளை நடத்த வேண்டும் எனவும் அவர் அறிக்கை ஒன்றின் ஊடாக வலியுறுத்தியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகபட்ச கருத்துச் சுதந்திரத்தையும், ஊடக சுதந்திரங்களைப் பயன்படுத்தும் உரிமை எவருக்கும் உள்ளதாக அமைச்சர் றிசாத் தெரிவித்துள்ளார்.

எனினும், இவ்வாறான சுதந்திரத்தை பயன்படுத்தி அச்சுறுத்தல் மிக்க கருத்துக்களை வெளியிடுவது நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்புடையதல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

அரச படைகள் தவிர வேறு எவரும் ஆயுதங்களை வைத்திருப்பது பயங்கரவாதச் செயற்பாடுகளாகவே நோக்கப்படும் நிலையில், புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சியினர் இவ்வாறு குற்றம் சுமத்துவது எவ்வாறு எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்த வகையில், புலிகளின் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கான நோக்கம் பற்றி புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பின் குறிப்பிட்ட முக்கியஸ்தரிடம் கேட்டறிய வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

முஸ்லிம்கள் மீது ஆங்காங்கே கட்டவிழ்த்து விடப்பட்ட இவ்வாறான கற்பனைக் கதைகள், புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளின் பின்னர் பொய்த்துப் போயுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறான சில தீய சக்திகளை வெளிநாடுகள் இயக்குகின்றதா? அல்லது உள்ளூர் கடும்போக்காளர்களின் பிரித்தாளும் தந்திரங்களுக்கு சிலர் பலிக்கடாக்களாகியுள்ளனரா? என்று சந்தேகிக்க வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

எனவே, குறித்த குற்றச்சாட்டுகள் பற்றி ஆராய்ந்து, குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் றிசாத் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஐந்து சந்தி கேக் விற்பனை நிலையம் மூன்றாவது தடவையாக முற்றுகை!

## ஒரு கிலோ மாவா போதைப்பொருள் கைப்பற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் இயங்கிவரும் கேக் விற்பனை நிலையம் நேற்று மூன்றாவது தடவையாக முற்றுகையிடப்பட்டதுடன், மாவா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்ட தேடுதலின் போது, 30 பக்கெற்றுக்களாகப் பொதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் மாவா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது, விற்பனைக்காக வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கடை உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட இளைஞர்களுக்கு மாவா போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் இயங்கும் பொலிஸ் பிரிவிற்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சிறப்பு பொலிஸ் பிரிவினரால் யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியிலுள்ள கேக் விற்பனை நிலையம் நேற்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அத்துடன், அவரிடம் மீட்கப்பட்ட மாவா போதைப்பொருளும் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதுடன், விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, ஐந்து சந்தி கேக் விற்பனை நிலையம் கடந்த ஏப்ரல் மாதம் 10ஆம் திகதியும் கடந்த 7ஆம் திகதியும் பொலிஸாரால் முற்றுகையிட்டப்பட்ட போது, பெருமளவு மாவா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதுடன், அதனைத் தயாரிக்கும் மூலப்பொருட்களும் மீட்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ-101)

# சதமடித்தார் 'கில்லி' ஹோலி

## வெற்றி முனைப்பில் இந்தியா

அணித் தலைவர் ஹோலி சதம் கடந்துகைகொடுக்க நொட்டிங்காம் டெஸ்டில் இந்திய அணி 520 ஓட்டங்கள் என்ற வலுவான முன்னிலை பெற்றது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதலிரண்டு டெஸ்டில் வென்ற இங்கிலாந்து 2-0 என, முன்னிலையில் உள்ளது.

மூன்றாவது டெஸ்ட் நொட்டிங்காமில் நடக்கிறது.

முதல் இன்னிங்சில் இந்திய 329, இங்கிலாந்து 161 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 2வது இன்னிங்சில் இந்திய அணி, 2 விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்கள் எடுத்திருந்தது. புஜாரா (33), விராட் ஹோலி (8) ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.



### புஜாரா அரைசதம்

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த இந்திய அணிக்கு புஜாரா, அணித் தலைவர் ஹோலி ஜோடி இங்கிலாந்து பந்துவீச்சை எளிதாக சமாளித்து ஓட்டங்கள் சேர்த்தது. பொறுப்பாக ஆடிய புஜாரா, டெஸ்ட் அரங்கில் 18ஆவது அரைச் சதமடித்தார். மறு முனையில் அசத்திய ஹோலி, ஸ்ரூவேர்ட் பிரோட் வீசிய 52ஆவது ஓவரில் 2 பவுண்டரி விளாசினார். மூன்றாவது விக்கெட்டுக்கு 113 ஓட்டங்கள் சேர்த்தபோது ஸ்ரோக்ஸ் 'வேகத்தில்' புஜாரா (72) வெளியேறினார்.

### ஹோலி அபாரம்

அடுத்து வந்த ரகானே, ஜோ ரூட், பிரோட் பந்தில் தலா ஒரு பவுண்டரி அடித்தார். வோக்ஸ் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய ஹோலி, டெஸ்ட் அரங்கில் தனது 23ஆவது சதமடித்தார். இவர், 103 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது வோக்ஸ் 'வேகத்தில்' வெளியேறினார். அண்டர்சன் பந்தில் ரிஷாப் பண்ட் (1) ஆட்டமிழந்தார். ரகானே (29) ஆறுதல் கொடுத்தார். அதிரடியாக ஆடிய ஹர்திக் பாண்ட்யா அரைச்சதம் கடந்தார். மொஹமட் ஷமி (3) ஏமாற்றினார்.

இரண்டாவது இன்னிங்சில் இந்திய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 352 ஓட்டங்கள் எடுத்து 'டிக்ளேர்' செய்தது. பாண்ட்யா (52), அஷ்வின் (1) ஆட்ட மிழக்காமல் இருந்தனர். இங்கிலாந்து சார்பில் அடில் ரஷித் 3 விக்கெட் வீழ்த்தினார்.

### கடின இலக்கு

பின், 521 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் 2 ஆவது இன்னிங்சை ஆரம்பித்த இங்கிலாந்து அணி ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 23 ஓட்டங்கள் எடுத்து. 498 ஓட்டங்களால் பின்தங்கி இருந்தது.

ஜென்னிங்ஸ் (13), குக் (9) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### 11 சதம்

இந்தியாவின் ஹோலி, அந்நிய மண்ணில் (ஆசிய துணைக்கண்டம் தவிர்த்து) அதிக சதமடித்த ஆசிய வீரர்கள் பட்டியலில் 4ஆவது இடம்பிடித்தார். இதுவரை இவர் 11 சதமடித்துள்ளார். முதல் மூன்று இடங்களில் சச்சின் (18 சதம்), கவாஸ்கர் (15), டிராவிட் (14) ஆகியோர் உள்ளனர்.

### 16 சதம்

தலைவராக ஹோலி 16 சதமடித்துள்ளார். இதன்மூலம் அதிக சதமடித்த சர்வதேச தலைவர்கள் பட்டியலில் 3ஆவது இடம்பிடித்தார். முதலிரண்டு இடங்களில் தென்னாபிரிக்காவின் கிரேம் ஸ்மித் (25 சதம்), அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொன்ரிங் (19) உள்ளனர். நான்காவது இடத்தை இங்கிலாந்தின் அலன் போர்டர், அவுஸ்திரேலியாவின் ஸ்ரீவ் வோ, ஸ்ரீவ் ஸ்மித் (தலா 15) பகிர்ந்து கொண்டுள்ளனர்.

### 23 சதம்

துடுப்பாட்டத்தில் அசத்திய விராத் ஹோலி, தனது 23ஆவது டெஸ்ட் சதம் அடித்தார். இதன்மூலம் டெஸ்ட் அரங்கில் அதிக சதமடித்த இந்திய வீரர்கள் பட்டியலில் 4ஆவது இடத்தை சேவக்குடன் (23 சதம்) பகிர்ந்து கொண்டார். முதல் மூன்று இடங்களில் சச்சின் (51 சதம்), டிராவிட் (36), கவாஸ்கர் (34) உள்ளனர்.

தவிர இங்கிலாந்து மண்ணில் ஒரு டெஸ்ட் தொடரில் இம்மைல் கல்லை எட்டிய 6ஆவது இந்திய வீரரானார் ஹோலி. ஏற்கெனவே ராகுல் டிராவிட் (2 முறை), சச்சின் (2 முறை), கவாஸ்கர் (1), அசார் (1), முரளி விஜய் (1) ஆகியோர் இந்த இலக்கை எட்டி இருந்தனர்.

### 6ஆவது முறை

இந்தியாவின் புஜாரா, ஹோலி ஜோடி 3ஆவது விக்கெட்டுக்கு 113 ஓட்டங்கள் சேர்த்தது. இதன்மூலம் டெஸ்ட் அரங்கில் இந்த ஜோடி 6வது முறையாக 100 அல்லது அதற்கு மேல் ஓட்டங்கள் சேர்த்தது. இதேபோல ஹோலி - ரகானே ஜோடி 6 முறை இம்மைல்கல்லை எட்டி இருந்தது.

### பேர்ஸ்டோவ் காயம்

அண்டர்சன் வீசிய 44ஆவது ஓவரின் கடைசி பந்து, இங்கிலாந்து விக்கெட் காப்பாளர் பேர்ஸ்டோவின் இடது கை நடுவிரலில் பலமாக தாக்கியதில் காயமடைந்தார். உடனடியாக 'பெவிலியன்' திரும்பிய அவர், அருகில் இருந்த மருத்துவமனைக்கு 'எக்ஸ்ரே' அழைத்துச் செல்லப்பட்டார். இதனால் விக்கெட் காப்பாளராக பட்லர் செயல்பட்டார்.


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் கந்தப்பு வேலாயுதம் (இந்திரன்)



**(வங்கியாளர், சதாவதானி கதிரைவேற்பிள்ளை, சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம், தம்பசிட்டி, பருத்தித்துறை)**

பிறப்பு 25.09.1947

மறைவு: 20.08.2018

எமது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும் சங்கம் ஆரம்பிப்பதற்கு முக்கிய பங்கு வகித்தவரும் ஆரம்பகாலம் தொடக்கம் வங்கியாளராக பணியாற்றியவரும் சிறந்த சமூக சேவையாளருமாகிய அமரர் கந்தப்பு வேலாயுதம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிர்வாகத்தினர், பணியாளர், அங்கத்தவர்**
**சதாவதானி கதிரைவேற்பிள்ளை,**
**சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம்**

(C-3580)

# மணிவிழா சிறப்பிதழ்-21.08.2018

# திருவாளர்.சண்முகலிங்கம் தயாபரன்

## (B.A. PGDE, SLTS-I)

### பிரதம குருக்களின் ஆசிச்செய்தி

இந்து பாரம்பரியத்தைப் பேணும் தலைசிறந்த பாடசாலையாக விளங்கும் யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் இந்துமாமன்றப் பொறுப்பாசிரியாகவும் இந்து சமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடத்துறைகளில் சிறந்து விளங்கி சைவ விழுமியங்களைப் பின்பற்றி வரும் திரு.சண்முகலிங்கம் தயாபரன் அவர்களின் மணிவிழா சிறக்க வாழ்த்துவதோடு நீடூழி காலம் வாழ்ந்து சைவப் பணியை மேற்கொள்ள எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகள் அருள்பாலிக்க வேண்டுகின்றேன்.

**சிவஸ்ரீ க.சிவதாசக் குருக்கள்**
**கிருபாகர சிவசுப்பிரமணிய தேவஸ்தானம்,**
**கொக்குவில்.**

### ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

12.10.1998 முதல் இன்றுவரை ஆசிரிய சேவையில் எமது மாணவச் செல்வங்களுக்கு அர்ப்பணிப்புடன் சிறப்புற கல்வியறிவூட்டி சேவையாற்றி அகவை அறுபதை பூர்த்தி செய்து 20.08.2018 முதல் ஓய்வுபெறும் தங்களது ஓய்வுக்காலம் நலமே அமைய வாழ்த்துகின்றோம். "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" எனும் கீதை காட்டிய பாதையில் தாங்களும் தன்னலம் கருதாது தாங்கள் ஆற்றிய பணி தங்களது ஓய்வுக்காலத்தை குடும்பத்துடன் மனநிறைவோடும் மகிழ்வோடும் கழிக்க வழிகாட்டும்.

தங்களால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் வளர்ந்து சமூகத்தில் உயர்ந்து நிற்கும் போது அதனைப் பார்த்து தங்கள் உள்ளம் பூரிப்படைவதுடன் தங்கள் சேவையால் பாடசாலையும் எங்கள் யாழ்ப்பாண கல்வி வலயமும் பெருமையடைகிறது. மன அமைதி யுடன் எல்லா நலன்க ளும் பெற்று நீண்டகாலம் குடும்பத்துடன் மகிழ்வுடன் வாழ்ந்து மேலும் பொது வாழ்வில் அர்ப்பணிப்புடன் ஈடுபட எல்லாம்வல்ல இறைவனை வேண்டி வாழ்த்து கின்றோம்.

**V.S. மாணிக்கராஜா**
**பிரதிக்கல்விப்பணிப்பாளர், யாழ்.வலயம்**


### கல்லூரிப் பற்றாளன்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் எனது காலத்தில் கல்லூரி யில் இணைந்து எட்டு வருடங்கள் சிறப்புமிக சேவையாற்றி மணி விழாக்காணும் ஆசிரியர் திரு.சண்முகலிங்கம் தயாபரன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

அன்பும், பண்பும், பணிவும், அடக்கமும், அமைதியான சுபாவ முடைய மணிவிழா நாயகன் கல்லூரியில் இந்து சமயம், குடியுரி மைக் கல்வி போன்ற பாடங்களை சிறப்பாக கற்பித்து இடைநிலை வகுப்புக்களில் கற்றல் பெறுபேறுகளின் வளர்ச்சிக்கு உறுதுணை யாக இருந்தார். இவ் ஆசிரியர் சட்ட நுணுக்கம் மிக்கவராகவும் அரசியல் பாடத்தில் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கினார். கல்லூரி மீதும் கிருபாகர சிவசுப்பிரமணிய கோவில் மீதும் ஊர் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கியதை என் அனுபவம் ஊடாக உணர்ந்துள்ளேன்.

இவருடைய சேவைக்காலத்தின் பின் சமயத் தொண்டிலும் சமூகத் தொண்டிலும் ஈடுபட இறைவனை வேண்டுகிறேன்.

**அ.அகிலதாஸ்**
**முன்னாள் அதிபர் கொக்குவில் இந்துக் கல்லூரி.**



### சேவை விபரம்

**12.10.1998-31.12.1999 -**
**யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி**
**01.01.2000-23.04.2001-**
**யா/சென். ஜேம்ஸ் ஆண்கள் கல்லூரி**
**24.04.2001-31.12.2003-**
**யா/சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரி**
**01.01.2004-14.07.2010-**
**உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்**
**15.07.2010- 20.08.2018-**
**யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(சி-3572)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

### அதிபரின் வாழ்த்துச் செய்தி

திரு.தயாபரன் ஆசிரியர் அவர்கள் எமது கல்லூரியுடன் 2010 முதல் அவர் மணிவிழாக்காணும் நாள் வரைக்குமான கடந்த எட்டு ஆண்டுகள் கொக்குவில் இந்து அன்னையின் மடியில் வளர்ந்து வரும் மாணவச் செல்வங்களுக்கு தனது பாடத்துறையான இந்து சமயமூடாக நல் விழுமியங்கள், இறை நம்பிக்கை, இறை வழிபாடு, சமய விழாக்கள், கலாசார விழாக்கள், இந்துமாமன்றத்தின் செயலூக்கமிக்க செயற்பாடுகள், சிறப்பு ஆலய வழிபாட்டுக் களப்பய ணங்கள், போட்டிசார் நிகழ்வுகள், இலக்கியம் சார் விழாக்கள் என இன்னோரன்ன கல்லூரியின் முக்கியமான அனைத்து நிகழ்வுக ளிலும் அவருக்கான பங்கையும் பணியினையும் மிக நேர்த்தியாக செய்து முடிக்கக்கூடிய ஈடுபாட்டுடன் கூடிய பங்குபற்றுதலினை வெளிப்படுத்தி நின்ற பெருமகனாவார்.

இவரது பணி ஓய்வுக்காலம் வாய்க்கப் பெற எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிரமணியப் பெருமானின் திருவருட்கடாட்சமும் தவத்திருயோக சுவாமிகளின் குருவருட்கடாட்சத்தினையும் வேண்டி கொக்குவில் இந்து அன்னையின் சார்பில் வாழ்த்துக்களைக் கூறி நிறைவு கொள்கின்றேன்.

**ம.ஞானசம்பந்தன் (அதிபர்)**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

### பல்துறை ஆசானை வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியில் கடந்த எட்டு வருடங்களாக மகத்தான சேவை யாற்றித் தனது அறுபதாவது வயதில் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரியர் திருவாளர்.சண்முகலிங்கம் தயாபரன் அவர்களின் சேவையைப் பாராட்டுவதில் ஆசிரியர் நலன்புரிக் கழகம் பெருமை யடைகின்றது. இந்துசமயம், இந்து நாகரிகம், அரசியல் விஞ்ஞா னம் ஆகிய பாடத்துறைகளில் தேர்ச்சி பெற்ற இவர் கற்பித்தல் பணி யில் ஆளுமை நிறைந்த ஆசான் ஆவார். மாணவர் களுடன் அன்பா கப் பேசி பாட விடயங்கள் மாணவர்களை இலகுவாகச் சென்றடை யும் வகையில் சிறந்த கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்திய ஆசான். சக ஆசிரியர்களுடன் எளிமையாகவும் பண்பாகவும் பழகுவதுடன் ஏனையோரை மதிக்கும் பண்பாளனும் ஆவார். கல்லூரியின் இந்து மாமன்ற பொறுப்பாசிரியராகச் செயற்பட்டு பாடசாலையில் நடை பெறும் சகல இந்துமத நிகழ்வுகளையும் முன்னின்று திறம்பட செயற் படுத்தியவர். அத்துடன் இவர் சிறந்தசமய சொற்பொழிவாளனும் ஆவர்.

அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் நீண்ட ஆயுளுடன் சகல நலன்களும் பெற்று குடும்பத்தினருடன் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ந.கிருபாகரன் (தலைவர்)**
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.**



(சி-3565)



# வரலட்சுமி விரத அர்ச்சனை

(யாழ்ப்பாணம்)

வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் வீணாகான குருபீடம் பதி உறையும் ஸ்ரீ சிவன் அம்பாள் சகித ஸ்ரீ மஹா சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவிலில் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் கணபதி பூஜையைத் தொடர்ந்து மஹாலட்சுமிக்கு ஆராதனைகள் இடம்பெறும்.

தொடர்ந்து விரதம் அனுஷ்டிக்கும் அடியார்களால் பச்சை அரிசியினால் நிரப்பப்பட்ட கும்ப மஹாலட்சுமி தேவிக்கு விசேட அஷ்டலட்சுமி பூஜை சுவர்ண,புஷ்ப அர்ச்சனை இடம்பெற்று விரதம் நோற்கும் அடியவர்களுக்கு நோன்பு காப்பு கட்டுதல் இடம்பெறும். (இ-7)







தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவில் தேர்முட்டிக்கு கலசம் வைக்கும் நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றது. (படங்கள்: கரணவாய் செய்தியாளர்)

# பொன்னாலையில் மணல் அகழ்வதால் நிலத்தடி நீருக்கு மிகப்பெரும் ஆபத்து

## தடுக்கவேண்டும் என பிரதேச சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)



பொன்னாலை தொடக்கம் சம்பில்துறை வரையான பிரதேசங்களில் மணல் அகழ்வதால் எதிர்காலத்தில் நிலத்தடி நீருக்கு ஆபத்து ஏற்படக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ந.பொன்ராசா சபையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால். மேற்படி பிரதேசத்தில் மணல் அகழ்தல் தொடர்பாக உடனடியாக கனிய வளத் திணைக்களத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என அவர் கொண்டுவந்த பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபையின் ஆறாவது கூட்டம் கடந்த 14 ஆம் திகதி தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது,

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பொன்னாலை தொடக்கம் சம்பில்துறை வரையான பிரதேசங்களில் தொடர்ந்து மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்கு பின்புறத்திலிருந்து சம்பில்துறை வரையான கரையோரப் பிரதேசத்தில் ஏற்கனவே யுத்த காலத்தில் கடற்படையினர் தமது தேவைக்கு மணல் அகழ்ந்திருக்கின்றனர். அந்த இடங்கள் பெரும் கிடங்குகள் ஆகியிருக்கின்றன. இந்த நிலையில் தற்போதும் தொடர்ந்து மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

திருடர்கள் சட்டவிரோதமாக ஒரு புறம் மணல் அகழ்வில் ஈடுபட்டிருக்கும் நிலையில், வலி.மேற்கு பிரதேச செயலகத்தின் அனுமதியுடனும் மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

மேற்படி கரையோரப் பிரதேசமே இப்பிரதேசத்தில் வசிப்பவர்கள் வளர்க்கும் கால்நடைகளின் மேய்ச்சல் தரவையாக உள்ளது. மேலும், மயானங்கள், மாட்டுவண்டிச் சவாரித் திடல்கள் போன்றனவும் இங்கு இருக்கின்றன. இந்த இடங்களில் மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதனால் இப்பிரதேசத்தின் இயற்கைச் சமநிலை சீர்குலைக்கப்படுகின்றது.

மேய்ச்சல் தரவையில் மணல் அகழப்படுவதால், இப்பிரதேசத்தில் உள்ளவர்கள் கால்நடைகளை வளர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சம தரையான இடங்களில் மணல் அகழப்பட்டு கிடங்குகள் ஏற்படுத்தப்படுவதால் மாரி காலங்களில் கிணறுகள் போல அங்கு தண்ணீர் தேங்கி நிற்கின்றது. இதன்போது, கால்நடைகளை மேய்ச்சலுக்காகக் கொண்டு செல்பவர்கள் அந்தக் கிடங்குகளுக்குள் வீழ்ந்து உயிரிழக்கக்கூடிய அபாயங்களும் ஏற்பட்டுள்ளன.

எந்தவொரு இடத்திலும் மணல் அகழப்படுவதற்கு புவிச்சரிதவியல் திணைக்களம் மற்றும் கனியவளத் திணைக்களம் போன்றவற்றின் அனுமதிகள் தேவை. உரிய திணைக்களங்கள் அந்த இடங்களை ஆய்வு செய்து அனுமதித்தால் மட்டுமே மணல் அகழ முடியும்.

ஆனால், இந்தத் திணைக்களங்களின் ஆய்வுகள் இன்றியே எமது பிரதேசத்தில் மணல் அகழ்வதற்கு அதிகாரிகள் தொடர்ந்து அனுமதி வழங்கிக்கொண்டிருக்கின்றனர். இந்த நிலை நீடித்தால் எமது கரையோரப் பிரதேசங்களை எதிர்காலத்தில் கடல் காவுகொள்ளும். இங்கு மக்கள் வசிக்க முடியாத நிலை ஏற்படும்.

பொன்னாலை தொடக்கம் சம்பில்துறை வரையான பிரதேசங்களுக்கு அண்மையில் இருக்கும் பொன்னாலை, மூளாய், சுழிபுரம், கல்விளான், பாண்டவெட்டை, காட்டுப்புலம் போன்ற பிரதேசங்களில் நன்னீர் மிகக் குறைவாகவே இருக்கின்றது.

திட்டமிடப்படாத மணல் அகழ்வால் எதிர்காலத்தில் கரையோரங்களைக் கடல் காவுகொள்ளுமாயின் இருக்கின்ற நன்னீர் வளம்கூட இல்லாமல் போகக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. மக்கள் சேவையில் ஈடுபடுகின்ற அதிகாரிகளோ அரசியல்வாதிகளோ குறுகிய நோக்கம் இன்றி நீண்டகால திட்டமிடலுடன் செயற்படவேண்டும்.

எனவே, பொன்னாலை தொடக்கம் சம்பில்துறை வரையான கரையோரப் பிரதேசங்களில் மணல் அகழ்வைத் தடுப்பதற்கான செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக கனியவளத் திணைக்களம் மற்றும் புவிச்சரிதவியல் திணைக்களத்தின் அதிகாரிகளை வரவழைத்து இப்பிரதேசத்தில் மணல் அகழ முடியுமா என ஆய்வு செய்ய வேண்டும். இந்தச் செயற்பாட்டை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும். இதன் மூலமே எமது பிரதேசத்தையும் பொதுமக்களையும் பாதுகாக்க முடியும் என தனது பிரேரணையில் உறுப்பினர் பொன்ராசா சுட்டிக்காட்டினார்.

இப்பிரேரணை எதுவித எதிர்ப்புக்களும் இன்றி தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்திற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என தவிசாளர் தெரிவித்தார். (இ-9)

# நினைவுத்தூபி திறப்பு



(சாவகச்சேரி)

1984 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 13 ஆம் திகதி கொல்லப்பட்ட தென்மராட்சி மேற்கு ப.நோ.கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் மற்றும் கைதடி மக்களை நினைவு கூரும் தூபி தென்மராட்சி மேற்கு ப.நோ.கூட்டுறவுச் சங்க முன்றலில் கடந்த 18.08. 2018 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராசாவால் திறந்து வைக்கப்பட்டது. சனசமூக நிலையங்கள் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் இடம்பெற்ற இவ் வைபவத்தில்வடமாகாணசபை உறுப்பினர்கே.சயந்தன், சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (இ-30)

# இராசி பலன்

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மேடம்:** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் நன் மதிப்பைப் பெறுவீர்கள்.

**இடபம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சிரித்துப் பேசும் நண்பர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், காரிய அனுகூலமுண்டு, கௌரவமான நாள்.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | இராசி பலன் | | புத. ராகு |
| செவ். கேது | சந்திராஷ்டமம்: ரோகிணி | | சூரி |
| சனி. சந் | | குரு | சுக் |

21.08.2018
ஆவணி 5, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
தசமி முற்பகல் 8.24 மணிவரை
மூலம் பின்னிரவு 3.45 மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை
ஆவணி மூலம், அமிர்தசித்தம்

வளவன்

**கடகம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர் உறவினர்களின் வருகையால் உற்சாகம் பெருகும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்:** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**சிம்மம்:** பிள்ளைகள் வழியில் பெருமைகள் கூடும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயம் கிடைக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**தனுசு:** எதிர்பாராத காரியமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஒத்துழைப்பால் நலம் காண்பீர்கள், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள்.

**துலாம்:** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி:** காலைப் பொழுதே மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரலாம், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



"அமுத கலாஜோதி"
"லங்கா ரத்ன ஜோதி"
"ஞான தான வள்ளல்"

## கலாநிதி
## செ.மோகனதாஸ்
## சுவாமிகள்

(சமாதான நீதவான்)

அவர்களுக்கு
யாழ். மாநகர சபை
சைவ சமய விவகாரக்குழு
2018 ஆம் ஆண்டுக்கான

## "யாழ்.விருது"

வழங்கி இன்று
கௌரவிக்கின்றது.
விருது பெறும் சுவாமி
அவர்களின்
சமய, சமூக, கல்விப் பணிகள்
மேலும் சிறப்புற்று
பல்லாண்டு காலம் வாழ
செல்வச் சந்நிதியான்
அருள் வேண்டி
வாழ்த்துகிறோம்.

CONGRATULATIONS

வாழ்த்துவோர்:

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**
**சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**

(சி-3560)

# இரண்டு முன்பள்ளி கட்டடங்கள் திறப்பு



சைல்ட்பன்ட் சிறிலங்காவால் முல்லைத்தீவில் இரண்டு முன்பள்ளிகள் கடந்த 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய மையங்கள் சைல்ட்பன்ட் கொரியாவின் 70 ஆவது ஆண்டு பூர்த்தியையொட்டி இடம்பெற்றுள்ளதுடன் முன்பள்ளிக்கான நிகழ்ச்சித் திட்டத்திற்கும் நிதியுதவி வழங்கி வருகின்றது.

இரண்டு கட்டடங்களையும் சைல்ட்பன்ட் கொரியாவின் உப தலைவர் வோன் மன் யுங் கட்டடங்களை திறந்து வைத்து உரையாற்றுகையில்.

மிக நீண்டகாலமாக இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றோம். அதன் இன்னோர் அங்கமாக முல்லைத்தீவில் 16 முன்பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக புதிதாக உடையார்கட்டில் நிர்மாணிக்கப்பட்ட "கலைமகள்" முன்பள்ளி, தேவிபுரத்தில் அமைக்கப்பட்ட "அறிவு" முன்பள்ளியை திறந்து வைப் பதையிட்டு நாம் மகிழ்கின்றோம். முன்பள்ளிச் சிறுவர்கள் பாதுகாப்பானதும் அமைதியானதுமான ஒரு கட்டடத்தைப் பெற்றதன் மூலமாக தமது ஆரம்ப பிள்ளைப்பருவ விருத்தியை மகிழ்வுடன் மேற்கொள்வர் என்று எண்ணுகின்றோம்" என்றார்.

சைல்ட்பன்ட் இலங்கை நாட்டிற்கான இயக்குநர் திருமதி. கத்தரின் மனிக் புதிய கட்டடத்திற்கான பெயர்க் கற்களை திறந்து வைத்து உரையாற்றுகைளில். "இந்தப் பயணமானது கொரியாவின் நிதி வழங்குநர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் இலங்கைக்குமிடையிலான சக்திவாய்ந்த நட்புறவை பலப்படுத்தும் வெற்றிகரமானதொன்றாகும். இந்த இரு புதிய கட்டடங்களும் கொரியாவின் 70 ஆவது ஆண்டு நிறைவிற்காக இலங்கைவாழ் பிள்ளைகளுக்குக் கிடைத்த ஒரு பரிசாக கருதுகின்றேன் என்றார்.

வட மாகாண கல்வி அமைச்சின் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர். செல்வி. ஜெயா தம்பையாவும் முல்லைத்தீவு கல்வி வலயத்தின் பணிப்பாளர் திருமதி. உமாநிதி புவனராஜாவும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றினர். போரில் பாதிக்கப்பட்டு தற்காலிக கட்டடங்களில் இயங்கிவந்த இரு முன்பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள் கிடைத்தமையையிட்டு கொரிய அனுசரணையாளர்களுக்கு நன்றி தெரிவித்ததுடன் அந்தக் கட்டடங்களை பயனுள்ளதாகத் தொடர்ந்தும் பாதுகாப்பதாக உறுதியளித்தனர்.

கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் மாற்றுத் திறனாளிப் பிள்ளைகள் உள்ளடங்கலாக பிள்ளைகளுக்கான சிறந்த தரத்திலானதும் பூரணமானதுமான முன்பள்ளியைப் பெற்றுக் கொள்வதே ஆகும். இதிலே முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 தொடக்கம் 5 வயது வரையான பிள்ளைகளை ஆரம்பப் பிள்ளைப் பராயவிருத்திக்கு உதவும் பல செயற்பாடுகள் மூலம் பாடசாலைக்குத் தயார்படுத்தப்படுகின்றனர். மேலும் இதில் பெற்றோருக்கும் பராமரிப்பாளர்களுக்கும் சிறந்த போசாக்குப் பழக்க வழக்கங்கள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குவதும் உள்ளடங்குகின்றது.

கருத்திட்டமானது முன்பள்ளி கல்வியின் முக்கியத்துவம் பற்றிய பெற்றோர்களின் அறிவினை மேம்படுத்த முயற்சிப்பதுடன் முன்பள்ளியின விருத்தியில் அவர்களின் பங்கேற்பையும் மேம்படுத்துகின்றது. (2)




# நலன்புரி நிலையங்களாக தொழிற்படும் 16 பொதுக்கட்டடங்கள் புனரமைக்கப்படும்

## வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(குருமன்காடு)

அனர்த்தத்தின் போது நலன்புரி நிலையங்களாக பயன்படுத்தப்படும் பொது கட்டடங்களை புனரமைக்க தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் ஊடாக 5.5 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் இஸ்மாலெப்பை முகமட் ஹனீபா தெரிவித்துள்ளார்.



ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற அனர்த்தங்களின் போது பொதுமக்களை தங்க வைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட நலன்புரி நிலையங்களை இனிவரும் காலங்களிலும் அனர்த்தங்கள் ஏற்படும் போது பயன்படுத்தும் வகையில் அவற்றை புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி அனர்த்தங்களின் போது நலன்புரி நிலையங்களாக பயன்படுத்தப்படும் பொது கட்டடங்களை புனரமைப்பதற்கு தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தால் 5.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் வவுனியா பிரதேச செயலக பிரிவில் இரண்டு பொது கட்டடங்களும், வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் நான்கு பொது கட்டடங்களும், வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவில் நான்கு பொது கட்டடங்களும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் ஆறு பொது கட்டடங்களும் என மொத்தம் 16 பொதுக் கட்டடங்களை புனரமைக்கவே 5.5 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

# மன்னார் சதொச வளாக அகழ்வுப்பணி நேற்று ஆரம்பம்



(மன்னார்)

மன்னார் சதொச வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த மனித எலும்புக்கூடு அகழ்வுப் பணி கடந்த 10 ஆம் திகதி இடை நிறுத்தப்பட்டு நேற்றுக் காலை மீண்டும் அகழ்வுப்பணி ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த வளாகத்தில் சந்தேகத்திற்கு இடமான பல மனித எச்சங்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று 53 ஆவது நாளாகவும் அகழ்வுப்பணி நடைபெற்றது.

தற்போது வரை 72 மனித எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றில் 66 அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த கிழமைகளில் ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் குறித்த வளாகத்தில் புகைப்படம் எடுத்தல், வீடியோ ஆகியவற்றை மேற்கொள்வதற்கு நீதிமன்றினால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கடந்த 10 ஆம் திகதி நீதிமன்றில் மாவட்ட ஊடகவியலாளர்கள் சார்பாக குறிப்பிட்ட அகழ்வுப் பணியை புகைப்படம் எடுத்தல், வீடியோ ஆகியவற்றிற்கு அனுமதி தருமாறு கோரி நகர்த்தல் பிரேரணையொன்று மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து குறித்த அகழ்வுப்பணிகளை வீடியோ புகைப்படம், தகவல் சேகரிப்பு ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதன் பின்னர் கடந்த ஒரு வார காலமாக அகழ்வுப் பணி இடம்பெறவில்லை.

அதனைத் தொடர்ந்து நேற்று மீண்டும் வளாகத்தை அகழ்வு செய்யும் பணியானது விசேட சட்ட வைத்திய நிபுணர் ராஜபக்ஷ, களனி பல்கலைக்கழக தொல் பொருள் பேராசிரியர் ராஜ் சோமதேவ் தாலைமையிலான குழுவினர் இணைந்து முன்னெடுத்தனர்.

இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்களை அப்புறப்படுத்தும் பணிகளே தொடர்ச்சியாக நடை பெற்று வருகின்றது.

அப்புறப்படுத்தும் பணிகளின் போதும் மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் புதிய மனித எச்சங்களும் அடையாளம் காணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (2)

# மூன்று பிள்ளைகளின் தாயைக் காணவில்லை

## கணவன் பொலிஸில் முறைப்பாடு

(மன்னார்)

முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்குப்படையான் சிலாபத்துறை கிராமத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான தனது மனைவி கடந்த 6 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக கணவர் அன்றைய தினம் இரவு சிலாபத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஏ.லூர்து சுறாங்கனி (வயது-33) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே காணாமல் போயுள்ளதாக கணவர் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் கொக்குப்படையான் கிராமத்தில் உள்ள தனது வீட்டில் இருந்து முருங்கன் வைத்தியசாலைக்குச் சென்ற நிலையில் மீண்டும் வீடு திரும்பாத நிலையில் அன்றைய தினம் இரவு 10 மணியளவில் கணவர் சிலாபத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 077 635 3945 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கணவர் அன்ரனி ஜெயராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார். (2)

# விடுதியில் வயோதிபர் சடலமாக மீட்கப்பட்டார்

(குருமன்காடு)

வவுனியா பஜார் வீதியில் அமைந்துள்ள விடுதியொன்றிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று நடைபெற்றது. இச்சம்பவம்தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு பின்புறமாக பஜார் வீதியில் அமைந்துள்ள விடுதியொன்றில் யாழ்ப்பாணம் வேலணை பகுதியை சேர்ந்த 71 வயதுடைய வேலன் கந்தசாமி என்ற வயோதிபரின் சட லத்தை பொலிஸார் மீட்டுள்ளனர். குறித்த நபர் நேற்று அதிகாலையிலேயே விடுதியில் வந்து தங்கியதாகவும் முற்பகல் 10.30 மணியளவில் விடுதி ஊழியர் சென்று பார்த்த போது இறந்த நிலையில் இருப்பதை அவதானித்து விட்டு வவுனியா பொலிஸாருக்கு தகவல் அறிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# துவிச்சக்கரவண்டி வழங்கல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பொன்னகர் வடக்கு கிராம சேவையாளர் பிரிவு பிரதேசத்தில் வசிக்கும் குடும்பத்திற்கு பிரதி விவசாய அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தலைமையிலான சுதந்திரக்கட்சி பிரதேச சபை உறுப்பினர்களான குமாரசாமி தர்மராசா, ஐயம்பிள்ளை அசோக்குமார் ஆகியோரினால் உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.


கிளிநொச்சி மத்திய கல்லூரியில் உயர்தரம் கல்வி கற்கும் மாணவிக்கு அன்பளிப்பாக துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

அத்தியாவசியமான குடிநீர்த்தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் புதிதாக குழாய்க்கிணறு ஒன்றும் அமைத்து வழங்கியுள்ளனர். 2)

# உயிலங்குளம் அணைக்கட்டை

# புனரமைக்க 20 மில்லியன் ரூபா தேவை

## துணுக்காய் பிரதேச செயலாளர் பிரபாகரமூர்த்தி தெரிவிப்பு



(கண்டாவளை)

**முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் உயிலங்குளத்தின் அணைக் கட்டைப் புனரமைப்பதற்கு சுமார் இருபது மில்லியன் ரூபா நிதியும் அணைக்கட்டின் கீழ் சேதமடைந்து காணப்படும் வீதியை அமைப்ப தற்கு 40 மில்லியன் ரூபாவும் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு, துணுக் காய் பிரதேசத்திற்கு உட்பட்ட கோட்டைகட்டியகுளம், தென் னியன்குளம் அம்பலப்பெரு மாள் குளம் ஆகிய பகுதிக ளுக்கான போக்குவரத்து வீதியாகக் காணப்படும் வீதி யின் குறிப்பிட்ட பகுதி உயி லங்குளம் அணைக்கட்டின் மீதான பாதையாகக் காணப் படுகின்றது.

இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் பெய்த மழை காரணமாக உயிலங்குளம் அணைக்கட்டு சேதமடை ந்து அதனூடான போக்குவ ரத்துக்கள் தடைப்பட்ட நிலை யில் இராணுவத்தினரும் பொதுமக்களும் இணைந்து குறித்த பகுதியை புனரமை த்து மக்கள் போக்குவரத் திற்கு ஏற்ற வகையில் தற் காலிகமாக புனரமைத்துள் ளனர்.

இந்நிலையில் குறித்த குளத்தின் அணைக்கட்டு அவசரமாக புனரமைக்க வேண்டிய தேவை காணப்ப டுவதாகவும் அணைக்கட் டைப் புனரமைத்து தரு மாறு இதன் கீழான விவ சாயிகள் கோரியுள்ளதுடன், அணைக்கட்டின் கீழாக காணப்படும் வீதியைப் புன ரமைத்துத் தருமாறும் பிர தேச மக்கள் கோரியுள்ள னர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த துணுக்காய் பிர தேச செயலர் கு.பிரபாகர மூர்த்தி, கடந்த ஏப்ரல் மாதம் பெய்த மழையினால் உயில ங்குளம் அணைக்கட்டு சேத மடைந்துள்ளது.

குறித்த அணைக்கட்டின் கீழ் காணப்படும் வீதி அபி விருத்தி திணைக்களத்திற் குச் சொந்தமான வீதியாகக் காணப்படுகின்றது.

அதனை புனரமைப்பத ற்கு கிட்டத்தட்ட 40 மில்லி யன் ரூபா தேவைப்படுகின் றது.

இதேவேளை அணைக் கட்டை புனரமைப்பதற்கு 20 மில்லியன் ரூபா தேவையா கவுள்ளது என்றும் மதிப் பிடப்பட்டுள்ளது.

இதற்கான நிதியைப் பெற்றுக் கொடுக்கப்படும் சந் தர்ப்பத்தில் இவற்றைப் புனரமைக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள் ளார். (2-315)

# 12 பயனாளிகளுக்கு அன்னாசி உறிஞ்சிகள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத் தின் கண்டாவளை பிரதே சத்தில் அன்னாசிச் செய் கையை மேம்படுத்தும் நோக் கில் 12 பயனாளிகளுக்கு அன்னாசி உறிஞ்சிகள் வழங் கப்பட்டுள்ளன.

கண்டாவளைப் பிரதேச த்தில் பழப்பயிர் செய்கை களை ஊக்குவிக்கும் வகை யில் பல்வேறு செயற்திட்ட ங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி அன்னாசி செய் கையை ஊக்குவிக்கும் வகை யில் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தருமபுரம், பெரியகுளம் ஆகிய பகுதிகளில் 12 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு தலா ஆயிரம் அன்னாசி உறிஞ்சி கள் வழங்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களத் தின் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை மாவட்டத் தின் பல்வேறு பகுதிகளிலும் பல தரப்பட்ட திட்டங்கள் மூலம் பழமரச்செய்கைகளை ஊக்குவிக்கும் வகையில் பழமரக்கன்றுகள் விரியோ கிக்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (2-315)

## நாயாற்றில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத்தினர் உதவி



(பனிக்கன்குளம்)

நாயாற்றில் வாடி எரிக் கப்பட்டு பெறுமதியானவ ற்றை இழந்து பாதிக்கப்ப ட்டுள்ள மீனவர்களுக்கு யாழ்ப்பாணம் வர்த்தக சங்கம் உணவுப் பொருட் களை வழங்கி வைத்துள் ளது.

குறித்த உணவுப் பொரு ட்களை வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிக ரனிடம் யாழ்ப்பாணம் வர்த் தக சங்கத்தினர் வழங்கி யிருந்தனர்.

வர்த்தக சங்கத்தால் வழ ங்கப்பட்ட உணவுப் பொருட் கள் ரவிகரனினால் பாதிக் கப்பட்ட மக்களிடம் நேற்று முன்தினம் கையளிக்கப் பட்டது. (2-281)




## குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகள்

(மன்னார்)

மன்னார்மாவட்டத்தின்கல் விக்கான தனது சேவையை ஆற்றிவருகின்ற துரைய ம்மா அன்பகத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவை முன்னி ட்டு மாந்தை மேற்கு பிரதே சச் செயலாளர் பிரிவுக்குட்ப ட்ட தெரிவு செய்யப்பட்ட கிரா மங்களைச் சேர்ந்த 16 குடும் பங்களுக்கு பெறுமதியான உலருணவுப் பொதிகள் நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை வழங்கி வைக் கப்பட்டுள்ளன.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கள்ளியடி கத்தாளம்பிட்டி கிராமத்தில் தெரிவு செய்யப் பட்ட பயனாளி மாணவர்க ளின் 16 குடும்பங்களுக்கு குறித்த பெறுமதியான உல ருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வில் கள் ளியடி கத்தாளம்பிட்டி கிராம சேவகர் பிரிவில் உள்ள மாதர் சங்க உறுப்பினர்கள் உட்பட தெரிவு செய்யப்பட்ட மாணவ, மாணவிகள், பெற் றோர்கள் கலந்து கொண் டனர். (2)



# தேறாங்கண்டல் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த சிறுபோக நெற்செய்கை யானைகளால் அழிப்பு

# விவசாயிகள் கவலை



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத் தின் தேறாங்கண்டல் குளத் தின் கீழ் மேற்கொள்ளப் பட்டிருந்த சிறுபோக நெற் செய்கையை நேற்று முன்தி னம் இரவு காட்டு யானை கள் அழித்து சேதமாக்கியு ள்ளதாகவும் இதனால் தாங் கள் பாரிய நட்டத்தை எதிர் கொண்டுள்ளதாகவும் விவ சாயிகள் கவலை தெரிவித் துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத் தில் நிலவுகின்ற கடுமை யான வரட்சி காரணமாக கூடுதலான குளங்களின் கீழ் சிறுபோக செய்கைகள் மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுகின்றபோதும், வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட தேறாங்கண்டல் குளத்தின் கீழ் 70 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது.

இவ்வாறு தேறாங்கண் டல் குளத்தின் கீழ் தற்போது மேற்கொள்ளப்பட்டிருந்த சிறுபோக நெற்செய்கையை காட்டு யானைகள் நுழைந்து தினமும் அழித்து நாசம் செய்வதனால் தாங்கள் பாரிய நட்டத்தை எதிர்நோக்கி யுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வரட்சிக்கு மத்தியில் இரு க்கின்ற நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி விதை நெல் ளன எனவும் விவசாயி கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த பிரதேசத்தில் தின மும் இவ்வாறு காட்டு யானையின் தாக்கம் மற்றும் ஏனைய விலங்குகளின் தாக் கம் என்பன தொடர்ந்தும் காணப்படுவதாகவும் சுட் டிக்காட்டியுள்ள விவசாயிகள் யானை வேலிகளை அமை



த்து தருமாறு தொடர்ச்சியா கக் கோரிக்கை விடுத்தும் வருகின்றபோதும். இவ்வாறு யானை வேலிகள் அமைக் கப்படவில்லை என்றும் தெரி வித்துள்ளனர். (2-315)

தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட் டுள்ள இச்சிறுபோக செய் கையை நேற்று முன்தினம் இரவுநுழைந்து காட்டுயானை கள் அழித்து சேதப்படுத்தியு

# தமிழரசுக்கட்சியின் நிர்வாகத் தெரிவு

(குருமன்காடு)

தமிழரசுக் கட்சியின் வவு னியா மாவட்ட கிளைக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழரசுக் கட்சியின் வவு னியா மாவட்ட குழுக் கூட் டம் மாகாண சபை உறுப்பி னர் மருத்துவர் ப.சத்தியலி ங்கம் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது மாவட்ட புதியகிளை அங் கத்தவர்கள் தெரிவுசெய்யப்ப ட்டனர்.

இதன்படி, கட்சியின் வவு னியா மாவட்ட தலைவராக மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் மீண்டும் ஏகமனதாக தெரிவுசெய்யப் பட்டதுடன், மாவட்ட அமைப் பாளராக ந.கருணாநிதியும் செயலாளராக வி.முத்துராசா, பொருளாளராக து.தேவராசா ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர். இதன்போது உப தலைவர், இரண்டு துணைத் தலைவர்கள், மகளிர் அணி, இளைஞர் அணி என 27 பேரை உள்ளடக்கிய புதிய நிர்வாக சபை தெரிவு செய் யப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (2-250)

# போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு

# மகிந்த அரசாங்கம் புகலிடமளித்தது

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் பகிரங்க குற்றச்சாட்டு

**(கொழும்பு)**

**மகிந்த அரசாங்கத்தின் பல முக்கிய உறுப்பினர்கள் போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுக்கு புகலிடமளித்ததோடு நெருக்கமான தொடர்புகளையும் கொண்டிருந்தனர் என சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.**



கடந்த மூன்று வருடகால ஆட்சியின் போது இலங்கையை ஜனநாயகம் நிலவும் சுதந்திர நாடாக நல்லாட்சி அரசாங்கம் மாற்றியுள்ளது எனவும் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் நாட்டில் குற்றச்செயல்களின் அளவை குறைத்துள்ளது என தெரிவித்துள்ள அமைச்சர் கடந்த மூன்று வருட காலப்பகுதியில் பாலியல்வன்முறை மற்றும் கொலைகள் குறைந்துள்ளதை சுட்டிக் காட்டியுள்ளார்.

ராஜபக்ஷ காலத்தில் 600 ஆக காணப்பட்ட கொலைகளை 400ஆக குறைத்துள்ளோம்,சிறுவர் துஷ்பிரயோகம், கொள்ளை போன்ற சம்பவங்களும் குறைவடைந்துள்ளன என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை போதைப் பொருள் ஒழிப்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவுள்ள தாக்வும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் குற்றவாளிகளை பாதுகாக்காது எனவும் தெரிவித்துள்ள அவர் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு எதிர்காலத்தில் கடும் தண்டனைகளை வழங்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களிற்கு புகலிடம் அளித்தது. அவர்களிற்கான பாதுகாப்பை அது வழங்கியது எனவும் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

முன்னைய அரசாங்கத்தின் பல முக்கிய உறுப்பினர்கள் போதைப்பொருள் கடத்தல் கும்பல்களுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்தனர் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் போதைப் பொருட்களை கைப்பற்றிய வேளைகளில் அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தலையிட்டு அவற்றை விடுவித்தனர் என தெரிவித்துள்ள சட்டம் ஒழுங்கு அமைச்சர் தற்போது சட்டம் ஒழுங்கு அமுலாக்கல் பிரிவினர் சுதந்திரமாக செயற்பட முடிகின்றது எனவும் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# திருகோணமலையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்





(திருமலை)

திருகோணமலை - புல்மோட்டை, புடைவைகட்டு பாலத்திற்கு அருகில் நேற்றுக் காலை முதல் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மீனவர்கள் தெரிவிக்கையில்,

சூரை மீன்கள் தற்போது அதிகமாக பிடிபடும் காலப்பகுதியாகும். இதனால் பெரும்பாலான மீனவர்களின் வலைகளில் சூரை மீன்கள் பிடிபடுகின்றன. இந்த நிலையில் நாம்சட்டவிரோத முறைகளை பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபடுவதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பொலிஸார் பெரும்பாலானவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே குறித்த போராட்டத்தை மேற்கொண்டு வருவதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியை மறித்து போராட்டத்தை மேற்கொண்டு வந்த நிலையில், பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைவாக போராட்டம் வீதியோரத்தில் மேற்கொள்ளப்பட்டது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1489

Search for people, places and things


### கீதாஞ்சலி



இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது கிராமத்துப் பெண்களிடம் நம் பாரம்பரியத்தின் மிச்சம்

### கிருஷ்ணஜோதி

குழந்தை அழுகிறதைக்கூட கவனிக்காமல் ஏன்டி சீரியல் பார்த்துக்கிட்டிருக்க...



சும்மா புரியாமல் பேசாதீங்க... குழந்தையும் சீரியல் பார்த்திட்டுத்தான் அழுது கொண்டிருக்கு

### கிருஷ்ணப்பிரியா

தன்னிடம் இருப்பதை மற்றவருக்கும் பகிர்ந்து கொடுக்க நினைக்கும் இந்த ஜீவனின் மனப்பாங்கு சில மனிதர்களுக்கு மட்டும் வருவதில்லை...!



### கவிதா

தெரியாத ஆங்கிலத்தை கூச்சப்பட்டு தெரிஞ்ச மாதிரி பேசுறதுக்கு தாய்மொழி தமிழில் திமிரா பேசிட்டுப் போயிடலாம்




### கவிதாஞ்சலி



மற்றவர்களைக்
காயப்படுத்தும்
புன்னகையை
விட யாரையும்
காயப்படுத்தாத
மௌனம்
சிறந்தது

### கவிப்பிரியா

பாலை வைச்சு பால் கோவா பண்ணலாம்



ஆனா ரசத்தை வைச்சு ரசகுல்லா பண்ண முடியுமா?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஒரு முருகன் நல்லூரில் விரும்பி வந்து உட்கார்ந்து அன்பரினை ஆண்டு நிற்பான்

-கம்பவாரிதி இ.ஜெயராஜ்-



உள்ளூறும் அன்பதனால் உவந்து அன்பர்
உருகிடவே ஓங்காரம் தன்னைவீசி
நல்லூரான் கோவிலதன் மணியின் ஓசை
நாற்றிசையும் பரவிடவே நலியும் துன்பம்
வெல்லாத சூரனையும் விரும்பி ஏற்று
வினைகள் அறச் செய்தவனை அன்பரெல்லாம்
துள்ளாத மனத்தோடு துயர்கள் தீரத்
துணை நிற்பான் என்றேதான் துதித்து நிற்பர்.

நல்லோர்கள் மனம் வாட்டும் நலிவு நீங்க
நாளுந்தான் முருகனடி துவண்டு வாடிப்
பொல்லாத விரதமெலாம் போற்றிக் கந்தன்
பொன்னடிகள் பேணிடுவார் புகழ்ந்து நின்றே
எல்லோரும் வியந்திடவே ஏற்றம் ஏறி
இ தென்ன? என வியக்க காவில் தூங்கி
நல்லார்கள் போற்றிடவே நலிந்து நிற்பர்
நல்லூரான் பெருமையினை நயந்து நிற்பர்.

பொல்லாத சூரனையே வேலை ஏவிப்
புவி வியக்க இரண்டாக்கி சேவலோடு
எல்லாரும் மயங்குகிற மயிலதாக்கி
ஏறித்தன் வாகனமாய் ஏற்றுக்கொண்டோன்.
நல்லார்கள் போற்றிடவே சேவல்தன்னை
நயமுடனே கொடியதனில் ஏற்றி நிற்கும்
வல்லாளன் நல்லூரான் பேரைச் சொல்ல
வருவினைகள் முற்றாக மாயுமம்மா!

வெல்லாது எதிரிகளை வென்று நல்ல
வெற்றிகளை அடையும் வழி எடுத்துச் சொன்ன
நல்லூரான் திருவடியை நாமும் நாளும்
நம்பிக்கை வீழாது தொழுது நின்றால்
பொல்லாத மனத்தோடு எம்மைச் சூழும்
புல்லரெலாம் பகையொழிந்து ஆளாய் நிற்பர்.
கல்லாத தீயரையும் அறிஞராக்கும்
கந்தனவன்பெருமையினை என்னவென்பேன்?

தங்கத்தால் கூரைதனை வேய்ந்து எங்கள்
தனித்த பெரும் அறுமுகனை அதனுள் ஏற்றி
மங்காத புகழோடு இந்த ஆண்டில்
மாண்பு தனைச் செய்திட்டார் மகிழ்ந்து அன்பர்
தங்காதல் முழுவதையும் அள்ளிக்கொட்டி
தனிமுருகன் பேர் சொல்லி உருகிநின்றார்.
எங்கேயும் இவன் போல அழகன் தன்னை
எவரேனும் காண்பீரோ? இதயம் ஈர்த்தான்.

நல்லவர்கள் சூழ்ந்ததனால் ஊரை மெய்ச்சி
நல்லூராம் எனப் பெயருமிட்டார் நல்லோர்
வெல்லுகிற அறத்தோடு தமிழும் சைவ
விழுமியங்கள் அத்தனையும் வளர்ப்பான் கந்தன்
சொல்லுகிற தமிழ்மொழிக்குத் தெய்வமன்றோ!
சொக்குகிற கம்பனவன் தமிழை ஏற்றி
துள்ளுகிற விழவெடுக்க வழியும் செய்தான்
தூயவனாம் கந்தனடி போற்றி நிற்போம்.

நல்லூரான் வேலொளியில் நலங்கள் சேரும்
நயமுறவே கந்தனவன் வெளியில் வந்து
பல்லோரும் அழுதிடவே பவனி செய்வான்
பாரெல்லாம் அவன் ஒளியால் அறங்கள் வாழும்
கல்லாரும் கற்றவரும் ஒன்றாய்க் கூடி
கனிந்துள்ளம் உருகிடவே கந்தன் வந்தால்
பொல்லாத வினைகளெலாம் பொசுங்கிப் போகும்
புவனியெலாம் பேரின்பம் நிறைந்து நிற்கும்.

மஞ்சமதில் ஏறிடுவான் மனதை அள்ளி
மயக்கிடவே தங்கரதம் அதனில் போவான்
அஞ்சிடவே இராவணனை அடக்கும் நல்ல
அற்புதமாம் கைலாச ரதத்தில் ஊர்வான்
மஞ்சதனை முட்டியதோ என்ன எம்மை
மயக்குகிற சப்பறத்தில் காட்சி செய்வான்
கஞ்சமலர் தனை நிகர்த்த மலர்கள் சேர்த்துக்
கட்டியதாம் பூமஞ்சம் அதனில் செல்வான்.

எழு குதிரை வாகனத்தில் எழுந்து நிற்பான்
ஏற்றமுறும் எருதுகளில் இருந்து ஈர்ப்பான்
பழுதறவே வெள்ளியாடதனில் ஏறி
பார்ப்பவர்கள் மயங்கிடவே பவனி செய்வான்
விழுமியதாம் காமதேனதனில் ஊர்வான்
வெற்றியுடன் பூதங்கள் தோளிற் சேர்வான்
அழுதழுது அடியவர்கள் தொழவே ஐயன்
அற்புதமாய் வீதி வலம் வருதல் காண்போம்.

கோபுரத்தின் உயரமதைத் தாண்டி அன்பால்
கும்பிடுவோர் வாழ்வுயர்ந்து உறுதி கொள்ளும்.
தாபிதமாய் அடியவர்க்கு வாழ்வை நல்கி
தம்மகவாய் அவர்தமையே தாங்கி நிற்பான்.
தாபமொடு அவனடியைச் சார்ந்து நின்றோர்
தம்வினைகள் அறுத்தின்பக் கடலில் மூழ்கி
சாபமுறும் வினை தொலைத்து சகத்தை வென்று
சரி நிகராய் அரசரென வாழ்ந்து நிற்பர்.

குறமகளை அடைதற்காய் வேடம் மாற்றி
கொல்லுகிற வேடுவனாய்க் கிழவனாகி
விரகதனால் திரிந்த மகன் விரகே இல்லான்
வேற்றுமையாம் போகமொடு யோகம் என்னும்
நெறிகளையே ஒன்றாக்கி நிற்கும் வேந்தன்
நினைவதனால் தீண்டிடவே முடியா நிற்போன்
ஒருமுருகன் நல்லூரில் விரும்பி வந்து
உட்கார்ந்து அன்பரினை ஆண்டு நிற்பான்.

அறுமுகமும் அன்பர் துயர் தீர்த்து நிற்கும்
ஆறிரண்டு கைகளுமே அருளைச் சேர்க்கும்
இரவதனைப் பகலாக்கும் வேலும் அன்பர்
இடர்களைந்து அவர்தமையே காத்து நிற்கும்
மறவரெலாம் தம் உடலை முருகன் மண்ணில்
மாண்புறவே பிரதிஷ்டை செய்து வேண்ட
திறமுறவே நல்லூரான் வரங்கள் நல்கி
தேற்றமுற அவர்தமையே வாழ வைப்பான்.

மங்களத்து நாண் நிலைக்க வேண்டிப் பெண்கள்
மண்விழுந்து அடியளந்து வலங்கள் செய்வார்
தங்களது இல் மகிழ்வால் நிறைதல் வேண்டி
தவமிருந்து வழிபடுவார் பலரும் அங்கே
அங்கவர்தம் துயர் களைந்து நல்லூர் வேந்தன்
அனைவருக்கும் அருள் புரிய அன்பரெல்லாம்
இங்கிவனே எம் இறைவன் என்று சொல்லி
எப்போதும் அவன் புகழைப் பாடி நிற்பார்.

# நல்லூர் ஆலயச் சூழலில் தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உற்சவத்தையொட்டி இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8.15 மணிவரை தெய்வீக இசையரங்கு நடைபெற்று வருகிறது.

இதில் இன்று வயலின் பத்மநாதன் சியாம கிருஷ்ணா மிருதங்கம்-வ.ரமணா, கடம்-கு.ரவிசங்கர், முகர்சிங்-க.நந்தகுமார், இசைக்கச்சேரி, பாட்டு ஜெகதீஸ்வரன் மதூசிகன், வயலின் கே.வேலதீபன், மிருதங்கம் ஞா.வசந், கெஞ்சிரா எஸ். சண்முகப்பிரியன் ஆகியோர் நிகழ்த்துவர். (இ)




## அற்புதக் கூத்தனாய் தேரேறிவா

வேல் வடிவமாகி வினை தீர்க்க வந்த ஒளியே
பார் உலகோர் போற்றும் பார்வதி மைந்தரே
யார் உனை தொழுதிடினும் வரமருளும் வள்ளலே
நல்லோர் தொழுதிட நல்லூரில் உறைபவனே
ஆனை முகனுடன் அனுதினமும் ஆரோகணிப்பவனே
அருகருகே தேவியருடன் ஆடி ஆடி வருபவனே
முத்துக்குமார சாமியாய், முருக வடிவேலனாய்
சக்தியின் அருள் கொண்ட சரவணபவனாய்
தந்தைக்கு உபதேசம் செய்த குருபரசுவாமியாய்
பழனி ஆண்டவராய் பாராளும் வேந்தனாய்
ஆறுமுகங் கொண்ட அற்புத கூத்தனாய்
ஓடோடி வந்து எமை என்றென்றும் காத்திடுவாய்

அரியாலையூர்
ஏ.வீரசிங்கம்

## செந்தமிழ் தழைக்க

வானோர் துயர் தீர்க்க
வந்துதித்த வடிவேலா
வருமடியார் குறை தீர்த்து
வரமருளும் எழில் வேலா
அகத்தியர் அன்று
அருந்தமிழ் வளர்த்திட
அருள் புரிந்த
சிவகுருநாதா
இன்று சீரழிந்த
எம் தமிழ் நிலை கண்டு
மனம் வருந்தி அழுகின்றோம்
செந்தமிழ் தழைக்க
செந்தில் வேலா நீ
நாளும் துணையிருப்பாய்
நல்லூர்க் கந்தா

க.சிவகுமார்
சுழிபுரம்

## நல்லைக் குமரப் "பா"

ஐயன் நெற்றிக் கண்ணினிலே
அழகாய்த் தோன்றி வந்தவனே
தையலர் கார்த்திகைப் பெண்களிடம்
தவழ்ந்தே கதைகள் தந்தவனே
வையம் காத்து வளம்சேர்க்கும்
வற்றாக் கருணை கொண்டவனே
உய்யும் வழிகள் உருவாக்கி
ஓர்ந்தாள் நல்லைக் குமரப்பா!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்




# பாரதம்

## கர்நாடக மாநிலத்தில் கனமழை! 3500 பேர் வெளியேற்றம்



(பெங்களூர்)

கர்நாடக மாநிலத்தின் குடகு மாவட்டத்தில் பெய்து வரும் கனமழையால் நிலச்சரிவு ஏற்பட்டு 3500 இற்கும் மேற்பட்ட மக்கள் மீட்கப்பட்டு நிவாரண முகாமகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தென் மாநிலங்களில் கடந்த ஜூன் மாதம் முதல் தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள கேரள மாநிலத்தில் 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மழை பெய்திருப்பதால் அந்த மாநிலம் பேரிழிப்பை சந்தித்துள்ளது.

இதேபோல் கர்நாடக மாநிலத்தின் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியிலும் மழை அதிகமாக உள்ளது. குறிப்பாக குடகு மாவட்டத்தில் பெய்து வரும் கனமழையால் பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக 800 இற்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாநில அதிகாரிகளுடன், இராணுவ வீரர்கள் மற்றும் கடற்படையின் நீர்மூழ்கி வீரர்கள் போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (7)

## கேரள கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள 7 இலட்சம் மக்கள் முகாம்களில் தஞ்சம்



கேரளாவில் பெய்த கடும் மழையை தொடர்ந்து வெள்ளம் பெருக்கெடுத்ததினால் ஏற்பட்ட அனர்த்தங்களினால் இதுவரை சுமார் 7 இலட்சத்து 25 ஆயிரம் பேர் 5 ஆயிரத்து 645 நிவாரண முகாம்களில் தஞ்சமடைந்துள்ளதாக மாநில முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி இதுவரை 380 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கேரளாவில் கடந்த எட்டாம் திகதி முதல் பெய்து வரும் கடும் மழையினால் அங்கு பெரும்பாலான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது.

கேரளாவில் கடந்த 8 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிவரை வழமையை விட 250 மடங்கு அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## இத்தாலியில் ... பலி எண்ணி...

இத்தாலியின் வடமேற்கு பகுதியான ஜெனோவா நகரில் பாலம் ஒன்று இடிந்து வீழ்ந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 45 ஆக உயர்ந்துள்ளது. மீட்புப் பணியாளர்கள் இடி பாடுகளிலிருந்து மூன்று சடலங்களை மீட்டுள்ளனர். அவர்கள் மூவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களே பாலம் உடைந்து வீழ்ந்த அனர்த்தத்தில் காணாமல் போன இறுதி நபர்கள் என கருதப்படுகிறது. குறித்த பகுதியில் தீயணைப்புப் படையினர் தொடர் ... ஈடுபட் ... மீ ... வரத்த ... மொர ... உடை ... வாகன ... திலிரு ... யமை ... இர ... தாலிய ... தொடர் ... தத்தை ... நிலை ... உயிரி ... பாதிக் ...

## இந்தோனேஷியாவில் நில... ஐந்து பேர் உடல் நசுங்கி உ...



(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது கட்டடங்கள் இடிந்து விழுந்ததில் 5 பேர் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

பூகம்பங்களை அடிக்கடி சந்திக்கும் பூமியின் நெருப்புக் கோளம் பகுதியில் அமைந்துள்ள நாடுகளில் ஒன்றான இந்தோ... நேஷியாவிலுள்ள லோம்போக் தீவில் சி... வாரங்களுக்கு முன்னர் ஏற்பட்ட நிலநடு...த்தில் சுமார் 460 பேர் பரிதாபமாக உயி...ழந்தனர்.

இந்த பீதியில் இருந்து மீள்வதற்கு... இந்தோனேஷியாவில் நேற்று முன்தின... அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்க... பெரும் அச்சம் அடைந்தனர்.

ஜகார்த்தாவில் இருந்து சுமார் 150... கிலோமீற்றர் தூரத்தில் உள்ள தீவின் கிழக்... பகுதியில் நேற்று முன்தினம் காலை பயங்... நிலநடுக்கம் ஏற்பட்டது.

பெலண்டிங் நகரில் இருந்து தென்மேற்... சுமார் 7 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்ப...

## கேரள மக்களுக்கு டுவிட்டரில் ஆறுதல் கூறிய ஜனாதிபதி



(டில்லி)

கனமழையினால் பாதிக்கப்பட்டுள்ள கேரளாவிற்கு நாடே ஒன்றிணைந்து துணை நிற்கும் என ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே மேற்படி தெரிவித்துள்ளார். அத்துடன் வெள்ள நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து பணியாற்றுவது திருப்தியளிப்பதாகக் கூறிய அவர், மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருபவர்களுக்கு தனது நன்றியையும் டுவிட்டர் பதிவின் மூலம் தெரிவித்துள்ளார்.

கடந்த நூறு ஆண்டுகளுக்கு இல்லாத அளவிற்கு கேரளாவில் கடும் மழை பெய்து வருகிறது. இந்நிலையில், கேரளாவின் தற்போதைய நிலை தொடர்பில் அம்மாநில ஆளுநர் சதாசிவம் மற்றும் முதலமைச்சர் பினராஜி விஜயன் ஆகியோருடன் கேட்டறிந்த பின்னர், ஜனாதிபதி மேற்படி தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் வெளிநாடுகள், தனியார் நிறுவனங்கள், அமைப்புக்கள் என பல்வேறு தரப்பினரும் தம்மால் இயன்ற வெள்ள நிவாரணங்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## கேரள மக்களுக்கு ... சமூகம் துணைநிற்க ...

(வாடிகன்சிட்டி)


வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ள கேரள மக்களுக்கு சர்வதேச சமுதாயம் துணையாக நின்று தேவையான உதவிகளை வழங்க வேண்டும் என போப் பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார்.

கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது. கனமழை மற்றும் நிலச்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களால் கேரளாவில் உயிரிழக்கும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

வரலாறு காணாத மிகப் பெரும் இயற்கை பேரழிவை கேரளா சந்தித்துள்ளது. மழையின் பாதிப்பால் இது வரை 380 பேர் உயிரிழந்துள்ளனர்.

இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்டுள்ள பெரும் பேரழிவில் இருந்து கேரளாவை மீட்டெடுக்க பல்வேறு மாநிலங்களும் கேரள

போப் பிரான்சிஸ்



மாநிலத்துக்கு உதவிக்கரம் நீட்டி வருகின்றன.

இந்நிலையில், வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ள கேரள மக்களுக்கு சர்வதேச சமுதாயம் துணையாக நின்று தேவையான உதவிகளை வழங்க வேண்டும் என போப் பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், கனமழை காரணமாக கேரள மாநிலம் கடுமையான

## நாடு திரும்பிய விஜயகாந்த் கருணாநிதி சமாதியில்



(சென்னை)

அமெரிக்காவிலிருந்து சிகிச்சையை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கருணாநிதியின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அண்ணா சதுக்கத்திலுள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதியின் நினைவிடத்திற்கு, நேற்று திங்கட்கிழமை அதிகாலையில் மனைவியுடன் சென்ற விஜயகாந்த் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கடந்த ஜூலை மாதம் முதல் அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்ததால், அவரால் கலைஞரின் இறுதிச்சடங்கில் பங்கேற்க முடியவில்லை.

எனினும் தனது முதற்கட்ட சிகிச்சையை முடித்துக் கொண்டு நேற்று காலையில் நாடு திரும்பிய விஜயகாந்த் முதலில் கலைஞரின் நினைவிடத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்.

இந்நிலையில் மீண்டும் அவர் சிகிச்சைக்காக அமெரிக்கா செல்லவுள்ளார் என தே.மு.தி.க. சார்பில் டுவிட்டர் பக்கத்தில் தகவல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# வெளிநாடு

## ...பில் பாலம் உடைந்து விபத்து ...ணிக்கை 45 ஆக உயர்வு!

தொடர்ந்தும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மிக நெரிசலான போக்கு வரத்துப் பாதையாக இருந்த மொரன்டி பாலத்தின் ஒரு பகுதி உடைந்து வீழ்ந்த விபத்தில் பல வாகனங்கள் 45 மீற்றர் உயரத் திலிருந்து வீழ்ந்து நொருங்கி யமை குறிப்பிடத்தக்கது.

இந்த அசம்பாவிதம் இத் தாலியின் கட்டுமானத்துறை தொடர்பாக கடுமையான விவா தத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், விபத்தின் போது உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும் பத்திற்கு பாலத்தின் நிர்மாண த்தை மேற்கொண்ட நிறுவனம் நட்டஈட்டை வழங்க ஏற்பாடு செய்துள்ளது. அதேவேளை, அனர்த்தம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக அரசாங்கம் விசேட ஆணைக்குழுவொன் றையும் ஸ்தாபித்துள்ளது. (7)



## ...லநடுக்கம் ... உயிரிழப்பு

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.3 அலகு களாக பதிவானது.

அதன்பின்னர் லோம் பாக் தீவில் நேற்று முன் தினம் மாலை 6.9 ரிக்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் ஏராளமான கட்டடங் கள் இடிந்து விழுந்துள்ளன. கடல் சீற்றத்துடன் காண ப்பட்டது. ஆனாலும் சுனாமி எச்சரிக்கை விடப்பட வில்லை.

இந்த நிலநடுக்கத்தின் போது கட்டடங்கள் இடிந்து விழுந்ததில் லோம்போக் தீவில் 2 பேரும், அருகில் உள்ள சாம்பவா தீவில் 3 பேரும் என மொத்தம் 5 பேர் பலியாகி உள்ளனர். பலர் காயமடைந்து வைத்தி யசாலையில் சேர்க்கப்பட் டுள்ளனர். (7)

...ன இந்தோ ... தீவில் சில ... நிலநடுக்க ...மாக உயிரி ...

...வதற்குள், ...முன்தினம் ...தால் மக்கள் ...

...மார் 1500 ...வின் கிழக்கு ...லை பயங்கர ...

...தன்மேற்கே ...ில் ஏற்பட்ட ...

## புகலிடக்கோரிக்கையாளர்கள் புறக்கணிப்பு! நள்ளிரவில் நாட்டைவிட்டு வெளியேற்றம்

(வெனிசுவெலா)

தேசிய அடையாள அட் டையற்ற வெனிசுவெலா புகலிடக் கோரிக்கையாளர் கள், ஈகுவடோர் எல்லைப் பகுதியிலிருந்து மீண்டும் தமது நாட்டிற்கு கால்நடை யாக திரும்பி வருகின்றனர்.

ஈகுவடோர் நாடுகளிலில் ஆளடையாள ஆவணங்க ளின்றி எல்லைக்குள் நுழை யும் வெனிசுவெலா புகலிடக் கோரிக்கையாளர்களை அனுமதிப்பதில்லையென்ற தீர்மானத்திற்கு வந்ததற்குப் பின்னர் வெனிசுவெலாவி லிருந்து புகலிடம்கோரிச் சென்ற அடையாள அட்டை களற்ற மக்கள் நள்ளிரவு வேளையில் திருப்பி அனுப் பப்பட்டுள்ளனர்.



கடந்த சில வருடங்க ளாக வெனிசுவெலாவில் நிலவிவரும் பொருளாதார நெருக்கடி, அரசியல் குழப் பங்கள் ஆகிய காரணங் களால் கொலம்பியா, ஈகு வடோர், பெரு, பிரேசில் ஆகிய நாடுகளுக்கு வெனிசு வெலா மக்கள் புகலிடம் கோரி சட்டவிரோதமாக இடம்பெயர்ந்து வருகின் றனர்.

இதுவரை ஒரு மில்லிய னுக்கும் அதிகமான வெனி சுவெலா புகலிடக் கோரிக் கையாளர்கள் இடம்பெயர்ந் துள்ளமையினால் அண் மையில் ஈக்குவடோரும் பெருவும் ஆளடையாள அட் டையின்றி புகலிடக் கோரிக் கையாளர்களை அனுமதிப் பதில்லை என்ற கொள்கை யினை முன்னெடுத்துள்ளன.

இதனைத் தொடர்ந்து பாரியளவு வெனிசுவெலா புக லிடக்கோரிக்கையாளர்கள் கவலையுடன் மீண்டும் தாய் நாட்டுக்கே செல்லும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. (7)

## ...கு சர்வதேச ...க வேண்டும்

### ...சிஸ் வலியுறுத்து




...ட்டி ...ல் ...ளு ...ாக ...ள ...ன் ...ந்து ...ண ...ன

பாதிப்புக்குள்ளானது. வெள்ளத்தாலும் நிலச்சரிவாலும் பொதுமக்கள் பலர் உயிரிழந்துள்ளனர்.

எனவே, கேரளா மாநிலத்தில் வெள்ளப் பாதிப்பில் அகப்பட்டுள்ள சகோதர, சகோதரிகளுக்கு சர்வதேச சமுதாயம் உறுதுணையாக நிற்க வேண்டும். அங்கு தேவைப்படும் அனைத்து உதவிகளையும் விரை ந்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண் டும் என வலியுறுத்தியுள்ளார். (7)

## வெனிசுவெலா அகதிகளைப் பாதுகாக்க பிரேசில் தனது படைகளை அனுப்பியது!

பிரேசில் எல்லை நகர மான பகரைமாவிற்கு தனது படைகளையும் மேலதிக பொலிஸாரையும் அனுப்பி யுள்ளது. வெனிசுவெலா அகதிகள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்கு கூடுதல் பாதுகாப்பு போடப் பட்டுள்ளது.



அரச அதிபர் மைக்கல் டெமர் நேற்று அவசர கூட் டம் ஒன்றை நடத்தியதுடன், வெனிசுவெலா நெருக்கடி யைத் தொடர்ந்து பிராந்தி யத்தில் அதிகரித்துள்ள அழுத்தங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார். அரசியல் மற்றும் பொரு ளாதார ஸ்திரமற்ற தன்மை காரணமாக பலர் அங்கிரு ந்து வெளியேறி பெரு மற் றும் சிலி நோக்கிப் பய ணிக்கின்றனர்.

வெனிசுவெலா நாட்டைச் சேர்ந்த உள்ளூர் உண வக உரிமையாளர் தாக்கப் பட்டதை தொடர்ந்து, இந்த வன்முறை சம்பவமானது நிகழ்ந்ததாக தெரிவிக்கப் படுகிறது. தங்கள் நாட்டவ ருக்கு உரிய பாதுகாப்பு வழ ங்க வேண்டுமென வெனி சுவெலா கோரியுள்ளது. ஈக்குவடோரில், வெனிசு வெலா மக்கள்புதிய நுழைவு தடைகளையும் மீறி எல்லை தாண்டுவதாக அறிவிக்கப் பட்டது. (7)

## கிராமத்தைச் சுற்றி வளைத்து பயங்கரவாதிகள் தாக்குதல்

### 20 பேர் உயிரிழப்பு

(நைஜர்)

நைஜீரியா நாட்டிலுள்ள கிராமம் ஒன்றை பயங்கர வாதிகள் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தியதில் 20 பேர் பரிதாபமாக பலியாகி யுள்ளதாக தகவல் வெளி யாகியுள்ளது.

கிறிஸ்தவர்களும் முஸ் லிம்களும் சம அளவில் வாழ்ந்து வரும் நைஜீரியா நாட்டில் இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சியை கொண்டு வர வேண்டும் என்று போகோ ஹராம் அமைப்பை சேர்ந்த பயங்கரவாதிகள் ஆயுதமே ந்திய போராட்டத்தில் ஈடு பட்டு வருகின்றனர்.



கிறிஸ்தவர்கள் பெரும் பான்மையாக வாழும் கிரா மங்களுக்குள் கும்பலாக நுழையும் இவர்கள், அங் குள்ள மக்களை ஈவிரக்க மின்றி சுட்டுக் கொன்று குவிக்கின்றனர். போகோ ஹராம் அமைப்பை தவிர ஐ.எஸ்.பயங்கரவாத அமைப் பும் அங்கு தாக்குதல் சம்ப வங்களை நிகழ்த்தி வருகி றது.

இந்நிலையில், வட கிழ க்கு நைஜீரியாவின் காசா முல்லா மாகாணத்தில் கிறிஸ் தவர்கள் கணிசமாக வசிக் கும் மைலாரி எனும் கிராம த்தை சூழ்ந்து அதிகாலை நேரத்தில் பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில், அப்பாவி பொதுமக் கள் 20 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும், படுகாயம் அடை ந்த பலர் சிகிச்சைக்காக அருகே உள்ள முகாம்க ளில் அனுமதிக்கப்பட்டுள் ளனர். (7)

## பிரதமர் இல்லத்தில் நான் தங்கமாட்டேன்

### இம்ரான் மறுப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமராக பதவி ஏற்றுள்ள இம்ரான் கான் சிக்கன நடவடிக்கை யாக பிரதமர் இல்லத்தில் தங்கப் போவதில்லை என அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமராக பதவி ஏற்ற இம்ரான் கான் நேற்று முன்தினம் தொலைக் காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அப்போது அவர் உரையாற்றியதாவது.


"பிரதமர் இல்லத்தில் ஆளுநர் மாளிகைகள் உள் ளன. அங்கு ஆடம்பரங்கள் தலைவிரித்தாடுகின்றன. நமது மக்களுக்கான நலத் திட்டங்களுக்கு செலவிட பணம் இல்லை. அதேநேரத் தில் நம்மை ஆள்பவர்கள் வாழ்வதற்காக பணம் செல வழிக்கப்படுகிறது.

இத்தகைய நிலை இருந் தால் மக்கள் எப்படி வாழ முடியும். பிரதமர்களின் வெளிநாட்டு சுற்றுப் பயண த்துக்கு ரூ.65 கோடி செல விடப்பட்டுள்ளது. சபாநாயக ரின் செலவுக்கு மட்டும் பட்ஜெட்டில் ரூ.16 கோடி ஒது க்கப்பட்டுள்ளது. இத்தகைய செலவினங்களை குறைக்க திட்டம் தீட்டப்படும்.

நான் பிரதமர் இல்லத் தில் தங்கப் போவதில்லை. இஸ்லாமாபாத்தில் 3 படுக்கை அறை கொண்ட இராணுவ செயலாளர் வீட்டில் தங்க இருக்கிறேன். பான்சுலா வில் உள்ள எனது வீட்டில் தான் தங்க நினைத்தேன். ஆனால் எனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக பாதுகா ப்புத்துறை தெரிவிக்கிறது.

எனவே இங்கு தங்க வேண்டிய நிலை உள்ளது. பிரதமர் இல்லத்தில் பணி யில் இருக்கும் ஊழியர் களை மட்டுமே என்னுடன் வைத்துக்கொள்ளப் போகி றேன். 2 கார்களை மட்டுமே பயன்படுத்துவேன் என மேலும் தெரிவித்தார். (7)

# பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுடன் பிரதமர் ரணில் தொலைபேசியில் பேச்சு




(கொழும்பு)

பாகிஸ்தான் பிரதமராகப் பதவியேற்றுள்ள இம்ரான் கானுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

நேற்று முன்தினம் தொலைபேசி மூலம், தொடர்பு கொண்ட பிரதமர், பாகிஸ்தான் பிரதமராகப் பதவியேற்றுள்ளமைக்கு இம்ரான் கானுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இந்தத் தொலைபேசி உரையாடலின் போது, இரு தரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும், பரஸ்பர நலன்கள் சார்ந்த விடயங்களில் இரு நாடுகளும் இணைந்து பணியாற்றுவது அவசியம் என்றும் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

தமக்கு வாழ்த்துத் தெரிவித்த பிரதமருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்ட பாகிஸ்தான் பிரதமர், இரண்டு நாடுகளும் பலமான, நட்புறவைக் கொண்டுள்ளன என்றும் அரசியல், பொருளாதார, பாதுகாப்பு மற்றும் சுற்றுலா உட்பட அனைத்துத் துறைகளிலும் இருதரப்பு உறவுகளை வளர்த்துக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது என்றும் தெரிவித்தார்.



இலங்கையினதும் அதன் மக்களினதும் தொடர் முன்னேற்றங்களுக்கும் இம்ரான்கான் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பாகிஸ்தான் பிரதமராகப் பதவியேற்ற இம்ரான் கானுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் தமது டுவிட்டர் பக்கத்தில் இம்ரான் கானுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். (இ-7)

# மகிந்த அரசாங்கத்தைப் போன்று கொடுங்கோலாட்சி புரியவில்லை

## சு.க.அமைச்சர் துமிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக ரீதியில் தோன்றிய தேசிய அரசாங்கத்தை ஒருபோதும் போராட்டங்களின் ஊடாக வீழ்த்த முடியாது. மகிந்த அரசாங்கத்தைப் போன்று தேசிய அரசாங்கம் கொடுங்கோலாட்சி புரியவில்லை எனக் குறிப்பிட்ட சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க,

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி தேசிய அரசாங்கத்தை வீழ்த்தும் பகல் கனவுடன் பொது எதிரணியினர் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் மகிந்த தரப்பினர் போராட்டங்களை மாத்திரமே முன்னெடுத்துள்ளனர். ஆனால் அதில் எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை.

2015 ஆம் ஆண்டு தேசிய அரசாங்கம் சூழ்ச்சிகளை மேற்கொண்டு உருவாக்கப்படவில்லை. மக்களின் அமோக ஆதரவுடனே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இவ்வெற்றியை தொடர்ந்து இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும் ஜனநாயகம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை தேசிய அரசாங்கம் நல்லாட்சி என்ற



பெயரில் சிறப்பாகவே செயற்படுகின்றது.

அரசாங்கம் என்ற ரீதியில் செயற்படும் போது சில குறைபாடுகள் காணப்படுவது இயல்பு. கடந்த அரசாங்கத்தினைப் போன்று குறைபாடுகள் உள்ள அரசாங்கமாக தேசிய அரசாங்கம் காணப்படவில்லை. எமது ஆட்சியில் இடம்பெற்ற மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியை கொண்டு எதிர்த்தரப்பினர் ஊழல் மிகுந்த அரசாங்கம் என்று குற்றம் சுமத்துகின்றனர்.

மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடிகளை அரசாங்கம் மூடி மறைக்கவில்லை சுயாதீனமாக விசாரணைகள் அமைத்து விசாரணைகளை மேற்கொண்டது. குறித்த குற்றத்துடன் தொடர்புடையவர்கள் இன்றும் சிறைவாசம் அனுபவித்து வருகின்றார்கள். வெகுவிரைவில் முக்கிய குற்றவாளி சட்டத்தின் முன்னிலைப்படுத்தப்படுவார்.

கடந்த அரசாங்கத்தில் இதுபோன்ற சுயாதீனமாக செயற்படக்கூடிய எந்த அமைப்புக்களும் காணப்படவில்லை. நீதித்துறையின் சுயாதீனம் கூட மழுங்கடிக்கப்பட்டது. சட்டவாட்சி கோட்பாட்டிற்கு எதிராக முன்னாள் பிரதம நீதியரசர் சிறியானி பண்டாரநாயக்கவை பதவி நீக்கம் செய்தார்கள், பல ஊழல் மோசடிகள் அரசாங்கத்தின் ஆதரவுடனே இடம் பெற்றன.

இன்று எம்மை விமர்சிக்கும் எதிர்த்தரப்பில் இருக்கும் சிலர் கடந்த காலங்களில் தேசிய நிதியினை தன் குடும்பத் தேவைக்காக பயன்படுத்தியதை மறந்து கருத்துக்களை குறிப்பிடுகின்றனர்.

ஒருசில குற்றங்களை கொண்டு அரசாங்கத்தை முழுமையாக குற்றஞ்சாட்ட முடியாது. கடந்த அரசாங்கத்தைவிட தேசிய அரசாங்கம் சிறப்பானது என்ற விடயத்தை சர்வதேசமே ஏற்றுக் கொண்டுள்ளது. ஒரு அரசாங்கம் நல்லாட்சி என்ற நாமத்தினைப்பெற பாரிய அரசியல் பின்புலம் காணப்பட வேண்டும். 10 வருட காலம் சிறந்த ஆட்சியினை மேற்கொண்டதாக குறிப்பிடும் மகிந்தவால் இதனைப் பெற முடியவில்லை. மூன்று வருட ஆட்சியில் நாங்கள் பெற்றுக் கொண்டோம்.

கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு மக்கள் எம் பக்கம் என்று பொது எதிரணியினர் மார்தட்டிக் கொள்கின்றார்கள். அரசாங்கத்திற்கு இணையாகவே உள்ளூராட்சிமன்றப் பெறுபேறுகள் எதிர்த்தரப்பினருக்கு கிடைக்கப் பெற்றது. கிடைக்கப் பெற்ற வெற்றியைக் கொண்டு எவ்வாறு செயற்பட வேண்டும் என்று தெரியாமலே பொது எதிரணியினர் காணப்படுகின்றனர்.

ஆகவே செப்டெம்பர் மாதம் இடம்பெறவுள்ளதாக குறிப்பிடப்படும் எமக்கு எதிரணிப் போராட்டம் ஒன்றும் பெரும் சவாலல்ல. வெகுவிரைவில் எதிரணியின் பேச்சுக்கள் அனைத்தும் முடக்கப்படும். அரசாங்கத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டிற்குப் பின்னரும் தேசிய அரசாங்கம் ஜனநாயக ரீதியில் செயற்படுவதற்கான கொள்கைத் திட்டங்கள் மக்கள் மத்தியில் செயற்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிற்றுண்டிச்சாலைக்குள் புகுந்து தாக்குதல்; முக்கிய சூத்திரதாரி உட்பட மூவர் கைது

(புத்தளம்)

புத்தளம், ஆனமடுவ பகுதியில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலைக்குள் புகுந்து தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் முக்கிய சூத்திரதாரி உட்பட மூவரை நேற்று அதிகாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை புத்தளம் ஆனமடுவ ஆண்டிகம பகுதியில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலைக்குள் புகுந்த கொள்ளைக் கும்பல் அங்கிருந்தவர்களை தாக்கிவிட்டு சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பிலேயே நேற்று அதிகாலை பிரதான சூத்திரதாரி உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதானவர்கள் ஆண்டிகம பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் சிலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியிலுள்ள அரசியல்வாதியின் ஆதரவாளர்களே தன்னைத் தாக்கியுள்ளதாக தாக்குதலுக்குள்ளான குறித்த சிற்றுண்டிச்சாலையின் உரிமையாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## வழி நடத்துபவர்களுக்கான தகுதிகள்

எனக்கு தெரிந்த குடும்பம் ஒன்றில் அப்பா பாவம், தொழிலில் தோல்வியுற்று வயதும் ஆகி ஓய்ந்து போனார்.

மகன் சம்பாதிக்க ஆரம்பித்ததும் அவனை எதிர்பார்க்க வேண்டிய நிலைமை இவருக்கு. பல் பிடுங்கிய பாம்பாய், பெருங்காய டப்பாவாய் ஆகிவிட்டார். ஆனால் மகனின் அட்டாகாசம் தாங்க முடியவில்லை. அப்பாவை ஏசுவதும் வேலை வாங்குவதும் பலர் முன்னிலையில் அவமானப்படுத்துவதும், பாவம் அந்த மனிதர்! வாயை மூடிக்கொண்டு சிவனே என இருந்தார்.

தந்தையைக் காப்பாற்றியும் மகனுக்கு நல்ல பெயர் இல்லை. காரணம் சோறு போடுவது மட்டுமே வைத்துக் காப்பாற்றுவதாகிவிடாது. மரியாதையும் தரப்பட வேண்டும். தகுதியில்லாத பலபேர் தலைமைக்கு வந்துவிடுகிறார்கள். ஒருவர் வான் பிடித்துப் பலரையும் உல்லாசப் பயணமாகக் கூட்டிச் சென்றார். திரும்பியதும் அவருக்கு ஒரே திட்டு. சாப்பிட வைத்த ஹோட்டல் சரியில்லை. முக்கியமான இடங்களைப் பார்க்கவிடவில்லை தூங்கவிடவில்லை. வீண் செலவு அதிகம் என்றெல்லாம் விதவிதமான புகார்கள்.

எங்கே கோளாறு? எவரையும் கலக்காமல் மற்றவர்களைப் பேச அனுமதிக்காமல் இவராகத் தன்னிச்சையாகச் செயற்பட்டதுதான் காரணம்.

மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத தன்மை சேவை மனமும் தியாக உள்ளமும் இல்லாமை; தட்டிக் கொடுக்காத தன்மை; தேவையற்ற கண்டிப்புணர்வு; அநாவசியக் கோபம்; அளவு கடந்த சிக்கனம் ஆகிய குறைகளை உடையவர்கள் வழிநடத்தும் தகுதி இல்லாதவர்கள்.

விமர்சனங்களைச் சகித்துக்கொள்ளத் தெரியாதவர்களும் அளவுக்கதிகமான பாராட்டை மட்டும் எதிர்பார்க்கிறவர்களும் தலைமைப் பீடத்தை அலங்கரிக்கு முன் யோசிக்க வேண்டும்.

இந்தத் தகுதிகள் இல்லாதவர்கள் வழிநடத்துகிறோம் பேர்வழி என்று இருக்கிற கொஞ்சநஞ்ச நற்பெயரையும் கெடுத்துக் கொள்ளாமல் ஒதுங்கியிருப்பதே! நல்லது!


லேனா தமிழ்வாணன்

# நல்லிணக்கம் என்ற பெயரில் பௌத்தம் அழிக்கப்படுகிறது

## ஜனாதிபதி, பிரதமர் முன்னிலையில் தேரர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நல்லிணக்கம் என்ற பெயரில் அரசாங்கத்தை வைத்துக் கொண்டு பௌத்த மதத்தை அழிப்பதற்கு ஒரு சிலர் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். ஆகவே நாட்டில் பௌத்த தர்மத்தை பாதுகாக்க அரசாங்கம் முன்னின்று செயற்பட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் தலைவர் ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்தியுள்ளார்.



புத்தர் சிலை வைப்பதற்கு வடக்கில் இடமில்லை. கிழக்கிலும் பிரச்சினை உள்ளது. ஆனால் தற்போது மேல் மாகாணத்திலும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதுவரை காலமும் கொழும்பு மாநகர சபையில் இருந்த புத்தர் சிலையை தற்போதைய முதல்வர் அகற்றியுள்ளதாகவும் ஓமல்பே சோபித தேரர் குற்றம் சுமத்தினார்.

இலங்கையின் அரசியலமைப்பில் 9 ஆவது சரத்தில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குவதுடன் பாதுகாப்போம் எனக் கூறப்பட்டுள்ளது. எனினும் இந்த சரத்தில் எமக்கு தெளிவில்லாத நிலைமை உள்ளது. இந்த விடயம் தொடர்பாக அப்போதே முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவிடம் பிக்குகளினால் வினவப்பட்டது. எனினும் அதற்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை.

அரசியலமைப்பின் 9 ஆவது ஷரத்தின் நோக்கம் விகாரைகளை புனரமைப்பதும் அறநெறி பாடசாலைக்ளை நிர்மாணிப்பதுடன் மாத்திரம் மட்டுப்படுமா? அல்லது பௌத்த கொள்கை பாதுகாப்பட்டு தொடர்ந்து வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்லப்படுமா? என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது. இந்த கேள்விக்கு இன்னும் கூட பதிலில்லை.

தற்போது நாட்டில் 9176 விகாரைகள் உள்ளன. எனினும் 23 ஆயிரத்துக்கும் அதிகமான மதுபான வியாபார நிலையங்கள் உள்ளன. இதுவே எமது நாட்டின் நிலைமையாக உள்ளது.

பௌத்த கொள்கையை நாம் பாதுகாக்க வேண்டும். விகாரைகளை பாதுகாக்க வேண்டும். அப்படியாயின் அரசாங்கமும் மகாசங்கத்தினருமே இது தொடர்பில் அவதானம்செலுத்தவேண்டும்.

பௌத்த மத கொள்கைக்கு எதிராக செயற்படுவோரை தடுப்பதற்கான எந்தவொரு தீர்வும் இன்னும் முன்வைக்கப்படவில்லை. இந்த நாட்டில் பௌத்தர்கள் அப்பாவிகளாக மாறிவிட்டனர்.

தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாடு தொடர்பான செயலணிமூலம்தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காக நாடகங்கள் உருவாக்கப்பட்டு இலங்கை ஒலிபரப்பு கூட்டுதாபனத்தின் மூலம் ஒலிபரப்பியுள்ளனர். இந்த நாடகத்தின் பெயர் முழுமையாக பௌத்த மதத்தினை இழிவுபடுத்தக் கூடியதாக அமைந்துள்ளது. தெறுவன் சரணய் என்பதற்கு தருவன் சரணய் என்று பெயரிட்டுள்ளனர். இதுபோன்று நாடகங்களின் பெயர்களில் அர்த்தங்கள் மாற்றப்பட்டுள்ளன. எனினும் இதனை அரசாங்கத்தின் அவதானத்திற்கு கொண்டு வந்த பின்னர் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலையிட்டு அந்த நாடக அரகேற்றத்தை தடை செய்தார்.

எனவே நல்லிணக்கம் என்ற பெயரில் அரசாங்கத்தை வைத்துக் கொண்டு பௌத்த மதத்தை அழிப்பதற்கு முயற்சித்து செய்து வருகின்றனர். புத்தர் சிலை வைப்பதற்கு வடக்கில் இடம் இல்லை. கிழக்கிலும் பிரச்சினை உள்ளது. ஆனால் தற்போது மேல் மாகாணத்திலும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதுவரை காலம் கொழும்பு மாநகர சபையில் இருந்த புத்தர் சிலையை தற்போதைய மேயர் அகற்றியுள்ளதாக தெரியவருகின்றது. கொழும்பு மேயராக அந்நிய மதத்தவர்கள் பலர் இருந்துள்ளனர். எனினும் எவரும் புத்த சிலையை நீக்கவில்லை.

பௌத்த மதத்தை பின்பற்றாவிடின் பிரச்சினை இல்லை. ஆனால் பௌத்த தர்மத்தை அழிக்கும் நோக்கில் செயற்பட வேண்டாம். தற்போதைய கொழும்பு மேயருக்கு பௌத்த மதத்தின் மீது விருப்பம் இல்லை என்றே எனக்கு தோன்றுகின்றது. எனவே பௌத்த தர்மத்திற்கு எதிராக செயற்படுவோர் விடயத்திலும் பௌத்த கொள்கைகளை பாதுகாக்கும் விடயத்தில் அரசாங்கம் விசேட அவதானம் செலுத்த வேண்டும்.

மேலும் நாடுபூராகவும் தற்போது ரியூசன் மாபியா ஒன்று உள்ளது. இதன் விபரீதம் அதிகமாக உள்ளது. அறநெறி பாடசாலை நடவடிக்கைகளுக்கு ரியூசன் பெரும் தடையாக உள்ளது. இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

வஜிரராம அறநெறி பாடசாலையின் நூற்றாண்டு விழா நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டுமண்டபத்தில்இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டிருந்தனர்.

அத்துடன் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நவீன தொழில்நுட்ப யுகத்திலும் பௌத்த தர்மத்தைப் பாதுகாத்து முன்கொண்டு செல்வோம்-பிரதமர்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையில் இருந்த புத்தர் சிலையை முதல்வர் ரோஸி சேனாநாயக்க நீக்கவில்லை. ஓமல் பே சோபித தேரரின் கருத்து தொடர்பில் உடன் முதல்வருக்கு தொலைபேசி மூலம் அழைத்து விசாரித்தேன். புத்தர் சிலையை நீக்கவில்லை என்றே கூறினார்.

ளித்தார்.

அத்துடன் பௌத்த அறநெறியை தனியார் வகுப்புகளின் மூலமோ பாடசாலை பாடவிதானங்களின் மூலமோ பூரணமாக கற்க முடியாது. ஆகவே தனியார் வகுப்பு தொடர்பில் நாம் அவதானம் செலுத்துவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

வஜிரராம தேரர் பௌத்த

யாது. அதுமாத்திரமின்றி தற்போது தனியார் வகுப்புகளில் பௌத்த மதம் கற்பிக்கப்படுகின்றது. பௌத்த மதத்தை அறிநெறி பாடசாலைகளின் ஊடாகவே முழுமையாக கற்க முடியும் என்பதே எனது கருத்தாகும். ஆகவே தனியார் வகுப்பு தொடர்பில் நாம் அவதானம் செலுத்துவோம்.

உலகம் கைத்தொழில் புரட்சி போன்றவற்றினால் மாற்றம் கண்ட போது வஜிரராம தேரர் போன்றோர் பௌத்த மதத்தை வளர்த்தனர். ஆகவே அதுபோலவே நவீன தொழில்நுட்ப யுகத்திற்கு ஏற்ற வகையில் நாமும் மாற்றம் காண வேண்டும்.

அத்துடன் கொழும்பு மாநகர சபையில் இருந்த புத்தர் சிலையை முதல்வர் ரோஸி சேனாநாயக்க நீக்கியதாக ஓமல்பே சோபித தேரர் இந்த மேடையில் குற்றம் சுமத்தினார்.

எனினும் இது தொடர்பாக உடன் ரோஸி சேனாநாயக்கவுக்கு நவீன தொழில்நுட்ப உபகரணமான தொலைபேசி மூலம் அழைத்து விசாரித்தேன். இதன்போது அவர் புத்தர் சிலையை நீக்கவில்லை என்றும் அந்த இடத்திலேயே அது உள்ளதாக கூறினார். பேஸ்புக் மூலம் புத்தர் சிலை இருப்பதாக உறுதிப்படுத்தி புகைப்படத்தையும் தனக்கு அனுப்பி வைத்தார். ஆகவே பௌத்த மதத்தை பலவீனப்படுத்த நாம் முனைய மாட்டோம். நவீன தொழில்நுட்ப யுகத்திலும் பௌத்த தர்மத்தை பாதுகாத்து முன்கொண்டு செல்வோம் என்றார்.

வஜிரராம அறநெறி பாடசாலையின் நூற்றாண்டு விழா நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டுமண்டபத்தில்இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டிருந்தனர். அத்துடன் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



பேஸ்புக் மூலம் புத்தர் சிலை இருப்பதாக உறுதிப்படுத்தி புகைப்படத்தையும் தனக்கு அனுப்பி வைத்தார்.

ஆகவே பௌத்த மதத்தை பலவீனப்படுத்தாமல் நவீன தொழில்நுட்ப யுகத்திலும் பௌத்த தர்மத்தை பாதுகாத்து முன்கொண்டு செல்வோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஓமல் பே சோபித தேரருக்கு பதில

தர்மத்துடன் சம்பந்தப்பட்ட புத்தகங்கள், பாளி மொழி புத்தகங்கள் 2000 அளவில் வஜிரராம நூலகத்திற்கு அன்பளிப்பு செய்தார். வஜிரராம அறநெறி பாடசாலையை நாட்டின் வளமாக கருத முடியும். எனக்கும் குறித்த அறநெறி பாடசாலையுடன் தொடர்புள்ளது. என்னுடைய தாயார் பெலனி வஜிரராம தேரரிடமே பௌத்தத்தை கற்றுக்கொண்டார். ஹெலேனா விஜேவர்தன தனது பேரர்களை அழைத்துச் சென்று பெலனி வஜிரராம தேரரிடம் பௌத்த மதத்தை கற்றுக்கொடுக்க வழிவகுத்தார். நானும் இங்கு பௌத்த தர்மத்தை கற்றுள்ளேன்.

என்னுடைய சிங்கள மற்றும் ஆங்கில மொழி எழுத்து சீராக இல்லாத காரணத்தினால் மகாநாம தேரரிடம் சென்று சிங்கள எழுத்துகளை கற்றுக்கொண்டேன். ரோயல் கல்லூரி மிசனரி பாடசாலை இல்லை. எனினும் பௌத்த மதம் பாடவிதானமாக இருந்தது. என்றாலும் பௌத்த மதத்திற்கான பூரண அறிவினை நான் அறநெறி பாடசாலையின் ஊடாகவே கற்றேன்.

ஆகவே தற்போது பௌத்தம் உட்பட ஏனைய மத பாடவிதானங்கள் தற்போது பரீட்சையில் இணைக்கப்பட்டு பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டாலும் பௌத்த அறநெறியை முழுமையாக பாடசாலைகளில் கற்க முடி

# இந்திய - இலங்கை உடன்படிக்கை ஈழத்தமிழர்களைப் பாதுகாக்கும் என ராஜீவ் காந்தி உறுதியாக நம்பினார்

## முன்னாள் இராணுவ அதிகாரி சுட்டிக்காட்டு

(டில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி இந்திய- இலங்கை உடன்படிக்கை ஈழத்தமிழர்களின் உயிர்களைப் பாதுகாக்கும் என்று வலுவான நம்பிக்கையை கொண்டிருந்தார் என முன்னாள் இந்திய இராணுவ அதிகாரி பிரவீன் தவார் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தியாவின் சிறுபான்மையின மக்களுக்கான தேசிய ஆணைக் குழுவின் உறுப்பினராக வுள்ள பிரவீன் தவார் இந்தக் கருத்தினை ஏசியன் ஏஜில் பதிவு செய்துள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி உலகின் 57 நாடுகளுக்கு சுற்றுப்பயணங்களை மேற்கொண்டுள்ள போதிலும் இந்தியாவின்அயல்நாடுகளுடனான உறவு முன்னர் எப்போதும் இல்லாத அளவிற்கு மோசமானதாக காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி இந்தியாவின் வெளிவிவகார கொள்கையை இராஜதந்திர முதிர்ச்சியுடன் கையாண்டார் எனவும் அவர் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி பிரதமரான வேளை இலங்கையின் நிலவரம் மோசமடைந்து கொண்டிருந்தது. அரச வன்முறை தீவிரமடைந்து கொண்டிருந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

இது தமிழ்நாட்டு மக்களின் ஆன்மாவில் கடும் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது எனவும் குறிப்பிட்டுள்ள பிரவீன் தமிழ்நாட்டு மக்கள் தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும் என விரும்பினர், புதுடில்லி நடவடிக்கை எடுக்க வேண்டும்என்பதற்கானஅழுத்தங்களைக் கொடுத்தனர்.

இவ்வாறான சூழ்நிலையிலேயே இந்திய- இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. ராஜீவ் காந்தி அந்த உடன்படிக்கை தமிழர்களின் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாக்கும் இலங்கையின் இறைமை மற்றும் ஆள்புல ஒருமைப்பாடு ஆகியவற்றையும் பாதுகாக்கும் எனவும் கருதினார்

இந்திய- இலங்கை உடன்படிக்கை குறித்து பலர் விமர்சனங்களை முன்வைத்த போதிலும் அது குறுகியகாலத்தில் நீண்டகால நோக்கங்களை அடைய உதவியது. எனினும் அதன் நோக்கம் சாத்தியமாவதற்கு பல வருடங்கள் எடுத்தன எனவும் அவர் தெரிவித்தார். ஆனால் இதற்காக பெரும் விலையை செலுத்த வேண்டியிருந்தது. அதுதான் ராஜீவ் காந்தியின் பெறுமதிமிக்க உயிர் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## தர்மராஜாவின் நினைவேந்தல்

(கொழும்பு)

கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்தும் அமரர் க.மு. தர்மராஜாவின் நினைவேந்தல் நாளை 22 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் ஜி.இராஜகுலேந்திரா தலைமையில் கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.

அஞ்சலி உரைகளை கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவர் ஜி. இராஜகுலேந்திரா, அரச கரும மொழித் திணைக்களத் தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரம், கொழும்பு தமிழ்ச் சங்க நிதிச் செயலாளர் தம்பு சிவசுப்பிரமணியம், கொழும்பு தமிழ்ச் சங்க துணைப் பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி, கொழும்பு தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் ந.காண்டீபன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சட்டத்தரணி சோ.தேவராஜா உள்ளிட்டோர் வழங்குவர். (இ-7)

## அம்பாறையில் கடும் வரட்சி 20 ஆயிரம் பேர் பாதிப்பு

(அம்பாறை)

கடும் வரட்சி காரணமாக, அம்பாறை மாவட்டத்திலுள்ள 6 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 20 ஆயிரத்து 338 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அம்பாறை மாவட்ட மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ். எம்.சியாத் தெரிவித்தார்.

இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பவுசர் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அம்பாறை மாவட்டத்தில் தற்போது நிலவும் வரட்சியான கால நிலையினால் பாதிக்கப்படுபவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

தற்போது பொத்துவில், திருக்கோவில், ஆலையடி வேம்பு, நாவிதன்வெளி, தமண, லாகுகல ஆகிய 6 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள சுமார் 6,248 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 20 ஆயிரத்து 338 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு பிரதேச செயலகங்களினூடாக குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில், ' பிரதேச செயலகங்கள் இப்பணியை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

வரட்சிப் பிரதேச மக்களின் தேவைக்கேற்ப பவுசர் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இப்பணிக்கு உள்ளூராட்சி சபைகளும் நிறைவான ஒத்துழைப்பு நல்கி வருகின்றன.

இதேவேளை, வரட்சி காரணமாக கிழக்கு மாகாணத்திலுள்ள பெரிய, சிறிய குளங்கள், ஆறுகள், ஏரிகள், நீர்நிலைகள் என்பனவற்றின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். வரட்சி காரணமாக காட்டு மிருகங்களும் குடிநீரின்றிப் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய வரட்சிக் காலநிலை தொடருமானால், எதிர்வரும் பெரும்போக நெற்செய்கை வெகுவாகப் பாதிக்கப்படும் என அம்பாறை மாவட்ட விவசாயிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

வரட்சி காரணமாக, அம்பாறை மாவட்டத்தில் இம்முறை சிறுபோகத்தின் போது. மட்டுப்படுத்தப்பட்டளவு காணிகளிலேயே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது அறுவடைப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## புலிகளின் ஆயுதம் வைத்துள்ள அமைச்சர்கள் மீது நடவடிக்கை

### சமிந்த விஜேசிறி எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)



நாட்டில் ஆயுதம் வைத்திருக்க வேண்டியவர்கள் பாதுகாப்புத் துறையினர் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு அரசாங்கத்தில் அமைச்சராக இருப்பவராக இருந்தாலும் ஆயுதம் வைத்திருந்தால் அவர்களிடம் விசாரணைகளை முன்னெடுக்குமாறு நாம் பிரதமரிடம் கோரிக்கை விடுக்கின்றோம் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

யுத்தத்தின் பின்னர் புலிகள் அமைப்பினரிடம் காணப்பட்ட ஆயுதங்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டிருந்தனர்.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


பாராட்டுகின்றோம்

செ.மோகனதாஸ் சுவாமிகள்



நல்லையம்பதிதனில் "யாழ் விருது" பெறும் நல்லாசான் மோகனதாஸ் சுவாமிகளை பாராட்டி அகம் மகிழ்வடைகின்றோம். சுவாமிகள் மேலும் பல விருதுகளை பெறவும், நலத்துடன் நற்பணிகள் பல ஆற்றிட நல்லைக் கந்தன் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இன்பமே சூழ்க-எல்லோரும் வாழ்க


அன்பே சிவம்

சற்குருநாதன் பணியில்
அறங்காவலர் நிர்வாக உறுப்பினர்கள்
மகாதேவ ஆச்சிரமம், கிளிநொச்சி.

(5405)


# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 4 விதி எண் 3




இராகு குரு ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள், பொதுஜன விடயங்களில் மிகுந்த அக்கறையுடன் ஈடுபட்டு நற்பெயர் எடுப்பார்கள். அறிவாலும், ஆற்றல் மிக்க செயலாலும் மிக உயர்ந்த இடத்தைப் பிடிப்பார்கள். தான் என்ற சொல்லைக் காப்பாற்றுவார்கள். அதனால் பல பேர் அவர்களுடைய நட்பை எதிர்ப்பார்கள். தான் கண்ட காட்சிகளையெல்லாம் பிறருக்குத் தெளிவாக விளக்கிக் கூறுவார்கள். குருவின் அருளும் தெய்வத்தின் அருளும் நிரம்பப் பெற்றவர்கள். சமூக சேவையை மனம் விரும்பிச் செய்வார்கள். தன்னால் இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்வார்கள். இவருடைய ஆலோசனைகள், பிறர் முன்னேற மிகவும் உதவியாகவும் உறுதுணையாகவும் இருக்கும். இவர்கள் தன்னுடன் பழகும் நண்பர்கள் தவறு செய்தால் வன்மையாகக் கண்டிப்பார்கள்.

ஆரம்ப வாழ்க்கையில் போராடினாலும், படிப்படியாக முன்னேற்றமடைவார்கள். உறுதியான தோள் இருக்கும். வசீகரமான பார்வையால் மற்றவர்களை எளிதில் கவர்ந்திழுத்துவிடுவார்கள். கொழு கொழு கன்னமுடையவர்கள். அமைதியையும் சாந்தத்தையும் விரும்புவார்கள். சமாதான விரும்பிகள். சிறந்த அறிவாளிகள். சிந்தித்துச் செயற்பட்டு பூரணமாக வெற்றி பெறுவார்கள். அயராத உழைப்பாளிகள். அரசியலில் புரட்சி செய்வார்கள். பெற்றோர் மீது மரியாதை கொண்டவர்கள்.

கலை, காவியம், புராணம், சிற்பம் சங்கீதம் என்று அனைத்துத் துறைகளிலும் தேர்ச்சியடைவார்கள். சிறப்பான ஆலோசனைகளை வெளியிடுவார்கள்.

தன் உண்மையான மனம் கூறும் கருத்துக்களை ஒன்று விடாமல் பகிரங்கமாக வெளியிடுவார்கள். மற்றவர்களின் கருத்தைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். அனுபவத்தில் இவர்கள் நல்ல வாழ்க்கை வாழ்வார்கள். ஆரம்பத்தில் தீவிரத் தன்மை இருந்தாலும் போகப் போகச் சரியாகிவிடும். மற்றவர்களின் கருத்துக்கு நேர் எதிராக கருத்தை உடனே தெரிவிப்பார்கள்.

எதிலும் ஆராய்ச்சி மனப்பான்மை இருக்கும். எதையும் நிதானித்து முடிவெடுப்பார்கள். எந்தக் காரியமானாலும் தன்னுடைய தனிப்பட்ட கருத்து ஒன்றை வைத்திருப்பார்கள். வீண் விரோதிகளைத் தன்னுடைய பேச்சால் வரவழைத்துக் கொள்வார்கள். தூய எண்ணமும் இளகிய மனமும் இருக்கும்.

எல்லோரிடமும் நல்ல விதமாகப் பழகக் கூடியவர்கள். பிறருக்குப் போதிக்கும் ஆற்றலுடைய இவர்கள் எப்போதும் எதையாவது செய்து கொண்டேயிருப்பார்கள். தன்னுடைய உடலைப் பேணிக் காத்துக் கொள்வார்கள். சிறு நோய் வந்தாலும் உடனே மருத்துவர்களின் ஆலோசனையை நாடுவார்கள். நீண்ட அழகான புருவமும் கவர்ச்சியான கண்களும் முன் பற்கள் இரண்டு மற்றதை விட பெரிதாகவும் சதைப்பற்றுடன் பார்ப்பதற்குக் கம்பீரமாகவும் இருப்பார்கள். அலை போன்ற முடியுடன் இருக்கும். இவர்கள் சுறுசுறுப்புடன் செயற்படுவதால் வெப்பத்தால் தலை முடிகள் உதிரும். வழுக்கை விழுந்துவிடும். நன்கு சிந்தித்த பின்னர்தான் ஒரு காரியத்தில் இறங்குவார்கள். எங்கு சென்றாலும் நல்ல நண்பர்கள் யாராவது வந்து உதவுவார்கள். நட்புக்கு இலக்கணமானவர்கள். சிறந்த புத்திசாலிகள். வெகு சிலரையே ஆழ்ந்த நட்பின் மூலம் நண்பராக்கிக் கொள்வார்கள்.

முன்னோர்கள் வழியையே பின்பற்றுவார்கள். கடின் உழைப்பாளிகள். நாணயஸ்தர்கள். கூர்மையான அறிவு இயற்கையிலேயே இருக்கும். இவர்களை நம்பிப் பலபேர் தங்கள் உடைமைகளை ஒப்படைப்பார்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவார்கள். பிறருடைய உண்மையான மனநிலையை அறிந்து நட்பு வைத்துக் கொள்வார்கள். தனிமையை விரும்புவார்கள். பல கலைகளில் தேர்ச்சியடைவார்கள். தகுதிக்கு மீறிய நபர்களின் நட்புகள் கிடைக்கும். தனது தகுதிக்கு அப்பாற்பட்ட செயல்களில் ஈடுபட்டு வெற்றி பெறுவார்கள். பத்திரிகைத் துறைகளில் புகழ்கொடி கட்டும் வித்தகர்கள்.

கதை, கட்டுரை, காவியம், கவிதை எழுதுவார்கள். பிறருடைய கடினமான சொற்கள் இவர்களை வெகுவாகப் பாதித்து விடும். சில நேரத்தில் பணத்தை தாராளமாக செலவு செய்வார்கள். பல நேரங்களில் மிகவும் உணர்ச்சி வசப்படுவார்கள். நல்ல வாழ்க்கைத் துணை அமையும்.

கவர்ச்சி மீது நாட்டமிருக்கும். இளம் வயதில் போராடினாலும் வயது செல்லச் செல்ல வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு வந்து விடுவார்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
1,10,19, 28, 3, 12, 21, 30

துரதிர்ஷ்ட திகதிகள்
8, 17, 26, 6, 15, 24

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர் நீலம், மஞ்சள், பொன்னிறம், ஓரஞ்சு, ரோஸ், கத்தரிப்பூ நிறம்.

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, சிவப்பு, இருண்ட நிறங்கள்.


அதிர்ஷ்ட இரத்தினங்கள்
கோமேதகம், நீலக்கல், புஷ்பராகம், அக்கோமரின், எமிதிஸ்ட், ஓபல்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்




அநுராதபுரக் காலத்து குட்டம் பொகுண

தமிழ்நாட்டுக் கரையில் (இன்றைய திருநெல்வேலிக் கரையில்) மதிரை என்று பெயர்பெற்ற வர்த்தக பண்டமாற்று நிலையத்தை முக்கிய மையமாகக் கொண்டு ஒரு குறுநில அரசு (பாண்டிய அரசு எனப் பெயர் பெறும் அரசு) எழுந்தது. இலங்கையின் வடமேற்குக் கரையில் (மதிரை அமைந்திருந்த கரைக்கு எதிரே) தம்பபண்ணி (சமஸ்கிருத மொழியில் தாமிரபர்ணி) என்று பெயர் பெற்ற வர்த்தக பண்டமாற்று மையத்தை நிலையாகக் கொண்ட இன்னொரு குறுநில அரசு தோன்றியது.

சிறப்பாக தம்பபண்ணி வ்ழியாகவும், பொதுப்பட மேற்குக் கரை, வடக்குக்கரை மற்றும் வட கிழக்குக்கரை ஆகியவற்றில் இருந்த பண்பாட்டுத் தளங்கள் வழியாகவும், புதிய பண்பாடு இலங்கையின் உட்பகுதிகளுக்கும் பரவியது. பின்னர் முக்கியத்துவம் பெறும் மாதோட்டம் (மன்னார் பகுதி), ஜம்புகோளப்பட்டினம் (யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் வடகரை) மற்றும் கோகர்ணம் (திருகோணமலை) ஆகிய துறைகள் இப் பண்பாட்டுத் தளங்களுள் அடங்கியிருக்கலாம்."

பேராசிரியர் இந்திரபாலாவின் மேற்குறிப்பிட்ட கூற்றுகள் பேராசிரியர் செனிவரத்தனவின் ஆய்வுகளின் அடிப்படையிலும், 1980-1984 களில் சிக்காக்கோ பல்கலைக் கழகப் பேராசிரியர் ஜோன் கார்ஸ் வெல்லால் இப்பிரதேசங்களில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின் அடிப்படையிலும், அவரது ஆழ்ந்த துறைசார் புலமையின் அடிப்படையிலும் தெரிவிக்கப்பட்டவையாகும். இதன் அடிப்படையில் நோக்கும் போது, மேற்குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் கி.மு 1000க்கும் கி.மு 200க்கும் இடைப்பட்ட கால கட்டங்களில் குறுநில அரசுகள் தோன்றின என்ற முடிவுக்கு வர முடிகின்றது.

இலங்கையின் வடமத்திய பிரதேசங்களில், குறிப்பாக அநுராதபுரப் பிராந்தியங்களில் இரும்புக் காலப் பண்பாடு கி.மு 900 ஆண்டுக் காலப்பகுதிகளில் தொடங்கியது.

அதே வேளையில், இலங்கையின் வடமேற்குக் கரையில் உள்ள பொம்பரிப்பு, தம்பபண்ணி, மன்னார் போன்ற இடங்களில் உள்ள அப்பண்பாடு, அநுராதபுரக் காலப் பண்பாட்டிற்கும் காலத்தால் முந்தியது. பொம்பரிப்பு, தம்பபண்ணி போன்ற வடமேற்குக் கரைகளில் இப்பண்பாடு செறிந்து காணப்படுவதோடு, வர்த்தக நிலையங்களாகவும் இந்த இடங்கள் இருந்திருக்கின்றன. அத்தோடு தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும் ஏனைய தூர நாடுகளுக்குமிடையில் நடைபெற்ற வர்த்தக நடவடிக்கைகளின் மையப் பிரதேசமாக தம்பபண்ணியும் (புத்தளப் பகுதி), மாதோட்டமும் (மன்னார்ப் பகுதி) ஆதி வரலாற்றுக் காலத்தில் முக்கிய பங்கினை வகித்திருப்பதையும் காணக் கூடியதாக உள்ளது.

> "தனது குழாத்தினருடன் தம்பபண்ணி துறைமுகத்தில் வந்து இறங்கி, அங்கிருந்த அரக்கர்களை வென்று, சில காலம் அங்கு ஆட்சி நடத்திவிட்டுப் பின்னர் அநுராதபுரம் சென்று அங்கு அரசமைத்து ஆட்சி புரிந்தான் என மகாவம்சம் கூறுகின்றது. விஜயன் இலங்கைக்கு வந்த நிகழ்வு வெறும் ஐதீகம் என்பது வரலாற்று அறிஞர்கள் ஏற்றுக் கொண்ட விடயம்"

## தமிழரின் தோற்றமும் ஆரம்ப வரலாறும் கி.மு 300-கி.பி 300

அவ்வாறான ஒரு காலகட்டத்தில், புவியியல் ரீதியாக உள் நிலமாக இருந்த அநுராதபுரப் பிரதேசத்தில் ஓர் ஆரம்ப இராச்சியக் கட்டமைப்புத் தோன்றுவதற்கு முன்னர் தம்பபண்ணி, மாதோட்டம் போன்ற பிரதேசங்களில்தான் அவ்வாறான ஆரம்ப இராச்சிய நிறுவனங்கள் தோன்றியிருக்க வேண்டும் என்பதை அசோகனின் கல்வெட்டுக்கள் சிலவும், கிரேக்க, உரோம நூல்களில் வரும் தாம்ரபர்ணி பற்றிய குறிப்புக்களும் பாளி நூல்களிலிருந்து கிடைக்கும் குறிப்புகளும் தெரிவிக்கின்றன.

மேலும் தம்பண்ணியில் கிடைக்கப் பெற்ற தொல்லியல் சான்றுகளை ஒப்பிட்டு நோக்கும் போது, தம்பபண்ணி ஓர் ஆரம்ப வர்த்தக நகர மையமாகவும் தமிழர்கள் செறிவாக வாழ்ந்த இடமாகவும் இருந்தமையைக் காணமுடிகின்றது. மேலும் தம்பபண்ணியும், மாதோட்டமும் முத்து, சங்கு, ஆளைத்தந்தம், இரத்தினக் கற்கள் ஆகியவற்றிற்குப் பெயர் போன துறைமுகப் பிரதேசங்களாக அக்காலத்தில் காணப்பட்டன என்பதனையும் மேற்குறிப்பிட்ட குறிப்புகள் மூலம் அறிய முடிகின்றது.

பழைய பாளி வரலாற்று ஏடுகளில் தம்பபண்ணியைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இலங்கைக்கு விஜயன் வரும்போது தனது குழாத்தினருடன் தம்பபண்ணி துறைமுகத்தில் வந்து இறங்கி, அங்கிருந்த அரக்கர்களை வென்று, சில காலம் அங்கு ஆட்சி நடத்திவிட்டுப் பின்னர் அநுராதபுரம் சென்று அங்கு அரசமைத்து ஆட்சி புரிந்தான் என மகாவம்சம் கூறுகின்றது. விஜயன் இலங்கைக்கு வந்த நிகழ்வு வெறும் ஐதீகம் என்பது வரலாற்று அறிஞர்கள் ஏற்றுக் கொண்ட விடயம்.

ஆனால் மேற்கூறப்பட்ட விடயத்தில் எமக்குக் கிடைக்கும் செய்தியாதெனில், தம்பபண்ணியில் ஓர் அதிகார அமைப்பு முறை அல்லது ஒரு சிற்றரசு இருந்திருக்கின்றது என்பதாகும். அங்கிருந்தவர்களை மகாவம்ச ஆசிரியர் அரக்கர்கள் என அழைப்பதற்குக் காரணம், விஜயனை இலங்கையின் முதல் மன்னன் எனக் கூறித் தனது கதையைத் தொடங்க, ஒரு நல்ல பின்புலத்தை ஏற்படுத்துவதற்கு என்று எண்ணத் தோன்றுகின்றது.

மேலும், தம்பபண்ணியில் இருந்த அதிகார வர்க்கம் மதிரையை மையமாகக் கொண்ட பாண்டிய அதிகார அமைப்புக்களுடன் வர்த்தக, அரசியல் தொடர்புகளை வைத்திருந்ததையும் விஜயன் கதை, பண்டுகாபயன் கதைகளில் வரும் செய்திகளினூடாகவும் அறியமுடிகின்றது. இவ்வாறான நிலைமைகளின் பின்னணியில் இருந்து பார்க்கும் பொழுது, மதிரைப் பாண்டி நாட்டு அதிகாரவர்க்கம், தம்பபண்ணி அதிகாரவர்க்கத்தின் மேல், தமது ஆதிக்கத்தை ஏற்படுத்தி மேற்கொண்டு அநுராதபுரத்தில் தமது அரச அதிகாரத்தை வலுப்படுத்தியதாகவும் கொள்ளமுடிகின்றது.

எது எப்படி இருப்பினும், தம்பபண்ணியில் ஆரம்பக் குறுநில அரசு ஒன்று இருந்திருக்கின்றது என்பதனையும் அங்கு வாழ்ந்த மக்கள் திராவிட இனத்தைச் சேர்ந்த தமிழ்மக்கள் என்பதனையும் தொல்லியல் சான்றுகள் மூலம் அறியமுடிகின்றது.

அநுராதபுரப் பிரதேசம் இரும்புக் காலப் பண்பாண்டின் ஒரு பிரதான அம்சமாகிய நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தை ஏற்று, அப் பிரதேசத்திலுள்ள இயற்கையான வளங்களைப் பயன்படுத்தி விரைவாக முன்னேறியதன் விளைவாக, வடமேற்குக் கரையோரத்தில் இருந்த மக்கள் அநுராதபுரப் பிரதேசத்தை நோக்கிப் புலம்பெயர்ந்திருக்க வேண்டும்.

இலங்கையின் ஆரம்பகால வரலாற்றில் அநுராதபுரப் பிரதேசத்தில் காணப்படும் சிறிய குளங்களும், கால்வாய்களும் மேற் கூறப்பட்ட பின்னனியின் ஓர் ஆரம்பக் கட்டத்தைக் காட்டுவதாக அமைகின்றது.

அநுராதபுர இராச்சியத்தின் பிற்பகுதியில் ஆட்சிபுரிந்த மன்னர் பல குளங்களைப் புதுப்பித்ததாகவும் பல புதுக்குளங்களைக் கட்டியதாகவும் வரலாறு கூறுகின்றது. இவ்வாறு அநுராதபுரம், மக்கள் செறிந்து வாழும் ஒரு பிரதேசமாக மாறியதன் விளைவாக, அங்கு முதலில் ஒரு குறுநில அரசு தோன்றி, காலப்போக்கில் வலுப்பெற்று, தம்பபண்ணி போன்ற குறுநில அரசுகளை உள்வாங்கிக் கி.மு 300ஆம் ஆண்டளவில் ஒரு வலுவுள்ள அரசாக எழுச்சி பெற்றிருக்கின்றது என்றே கொள்ள முடிகிறது.

இதனால் தம்பபண்ணி தனது வரலாற்று முக்கியத்துவத்தினை இழந்ததனால் இலங்கை வரலாற்றில் ஒரு நிலையான தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை என்று கருத முடிகிறது.

தம்பபண்ணி போன்று, மாதோட்டப் பகுதியும் ஒரு சுறுசுறுப்பான வர்த்தக மையமாகவும் நகர மையமாகவும் அதே காலப்பகுதியில் இருந்திருக்கின்றது. ஆனால் மன்னார் பிரதேசம் தொடர்ச்சியாக மக்கள் செறிந்து வாழும் நகரமாக அபிவிருத்தி அடைந்து வந்தபடியால் புராதன தொல்லியல் மையங்கள் அழிபாடுகளுக்குள் அகப்பட்டு மறைந்து போயிருக்கின்றன.

(தொடரும்)


# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2018-16.09.2018

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## அனுசரித்துச் சென்றால் ஆதாயம்!



விளம்பி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு இலாப ஸ்தானத்தில் சந்திரனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். குரு-சந்திர யோகம் உருவாகிறது. உங்கள் இராசிநாதன் குருவிற்கு பகை கிரகமாக விளங்கும் சுக்கிரன் நீச்சம் பெற்றிருக்கிறார். எனவே புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். உரிய விதத்தில் கடமைகளை சரிவரச்செய்வீர்கள். வாழ்க்கைத் தேவைகள் படிப்படியாகப் பூர்த்தியாகும்.

என்ன இருந்தாலும் ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் சில காரியங்களை குடும்ப உறுப்பினர்களைக் கலந்து ஆலோசித்து தான் செய்ய வேண்டும். ஏழரைச் சனியில் 2 ஆவது சுற்று நடப்பவர்களுக்கு பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. என்றாலும் மந்தன் எனப்படும் சனி ஒரு சில காரியங்கள் நடைபெறுவதில் மந்த நிலையை உருவாக்கலாம். தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்வது நல்லது. இதுபோன்ற காலங்களில் 24 மணி நேரமும் நேர்மறைச் சிந்தனையோடு செயற்பட்டால், நினைத்த காரியங்கள் நினைத்தபடியே நடைபெறும்.

விரயாதிபதி உச்சம் பெற்றும், வக்கிரம் பெற்றும் இருப்பதால் வீண் விரயங்கள் கூடும். சுபவிரயங்களும் உருவாகும். எனவே இடம், பூமி வாங்குவதில் கவனம் செலுத்தலாம். இல்லத்தைப் பராமரிக்கச் செலவிடலாம். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த மின்சாதனப் பொருட்களை வாங்கலாம். குழந்தைகளின் கல்வி வளர்ச்சியிலும் கல்யாணச் சீர்வரிசைப் பொருட்களை வாங்குவதிலும் ஆர்வம் காட்டலாம். அதேநேரத்தில் பக்கத்தில் உள்ளவர்களின் பகை அதிகரிக்கலாம். வழக்குகளைச் சந்திக்கும் வாய்ப்புகள் ஒருசிலருக்கு ஏற்படும். எனவே கூடுதல் கவனத்தோடு செயற்படுவது நல்லது. சனி பகவான் வழிபாட்டை மேற்கொள்வதோடு சுய ஜாதகத்தில் தசாபுத்திக்கேற்ற வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். ராகு-கேதுகளுக்குரிய பிரீதி செய்வதன் மூலம் செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும்.

சனி வக்கிர நிவர்த்திக் காலம்!

ஓகஸ்ட் 20 ஆம் திகதி தனுசு இராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான் வக்கிர நிவர்த்தியாகிறார். இது ஒரு வழிக்கு நன்மைதான் என்றாலும் காரிய தாமதங்கள் அதிகரிக்கும். சோம்பல் குடிகொள்ளும். துணிந்து சில முடிவுகளை எடுக்க இயலாது. உங்கள் இராசிக்குத் தனாதிபதியாகவும் சகாய ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் சனி பலம் பெறுவதால் தனவரவிற்கு தடை ஏற்படாது. ஆனால் மன அமைதி மட்டும் கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கும். சகோதரர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு அகலும். சொத்துப் பிரச்சினைகள் சுமுகமாக முடியும். வாகன மாற்றங்களும் இடமாற்றங்களும் திருப்திகரமாக அமையும். இக்காலத்தில் அனுமன் வழிபாட்டில் கவனம் செலுத்தினால் தடைக்கற்கள் படிக் கற்களாக மாறும்.

புதன் பெயர்ச்சிக் காலம்!

ஓகஸ்ட் 28 ஆம் திகதி சிம்மராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் 9 இல் சஞ்சரிப்பது யோகம்தான். அங்குள்ள சூரியனோடு இணைவதால் புத-ஆதித்ய யோகம் உருவாகிறது. எனவே படிப்பில் கவனம் செலுத்த இயலாமல் பாதியில் கல்வியை நிறுத்தியவர்களுக்கு மீண்டும் படிக்க வாய்ப்பு ஏற்படும். பஞ்சாயத்துகள் சாதகமாக முடியும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

செப்டெம்பர் 3 ஆம் திகதி சிம்ம புதன் வலிமை இழந்திருக்கிறார். அப்பொழுது மாமன், மைத்துனர் வழியில் மனக் கசப்பு தரும் சம்பவங்கள் வரலாம். சேமிப்புகள் கரையலாம். பிறகு செப்டெம்பர் 15 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறுகிறார். தொழில் ஸ்தானாதிபதி உச்சம் பெறும் இந்த நேரத்தில் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதார நிலை உயர வழிவகுத்துக் கொடுப்பர். வெளிநாட்டிலிருந்து அனுகூலத் தகவல் வரலாம்.

சுக்கிரப் பெயர்ச்சிக் காலம்!

ஓகஸ்ட் 28 ஆம் திகதி துலாம் இராசிக்கு சுக்கிரன் வருகிறார். இலாப ஸ்தானத்தில் இலாபாதிபதி சுக்கிரன் சஞ்சரித்தாலும், உங்கள் இராசிநாதன் குருவிற்கு பகைக்கிரகமாக சுக்கிரன் விளங்குவதால் வரவைக் காட்டிலும் செலவு இருமடங்காக உயரும். தேவைக்கேற்ற பணம் வந்துகொண்டே இருக்கும். எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் தொகை கையில் இல்லையே என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம். காரியத்தைத் தொடங்கி விட்டால் தேவையான பணம் தானாக வந்து சேரும். ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும் நேரமிது.

செவ்வாய் வக்கிர நிவர்த்தி

செவ்வாய் செப்டெம்பர் 6 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். எனவே கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக் கொள்வீர்கள். வீட்டுப் பராமரிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது அல்லது விரிவாக்கம் செய்வது போன்ற வேலைகளை இக்காலத்தில் செய்ய இயலும். வியாபாரப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். அதிகம் விரயம் ஏற்படும் நேரமிது. எனவே சுபச் செலவுகளை ஒன்றன் பின் ஒன்றாக தேர்ந்தெடுத்துச் செய்வது நல்லது.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வதோடு சங்கடஹர சதுர்த்தி அன்று ஆனைமுகப் பெருமானையும் வழிபட்டு வாருங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் ஜென்மச் சனியின் ஆதிக்கமும் விரயாதிபதி செவ்வாய் உச்சமும் இருப்பதால், யோசித்துச் செயற்படுவதன் மூலம் தான் நற்பலன்களை வரவழைத்துக் கொள்ள இயலும். விரயங்கள் அதிகரிக்கும். வீண் குழப்பங்கள் குடும்பத்தில் ஏற்படும். வம்பு, வழக்குளில் சிக்காமலிருக்க வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அன்பு செலுத்திப் பேசுவதன் மூலம்தான் அனைவரின் உள்ளத்திலும் இடம்பிடிக்க இயலும். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடு அதிகரிக்காமல் இருக்க மறுத்துப் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் வந்துசேரும். மங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். பணி புரியும் இடங்களில் வேலைப்பளு கூடும். ஒருசிலருக்கு புதிய வேலை அமையும். சனி பகவானையும் குரு பகவானையும் தொடர்ந்து வழிபட்டு வருவதன் மூலம் சந்தோச வாய்ப்புகள் அதிகரிக்கும்.

## பதவி மாற்றங்கள் உருவாகும்!






விளம்பி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் 10 இல் குரு பலம் பெற்று விளங்குகிறார். பொதுவாக 10 இல் குரு வந்தால் பதவி மாற்றம் வரும் என்பது பழமொழி. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது உங்கள் இராசியிலேயே கேது இருப்பதாலும் இடமாற்றம், ஊர்மாற்றம், பதவி மாற்றங்கள் போன்ற ஏதாவது ஒரு மாற்றம் வருவது மட்டுமல்லாமல் ஒருசிலருக்கு நாடு மாற்றங்கள் கூட ஏற்படலாம். நீண்டநாட்களாக வெளிநாடு சென்று வேலை பார்க்க வேண்டுமென்று முயற்சித்தவர்களுக்கு இப்பொழுது அது கைகூடும் நேரமிது. நினைத்த அளவு ஊதியம் கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு சம்பள உயர்வோடு கூடிய உயர் பதவி கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு.

குருவின் பார்வை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிவதால், இருக்குமிடத்தைக் காட்டிலும் பார்க்குமிடம் பலம்பெறுகின்றது. எனவே குடும்ப முன்னேற்றம் கூடுதலாகவே இருக்கும். பூர்வீகச் சொத்துகள் கைக்கு வந்து புதிய திருப்பத்தை உருவாக்கும். பாதியில் முடங்கிக் கிடந்த கட்டடப் பணி மீண்டும் தொடரும். எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும். உடல் நலத்தில் மட்டும் அதிக கவனம் செலுத்தக் கூடிய சூழ்நிலை உருவாகலாம். செவ்வாய் வக்கிரமும் விரயச் சனியின் ஆதிக்கமும் உங்கள் ஆரோக்கியப் பாதிப்புக்கு காரணமாக இருக்கும். ஒருசில முடிவுகளை உடனடியாக எடுக்க முடியாமல் திணறுவீர்கள். விரயங்களை சுபவிரயங்களாக மாற்றிக் கொள்ள வேண்டிய நேரமிது.

சனி வக்கிர நிவர்த்திக் காலம்!

ஓகஸ்ட் 20 ஆம் திகதி தனுசு இராசியில் சனி வக்கிர நிவர்த்தியடைகிறார். தற்சமயம் ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. உங்கள் இராசிநாதனாகவும் தனாதிபதியாகவும் விளங்கும் சனி பகவான் வக்கிர நிவர்த்தியாகி பலம் பெற்று விரய ஸ்தானத்தில் வீற்றிருப்பதால் எதிர்பாராத விரயங்கள் வரலாம். இது போன்ற காலங்களில் வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களையும் ஆடம்பரப் பொருட்களையும் வாங்குவது நல்லது. மேலும் வீட்டை விரிவு செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டலாம். கட்டிய வீட்டைப் பழுது பார்க்கலாம். வீண் விரோதங்களைத் தவிர்ப்பது நல்லது. விவகாரங்களை உடனுக்குடன் சரிசெய்து கொள்வதன் மூலமே அமைதி காண இயலும். வரவேண்டிய பாக்கிகளை வசூலிக்கப் போராடுவீர்கள். பயணங்களில் தடை ஏற்படும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற இயலாது. சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை முறையாக மேற்கொண்டால், ஓரளவேனும் நன்மைகளை வரவழைத்துக் கொள்ள இயலும்.

புதனின் பெயர்ச்சி காலம்

உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் ஓகஸ்ட் 28 ஆம் திகதி சிம்மத்திற்குச் செல்கிறார். 6 இற்கு அதிபதி 8 இல் மறைவது யோகம் தான். மறைந்த புதன் நிறைந்த தனலாபம் தரும். அதுமட்டுமல்ல கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம் என்பதற்கேற்ப தொழில்வளம் சிறப்பாக இருக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். மனிறமுகப் பகை மாறும். செப்டெம்பர் 3 ஆம் திகதி புதன் வலிமையிழப்பதும் யோகம் தான். அச்சமயத்தில் உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் கிடைக்கும். பிறகு செப்டெம்பர் 15 ஆம் திகதி புதன் கன்னி இராசியில் சஞ்சரித்து உச்சம் பெறுகின்றார். 9 இல் உச்சம் பெறும் புதனால் பொன், பொருட்கள் அதிகரிக்கும். புகழ் கூடும். தந்தை வழி ஆதரவு உண்டு.

சுக்கிரப் பெயர்ச்சிக் காலம்!

ஓகஸ்ட் 28 ஆம் திகதி துலாம் இராசிக்குச் சுக்கிரன் வருகிறார். உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் சுக்கிரன், குருவோடு இணைந்து சஞ்சரிக்கும் பொழுது எண்ணற்ற நல்ல காரியங்கள் நடைபெறும். முன்னேற்றத்தின் முதல்படிக்கு அடியெடுத்து வைப்பீர்கள். கிளைத் தொழில்கள் தொடங்கும் முயற்சி கைகூடும். ஆலயத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். அடகு வைத்த நகைகளை மீட்டும் வாய்ப்பு கிட்டும்.

செவ்வாய் வக்கிர நிவர்த்தி

உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். சுக ஸ்தானம் மற்றும் இலாப ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாய், வக்கிர நிவர்த்தியாகிப் பலம்பெறும் இந்த நேரத்தில் அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் கிடைக்கும். தாய் வழி ஆதரவு உண்டு. வெளிநாட்டில் இருந்து கூட அழைப்பு வரலாம். வாங்கிய சொத்தை விற்று விட்டோமே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது மீண்டும் சொத்து வாங்கும் அமைப்பு உருவாகும். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்திணைவர்.


இம்மாதம் சனிக்கிழமை தோறும் ஆனைமுகப்பெருமானையும் அனுமனையும் வழிபட்டு வாருங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் ஏழரைச் சனியில் விரயச்சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால், எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. குடும்பச்சுமை கூடுதலாக இருக்கும். கடுமையாக முயற்சித்தும் சில காரியங்கள் நடைபெறாமல் போகின்றதே என்று கவலைப்படுவீர்கள். கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்படலாம். இருப்பினும் குடும்ப உறுப்பினர்களால் அடிக்கடி சச்சரவுகள் ஏற்படும். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. நெருங்கிப் பழகிய தோழிகளுடன் ஏற்பட்ட விரிசல் மறையும். தாய்வழி ஆதரவு திருப்தியளிக்கும். பணிபுரியும் பெண்களுக்கு மனப்பயம் அதிகரிக்கும். திடீர் இடமாற்றம், இலாகா மாற்றங்கள் ஏற்படலாம். சிவாலய வழிபாடு சிறப்பை வழங்கும்.

(தொடரும்)

# முஸ்லிம் அமைச்சர்களிடம் ஆயுதம் உடன் விசாரணை நடத்த வேண்டும்



## ராவணா பலய அரசிடம் வலியுறுத்து

(கொழும்பு)

ஆயுதம் வைத்திருக்கும் முஸ்லிம் அமைச்சர்களின் பெயருடன் தகவல்கள் கிடைத்துள்ள நிலையில் அது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தாமல் இருக்காது உடன் விசாரணை நடத்த வேண் டும் என ராவணா பலய அமைப்பின் பொதுச் செய லாளர் இத்தே கந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர் புலிகள் அமைப்பினரிடம் காணப்பட்ட ஆயுதங்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டிருந்தனர்.

இது குறித்து தெரிவிக்கையிலேயே சத்தாதிஸ்ஸ தேரர் இதனைத் தெரிவித்தார்.

இதனை வெறும் வார்த்தைகளாக மட்டும் கொள்ளாமல் உரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தேரர் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தார். (இ-7)

## மேல் மாகாண சபை முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

(கொழும்பு)

மேல்மாகாணசபை முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய வுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர, மாகாண சபையின் ஒன்றிணைந்த எதிரணி உறுப்பினர்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.


அதற்கு ஆதரவை பெற்றுக்கொள்ள மாகாண சபையின் ஏனைய கட்சி உறுப்பினர்களுடன் தற்போது பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாக ஒன்றிணைந்த எதிரணியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் குழுத் தலைவர் சுனில் ஜயமினி தெரிவித்தார்.

மேல் மாகாண சபைக்கு தலா நான்கு இலட்சத்து 40 ஆயிரம்ரூபாபெறுமதிகொண்ட 125 ஆசனங்களை பெல்ஜியத்தில் இருந்து கொள்வனவு செய்ய, கேள்விப்பத்திரம் கோரிய சம்பவம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து அந்த செயற்பாட்டை தற்காலிகமாக இடைநிறுத்த மாகாண ஆளுநர் உத்தரவிட்டார்.

இந்த நிலையிலேயே, முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர ஒன்றிணைந்த எதிராணி உறுப்பினர்கள் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திய இளைஞன்



(கொழும்பு)

முப்பரிமாண கலை உலகில் மிகவும் பிரபலமானது கலைத் துறையாகும். இலங்கையில் முப்பரிமாண கலைஞர்களும் அவர்களது படைப்பாற்றலும் மிக அதிகமாக இல்லை.

அதற்குரிய வசதிளும் குறைவாகவே காணப்படுகின்றன. எனினும், இலங்கையைச் சேர்ந்த ஓவியர்களில் ஒருவர் குறைவான வசதிகளில் அழகான முப்பரிமாண ஓவியங்களை வரைந்துள்ளார். துஷாரா சம்பத் என்ற கலைஞரே குறித்த அழகான ஓவியங்களை உருவாக்கியுள்ளார். அந்தக் கலைஞர் உருவாக்கிய ஓவியங்கள் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பட்டா - மோ.சைக்கிள் விபத்து இளைஞனுக்கு காலில் காயம்



(யாழ்ப்பாணம்)

நீர்வேலி வடக்கு மாசுவன் சந்தியில் மோட்டார் சைக்கிளும்- பட்டா வாகனமும் மோதி விபத்திற்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

இதுகுறித்து தெரியவருவதாவது,

இராசவீதியூடாக நிலாவரை நோக்கி பயணித்த பட்டா வாகனம் மாசுவன் சந்தியை கடக்க முற்பட்ட சந்தர்ப்பத்தில் அச்செழு வீதியூடாக நீர்வேலி சந்தி நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் மீது பட்டா வாகனம் வேகக் கட்டுப்பாட்டினை இழந்த நிலையில் மோதித்தள்ளியதில் இளைஞன் காலில் காயமடைந் துள்ளார்.

அத்துடன் மோட்டார் சைக்கிளின் ஒரு பகுதியும் பலத்த சேதமடைந்துள்ளது.

இச்சம்பவத்தில் சிறுப்பிட்டியைச் சேர்ந்த விநாயகமூர்த்தி அரவிந்தன் (வயது-29) என்ற இளைஞனே காயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து காயமடைந்த இளைஞன் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (இ-7)

## காந்திஜி சனசமூக நிலையத்துக்கு தையல் இயந்திரங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் தையல் பயிற்சி நிலையத்துக்கான தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த 18ஆம் திகதி சனிக்கிழமை உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலையத்தில் தலைவர் ரமணன் தலைமையில் இடம்பெற்றது.

வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனின் 2018 ஆம் ஆண்டுக்கான மாகாண சபையின் நிதியொதுக்கீட்டின் கீழ் மேற்படி தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி.கிழக்கு (கோப்பாய்) பிரதேசசபை தவிசாளர் தி.நிரோஷ், வலி.கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபை உறுப்பினர் சி.அகீபன் மற்றும் பயனாளிகளான பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# செய்தித்துளிகள்

## பாம்புக்கடிக்கு இலக்கான இளைஞன் வைத்தியசாலையில் அனுமதி

(சாவகச்சேரி)

தென்மராட்சி-நாவற்குழிப் பகுதியில் பாம்புக் கடிக்கு இலக்கான இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நாவற்குழி பகுதியைச் சேர்ந்த 17வயது த.பிரவீன் என்பவரே சிகிச்சை பெற்று வருகிறார். மேலும் மீசாலையைச் சேர்ந்த 58 வயது சி.அன்னப்பூரணம் என்ற பெண்ணும் இனந்தெரியாத விசக்கடிக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (இ-30)

## கலைஞர்களின் தகவல் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

“கலாசார அலுவல்கள் திணைக்களம் நாடு முழுவதும் இருக்கின்ற கலைஞர்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து ஒரு தரவுத் தளத்தை அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. எனவே தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவைச் சார்ந்த கலைஞர்கள் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து 2018.08.28 ஆம் திகதிக்கு முன்னர் கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்” என தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (இ

## வாகன விபத்தில் இருவர் பலி

(கண்டி)

கண்டி, பேராதனை பல்கலைக்கழகப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள கலஹா வீதியிலேயே குறித்த விபத்து நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது. குறித்த விபத்தில் 36 மற்றும் 37 வயதுடைய இருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலும் இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கலஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நீடாரச் சென்ற இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழப்பு!

(கொழும்பு)

கலென்பிதுனுவெவ, திவுல்வெவ பகுதியில் நீராட சென்ற 17 வயது இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் மாலை குறித்த இளைஞன் நீராட சென்ற சந்தர்ப்பத்தில் நீரில் மூழ்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பிரதேசவாசிகள் ஒன்றிணைந்து குறித்த இளைஞனை மீட்டு கலென்பிதுனுவெவ வைத்தியசாலையில் அனுமதித்த போதும் குறித்த இளைஞன் உயிரிழந்து விட்டதாக தெரியவருகிறது. (இ-7)

## நன்னீர் மீன் உற்பத்தி அபிவிருத்தி செயற்றிட்டம்

(தம்புள்ளை)

கலேவல தம்புள்ளை பிரதேச செயலாளர் பிரிவுகளில் நன்னீர் மீன் உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த செயற்றிட்டத்திற்கு 150 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நன்னீர் மீன்குஞ்சு உற்பத்தி நிலையம் ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நன்னீர் மீன்வளர்ப்பில் ஈடுபட விரும்புவோருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் கடன் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தம்புள்ளை பிரதேச செயலாளர் எம்.யூ.நிஷாந்த தெரிவித்துள்ளார், (இ-7)

## தற்போதைய அரசியல் வியாபாரம் மக்கள் சேவையாக வேண்டும்

(கொழும்பு)

தற்போதுள்ள அரசியல் வியாபாரத்தை மக்கள் சேவையாக மாற்ற வேண்டிய காலம் வந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. அதற்காக கிராமிய மட்ட த்திலுள்ள மக்களை மாற்ற வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். கொட்டாவ பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப் பொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். (இ-7)




## நீலனும் மாணவர்களும்



வனத்தின் அடிவாரத்தைத் தாண்டி வேர்களும் உருட்டுக் கற்களும் நிறைந்த ஒற்றையடிப் பாதையில் அவர்கள் நடந்து சென்று கொண்டிருந்தனர்.

முதலில் ஆதிவாசிச் சிறுவன் நீலனும் அவனுக்குப் பின்னால் இரண்டு பேராசிரியர்களும் அடுத்து இருபது மாணவர்களும் கடைசியில் வன அலுவலரும் நடந்து கொண்டிருந்தனர்.

"இது காட்டுப்பன்றி நடமாடும் இடம். அதோ இடக்கைப் பக்கம் தெரியுதே ஒரு பாதை. அது மான் நடமாடும் இடம். இனிமேல் எதுவும் பேசாதீங்க. நான் சொல்வதை மட்டும் கேட்டுக்கோங்க. அந்தப் பாறைகளுக்குப் பின்னால் பாருங்க, புலி நடமாடுற இடம்" என்றதும் அனைவரும் அமைதியாகவும் சிறிது பயத்துடனும் நடந்து சென்றனர்.

நகரத்தில் இருக்கும் கல்லூரியில் வன இயல் படிப்பவர்கள் இந்த மாணவர்கள். வனத்தில் ஒருநாள் தங்கி, நேரடியாக அனுபவத்தைப் பெறுவதற்காக வந்திருக்கிறார்கள். மாலை நான்கு மணி வரை நடந்தவர்கள், களைத்து ஒரு பாறையில் அமர்ந்தனர். அருகில் ஓர் ஓடை சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது.

ஆதிவாசி மக்கள் பிட்டு, சுண்டல், பானகம் போன்றவற்றை அனைவருக்கும் வழங்கினார்கள். ருசித்துக்கொண்டே அன்றைய நிகழ்வுகளை விவாதித்தனர். அப்போது ஒரு குரங்குக் கூட்டம் ஓடையில் குதித்து விளையாடிக்கொண்டிருந்தது. அதைக் காட்டினான் நீலன். உடனே மாணவர்களும் ஓடையில் குதித்து. ஆசை தீர விளையாடினார்கள்.

பின்னர் ஒரு பெரிய மரத்தின் மீது கட்டப்பட்ட மர வீட்டுக்கு. ஏணி மூலம் ஏறிச் சென்றனர். வன அலுவலர் பேச ஆரம்பித்தார்.

"மாணவர்களே, வனத்தைப் பற்றி அறிந்துகொள்ள வனத்திலேயே வாழும் நீலனைத் தவிர வேறு யாரும் பொருத்தமாக இருக்க முடியாது. நீலன், உன்னுடைய அனுபவங்களை இவர்களுக்குச் சொல்லு" என்று அழைத்தார்.

"நான் அவ்வளவு பெரிய ஆளு இல்லைங்க" என்று நீலன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஏதோ சத்தம் கேட்டது. அங்கும் இங்கும் பார்த்தான். சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய பாறை மீது புலி தன் குட்டிகளுடன் விளையாடிக்கொண்டிருந்தது. ஒரு குட்டியை வாயால் கௌவி வீசியது. இன்னொரு குட்டி மீது பாய்ந்தது. பிறகு பாறைக்குப் பின்னால் ஒளிந்துகொண்டது. குட்டிகள் தாயைத் தேடி ஓடின.

"நீங்க எல்லாம் கொடுத்து வச்சவங்க. இந்த அற்புதமான காட்சி எல்லோருக்கும் பார்க்கக் கிடைக்காது!" என்றான் நீலன்.

"காட்சி அற்புதமாக இருந்தாலும் திக்திக்குனு அடிச்சிக்குது" என்றார்கள் மாணவர்கள்.

"தாய்ப்புலி, தன் குட்டிகளுக்கு எப்படி வேட்டையாடணும், எதிரியைக் கண்டால் எப்படி ஓடி ஒளியணும்னு கத்துக் கொடுக்குது. புலி பலசாலி. மனிதர்களைத் தவிர எதுக்கும் பயப்படாது. புலி வனத்தைக் காப்பாத்துது. அதனால் வனம் செழிக்குது. மான் போன்ற விலங்குகளின் எண்ணிக்கை புலியால் கட்டுப்படுத்தப்படுது. இல்லைன்னா அவை பெருகி வனத்தையே சாப்பிட்டுக் காலி செய்துவிடும்" என்றான் நீலன்.

"நீ சொல்ற தகவல்கள் சுவாரசியமா இருக்கு மேலே சொல்லு" என்றார்கள் மாணவர்கள்.

"யானை மிகப் பெரிய விலங்கு. பலசாலி. காட்டுக்குள் செடி, கொடிகளை உரசிக்கிட்டுப் போகும். அப்போது பூக்களில் உள்ள மகரந்தம் யானையின் உடலில் ஒட்டிக்கும். யானை அடுத்த செடிக்குப் போகும்போது மகரந்தம் ஒட்டிக்கொண்டு, மகரந்தச் சேர்க்கை நடக்குது. புலி சாப்பிடும் மிச்சத்தைச் சாப்பிட்டு வனத்தைச் சுத்தம் செய்கின்றன கழுதைப்புலிகளும் கழுகுகளும். பறவைகள் பழங்களைச் சாப்பிட்டு கழிவு வழியே விதைகளை வெளியேற்றுகின்றன.

அதனால் புதிதாகச் செடி, கொடிகள் முளைக்கின்றன. வண்டுகளும் பூச்சிகளும் பூந்தேனை உண்டு மகரந்தச் சேர்க்கைக்கு உதவுகின்றன. தானாங்காச்சி மரம்னு ஒண்ணு இருக்கு. நாளைக்குக் காட்டறேன். அந்த மரத்தின் விதையைத் தூக்கிப் போட்டால், காற்றுக்குச் சுற்றிக்கொண்டே வேற இடத்தில் போய் விழும். இதனால் அங்கே புதுசா மரம் உருவாகும். எனக்குத் தெரிஞ்சது இவ்வளவுதாங்க" என்றான் நீலன்.

எல்லோரும் சத்தம் வராமல் கைதட்டி, மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

"நாங்க கல்லூரியில் படித்ததைவிட நீலன் கிட்ட நிறைய தெரிஞ்சுக்கிட்டோம். அனுபவ மேதை" என்று நீலனைப் பாராட்டினார் ஒரு பேராசிரியர்.

இரவு வெகுநேரம் நீலனுடன் உரையாடிவிட்டு, பூச்சிகளின் ரீங்காரத் தாலாட்டைக் கேட்டுக்கொண்டே உறங்கினார்கள் மாணவர்கள்.

## பொது அறிவு முத்துக்கள்





- ➢ உலகில் முதன் முதலாக கரும்பு பயிரிட்ட நாடு - இந்தியா
- ➢ உலகில் உள்ள தண்ணீரின் அளவு - 71 விழுக்காடு
- ➢ பைபிள் முதன்முதலில் எழுதப்பட்ட மொழி - எபிரேயம்
- ➢ முதன்முதலில் மேயர் பதவியை அறிமுகப்படுத்திய நாடு - இங்கிலாந்து
- ➢ ஆமையின் நீந்தும் வேகம் - மணிக்கு 20 கி.மீ.
- ➢ ஆக்ரா கோட்டையைக் கட்டியவர் - அக்பர்
- ➢ எக்ஸ்ரே கதிர்கள் ஊடுருவ முடியாத உலோகம் - ஈயம்
- ➢ ஐரோப்பாவிற்கு சர்க்கரையை கொண்டு சென்று அறிமுகப் படுத்தியவர் - அலெக்ஸ்சாண்டர்

## பொன்மொழிகள்

- உன்னிடமுள்ள திறமை எவ்வளவு சிறிதாக இருந்தாலும் பயன்படுத்தத் தயங்காதே. இனிய குரல் கொண்ட பறவைகள்தான் பாட வேண்டும் என்றால் காடு அமைதியாகி விடும். - ஹென்றி வேன்டேக்
- நான் எதையும் சாதிக்கக்கூடியவன் என்ற நம்பிக்கையுடன் நீ இருந்தால், பாம்பின் விஷம் கூட உன்னிடம் செயலிழந்துவிடும் - விவேகானந்தர்
- வாழ்க்கையை வளமாக்க விரும்பினால் காலத்தை வீணாக்காதே. காலத்தால் செய்யப்பட்டதே வாழ்க்கை - ரிச்சர்ட் சாண்டர்ஸ்
- திறமை எனும் தாயும் உழைப்பு எனும் தந்தையும் பெற்றெடுத்த அழகுக் குழந்தையே புகழ் - பாஸ்கல்
- எது தேவை? முடிவு செய்ய மனம், வழி வகுக்க அறிவு, செய்து முடிக்க கை - கிரேக்கப் பொன்மொழி
- ஒருவன் தனக்காக, தன் வாழ்க்கைக்காக உழைக்கும்போது மனிதனாகிறான். ஒரு சமூகத்திற்காக, மக்களுக்காக வாழும்போதுதான் அவன் உண்மையான மனிதனாகிறான் - கார்ல் மார்க்ஸ்
- மனித மனத்தில் தோன்றும் நல்ல எண்ணங்களே இந்த உலகின் மிகச் சிறந்த வைரங்கள் - பீட்டர் மார்சன்




- 1770-கப்டன் ஜேம்ஸ் குக் கிழக்கு அவுஸ்திரேலியாவில் தரையிறங்கி அதனை பெரிய பிரித்தானியாவுக்குச் சொந்தமாக்கி அதற்கு நியூசவுத் வேல்ஸ் எனப் பெயரிட்டான்.
- 1821-ஜார்விஸ் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.
- 1831-கறுப்பின அடிமைகளுக்குத் தலைமை தாங்கி நாட்டர்னர் கிளர்ச்சியைத் தொடங்கினார்.
- 1863-அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புத் தீவிரவாதிகளின் தாக்குதலில் கன்சாஸ் மாநிலத்தில் லோரன்ஸ் நகரம் அழிக்கப்பட்டதி.
- 1920-சேர் ஏ.கனகசபை இலங்கையின் அரசியல் நிர்ணய சபைக்கு தமிழ்ப் பிரதிநிதியாகத் தெரிவானார்.
- 1945-இரண்டாம் உலகப் போர்: சாலமன் தீவுகள் தொடர் சமர் முடிவடைந்தது.
- 1959-ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் 50 ஆவது மாநிலமாக இணைக்கப்பட்டது.
- 1963-தெற்கு வியட்நாமின் குடியரசு இராணுவத்தினர் நாட்டின் பௌத்த தலங்களை அழித்து நூற்றுக்கணக்கானோரைக் கொன்றனர்.
- 2007-சூறாவளி டீன் மெக்சிகோவை 165 மைல்/மணி வேகத்தில் தாக்குதலை ஆரம்பித்தது.

**பிறப்புகள்**

- 1907-ப.ஜீவானந்தம், இந்தியப் பொதுவுடைமைவாதி (இ. 1963)
- 1929-மன்னார்குடி பரமசிவம் பிள்ளை, தமிழக நாதஸ்வரக் கலைஞர் (1976)
- 1961-வ.பி.சந்திரசேகர், இந்தியத் துடுப்பாட்ட வீரர்
- 1963-ராதிகா, தமிழகத் திரைப்பட நடிகை, தயாரிப்பாளர்
- 1973-சேர்ஜி பிரின், கூகுள் நிறுவனர்
- 1978-பூமிகா சாவ்லா, இந்திய நடிகை
- 1984-நியூல் டெக்ஸ்டர், தென்னாபிரிக்கத் துடுப்பாட்ட வீரர்
- 1984-பருன் சொப்டி, இந்திய நடிகர்
- 1985-மேலீசா, பிரெஞ்சுப் பாடகி
- 1986-உசேன் போல்ட், ஜமைக்கா ஓட்டவீரர்

**இறப்புகள்**

- 1981-காகா காலேல்கர், இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி. 1895)
- 1995-சுப்பிரமணியன் சந்திரசேகர், நோபல் பரிசு பெற்ற இந்திய இயற்பியலாளர் (பி. 1910)
- 2004-சச்சிதானந்த ராவுத்ராய், இந்திய ஒரியக் கவிஞர் (பி. 1916)
- 2006-பிசுமில்லா கான், இந்திய செனாய் இசைக் கலைஞர் (பி. 1916)

**சிறப்பு நாள்**

- இளைஞர் தினம் (மொரோக்கோ)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 160 | 100 | 70 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 120 | 180 | 160 | 200 |
| தக்காளி | 60 | 90 | 70 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 40 | 40 |
| கோவா | 140 | 130 | 120 | 80 | 160 |
| கரட் | 200 | 400 | 400 | 300 | 400 |
| பூசணி | 80 | 60 | 70 | 50 | 100 |
| புடோல் | 50 | 70 | 60 | 60 | 80 |
| வாழைக்காய் | 100 | 90 | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 120 | 90 | 120 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 110 | 90 | 120 |
| பாகற்காய் | 150 | 160 | 130 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 30 | 50 | 30 | 40 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 100 | 70 | 120 |
| பயற்றங்காய் | 80 | 80 | 60 | 55 | 80 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 80 | 110 | 120 | 80 | 120 |
| கறிமிளகாய் | 120 | 150 | 180 | 220 | 200 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 80 | 50 | 120 |
| போஞ்சி | 200 | 180 | 170 | 220 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 100 | — | 50 | 120 |
| கீரை-1பிடி | 30 | 25 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 30 | 30 | 50 | 50 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 180 | 140 | 120 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 120 | 130 | 90 | 160 |
| முள்ளங்கி | 30 | 50 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 40 | 60 | 60 | 110 | 80 |

கொடுமைகளுக்கு இடையே
உண்மை வெற்றி பெறும்!
– ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சந்தர்ப்பம் தவறவிடப்பட்டால் நாட்டைப் பிரிப்பது யார்?

அடுத்த கூட்டம் தமிழீழத்தில் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் அந்தக் காலத்தில் முற்றவெளியில் கூற, அதற்கு கூடியிருந்தவர்கள் அத்தனை பேரும் ஆர்ப்பரித்துக் கரகோசம் செய்து எங்கள் வாக்கு உங்களுக்கே என்றுரைத்தது மட்டுமன்றி அதனை நிறைவேற்றியும் வைத்தனர்.

ஆனால் அடுத்த கூட்டம் தமிழீழத்தில் என்று ஓங்கு குரலில் கூறியவர்கள் தங்கள் தேர்தல் விளம்பரம் தமிழ் மக்களிடம் சிறப்பாகச் சென்றடைந்தது என்றளவில் தங்கள் நலனோடு அரசியலை மட்டுப்படுத்திக் கொண்டனர்.

இது அன்று நடந்தது என்றால் பேசாமல் விட்டுவிடலாம். ஆனால் இன்றும் அதே தேர்தல் விளம்பரம் தொடர்கிறது.

என்ன செய்வது எங்கள் மக்கள் இன்னமும் உண்மையைக் கண்டறியமுடியாதவர்களாக இருப்பதால், அவர்கள் தங்கள் தேர்தல் விளம்பரத்தை சிறப்பாகச் செய்து முடிக்கின்றனர்.

அன்று அடுத்த கூட்டம் தமிழீழத்தில் என்றார்கள். இப்போது நாடு பிரிவுபடாமல் இருக்க வேண்டுமாயின்... என்கிறார்கள்.

சொற்பதம் வித்தியாசமேயன்றி பொருள் ஒன்றென்பதுதான் இங்கு கவனிக்கத்தக்க விடயம்.

நாடு பிரிவுபடாமல் இருப்பதாக இருந்தால்..., என்று தமிழ் அரசியல் தரப்புக் கூறுகின்றதெனில், அதன் பொருள் நாடு ஒன்றாக இருக்க வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம் போல நாம் கூறிக் கொள்ள முற்படுகின்றோம். இவ்வாறு கூறுவது ஒரு நடிப்பாகவே மற்றவர்களால் பார்க்கப்படும்.

இனப்பிரச்சினைக்குரிய தீர்வை அரசாங்கம் காணத்தவறுமாயின் நாடு பிரிவுபடுவது தவிர்க்க முடியாததென்றால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அதுநல்லதான விடயமாகவே இருக்கும்.

அவ்வாறு தமிழ் மக்களுக்கு நல்லது நடக்க இருப்பதை நாம் பகிரங்கப்படுத்தி அதனை அரசாங்கத்துக்கு தெரியப்படுத்துவதன் நோக்கம் என்ன என்ற கேள்வி எழவே செய்யும்.

இங்குதான் நாங்கள் உடன்பாட்டுப் போலிக்கு உட்படுகின்றோம். அதாவது நடக்காத ஒன்றை நடக்கும்போல் கூறி நாம் மக்களை நம்பவைப்பது, இத்தகைய போக்குகள் அன்று முதல் இன்றுவரை தொடர்வதுதான் வேதனைக்குரியது.

அதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில்; யதார்த்தம், சமகாலப் போக்கு என்பன பற்றிச் சிந்தித்து எங்களுக்கான நடைமுறைச் சாத்தியம் பற்றிப் பேசவேண்டும் எனக் கூறுகின்ற ஒருவர், நாடு பிரிவுபடாமல் இருப்பதற்கு இதுதான் கடைசிச் சந்தர்ப்பம் என்று கூறுகிறார் எனில்,

அதன் பொருள் எல்லாம் அவுட்டாகிவிட்டது எதுவும் எங்களுக்காக நடக்கப் போவதில்லை.

இந்நிலையில்தான் நடைமுறைச் சாத்தியம் என்ற எல்லையை மீறி கடைசிச் சந்தர்ப்பம் என்று கூறியுள்ளார்.

இலங்கை அரசுக்கு இது கடைசிச் சந்தர்ப்பம் என்றால், இந்தக் கடைசிச் சந்தர்ப்பத்துக்குள் இலங்கை அரசு இனப்பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் நாட்டைப் பிரித்து எங்களுக்குத் தருவது யார்? என்பதுதான் இப்போது எழுகின்ற கேள்வி.

# வெளிநாடுகளிலிருந்து தொழிலாளர்களை கொண்டு வரவேண்டிய நிலை உருவாகும்

## அமைச்சர் மங்கள எச்சரிக்கை

(கொழும்பு)

இளைஞர்கள் நாட்டிற்குள் நிலவும் சில தொழில் வாய்ப்புகளை நிராகரிப்பார்களாயின் அத் தொழில் வாய்ப்புகளுக்கு வெளிநாடுகளிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டு வரவேண்டி வரும் என நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அரசாங்க தொழில் வாய்ப்புகளைப்பெறுவதற்காக அமைச்சர்களின் காரியாலயங்களுக்கு முன்னால் மக்கள் காததுக் கொண்டிருக்கும் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும். மக்களுக்கு அரச தொழில்வாய்ப்பு வழங்குவதற்கு வெற்றிடம் இல்லை. அந்தளவுக்கு அரச திணைக்களங்கள் அனைத்திலும் தொழிலாளர்கள் நிரம்பியுள்ளனர்.

ஆயிரம் பேருக்கு தொழில வாய்ப்பு வழங்க வேண்டிய அரச திணைக்களங்களில் 3 ஆயிரம் தொழிலாளர்கள் வரையில் உள்ளனர். அவ்வாறான வேலைத்திட்டத்தில் நானும் கடந்த காலங்களில பங்காளராகியுள்ளேன். உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவான பின்னர் வெற்றிடம் இல்லாத தொழில் வாய்ப்புகளுக்கும் தமது ஆதரவாளர்களை உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றனர். அதன்மூலம் அத் திணைக்களங்கள் மீண்டும் நட்டநிலைக்குச் சென்று விடுகின்றன.

மத்திய கிழக்கு நாடுகளில் வழங்கப்படும் சம்பளத்தையும் விட அதிகளவான சம்பளம் பெறும் சாதாரண தொழில் வாய்ப்புகள் நாட்டில் உள்ளன. எனினும் அத் தொழில் வாய்ப்புகளை வகிப்பதற்கு எம்மவர்கள் வெட்கப்படுகின்றனர். இருந்தபோதிலும் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று கூலித்தொழில் செய்கின்றனர். இவ்வாறு சென்றால் நாட்டில் நிலவும் அவ்வாறான தொழில் துறைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டுவரவேண்டிய நிலை ஏற்படும். அப்போது வெளிநாட்டிலுள்ளவர்களுக்கு தொழில வாய்ப்பு வழங்குவதாக கோஷமிட வேண்டாம்.

மேலும் சிலர் அரச தொழில் வாய்ப்புகளை எதிர்பார்க்காது முச்சக்கரவண்டி ஓட்டுநர்களாகவும்ஏனைய சுய தொழிலகளிலும் ஈடுபடு கின்றனர். என்னைப் பொறுத்தவரை முச்சக்கரவண்டி ஓட்டுநர்களாக தொழில் புரிபவர்கள் 35 வயதைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்ற ஏற்பாட்டுடன் முரண்படுகிறேன்.

ஏனெனில் தமக்கு தொழில் வாய்ப்பு இல்லாத சந்தர்ப்பத்தில் முச்சக்கரவண்டியையாவது ஓட்டித் தொழில் செய்து வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு அவர்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

"என்டபிரைஸ் ஸ்ரீலங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மக்களுக்குகடனுதவிவழங்கும நிகழ்வு மாத்தறை உயன்வத்தையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மங்கள மேலும்தெரிவித்துள்ளார். (இ-7)

## வீதிகளில் குப்பை கொட்டிய ஐவருக்கு நீதிமன்றம் தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரில் பொது இடங்களில் குப்பை கொட்டிய குற்றச்சாட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட 5 குடியிருப்பாளர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாண மாநகர வீதி ஓரங்களில் குப்பை கொட்டியதாக 5 குடியிருப்பாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் தனித்தனியே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் சின்னதுரை சதீஸ்தரன் முன்னிலையில் இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு வந்தன.

குடியிருப்பாளர்கள் ஐவரையும் எச்சரித்த நீதவான், தலா 5 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்து அவர்களை விடுவித்தார். (ம)

## நிர்மாண வேலைகளை அளவிட்டு அறிக்கை பெற நிபுணத்துவ குழு

### யாழ்.மாநகர சபையில் தீர்மானம்

யாழ். மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முன் அந்தந்த துறைசார் நிபுணத்துவமுடைய சுயாதீன குழுவின் அறிக்கை பெறப்படும் என்று யாழ். மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் மாதாந்த கூட்டம் மாநகர மேயர் ஆர்னோல்ட் தலைமையில் நேற்று இடம்பெற்றது.. இந்தக் கூட்டத்தில், யாழ்ப்பாணம் சீனியர் ஒழுங்கையில் உள்ள உப வீதி செப்பனிடல் தொடர்பில் மாநகர சபை உறுப்பினர் எஸ்.மயூரன் முறைப்பாடொன்றைச் சபையில் முன்வைத்தார்.

இதன்போது குறுக்கிட்ட மாநகர சபை உறுப்பினர் இரா. செல்வவடிவேல், வீதிகள் தரமற்றதாகப் போடப்பட்டிருப்பதாகவும் வரும் மழை காலத்தில் அந்த வீதி இடிந்து குண்டும் குழியுமாகும் அபாயமுள்ளதாகவும் சுட்டிக் காட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் இடம்பெற்ற விவாதத்தின் போது கருத்துத் தெரிவித்த மாநகர சபை உறுப்பினர் ம.அருள்குமரன், நிர்மாண வேலைகள் மற்றும் திட்டங்கள் முடிவடைந்தபின் வேலைகளை மதிப்பீடு செய்து, வேலைகளுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முன் அந்தந்த துறைசார் நிபுணத்துவமுடைய சுயாதீன குழுவின் அறிக்கை பெறப்பட வேண்டும் என முன்மொழிந்தார். மாநகர சபை உறுப்பினர் என்.எம்.பாலச்சந்திரன் அதனை வழிமொழிய சபை அந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது. (ம-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**கடவுளின் திருவுருவ வழிபாடு சிறந்ததா? தியான நிலை சிறந்ததா?**

இறைவனின் மேலான கருணையைப் பெற திருவுருவ வழிபாடு, தியான நிலை வழிபாடு இவ்விரண்டு நிலைகளுமே சிறந்தது.

**திருவுருவ வழிபாடு:** திருவுருவ வழிபாடு என்பது வேங்கடநாதரை பேருந்தில் சென்று தரிசனம் செய்வதற்கு ஒப்பாகும்.

**தியான நிலை வழிபாடு:** தியான நிலை வழிபாடு என்பது கால்நடையாக வேங்கடமலைமீது பயணித்து வேங்கடநாதரை தரிசனம் செய்வதற்கு ஒப்பாகும். தியான நிலை வழிபாட்டிற்கு மனதில் தெய்வ வைராக்கியம் வேண்டும். இல்லறத்தில் ஒன்றி இருப்பவர்களுக்கு ஒத்து வராது.

*(தொடரும்)*

## அலங்கார உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அராலி கிழக்கு மெய்ஞான வைரவர் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 31ஆம் திகதி வரை 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

தினமும் அதிகாலை 5.30 மணியளவில் தீபாராதனை பூஜைகளும் காலை 9 மணி தொடக்கம் கும்ப பூஜை, அபிஷேக பூஜை என்பன நடைபெறும்.

மாலை 5.30 மணிக்கு பஜனை ஆரம்பமாகி 6.30 மணிக்கு தீப பூஜையுடன் நிறைவுபெறும்.

இறுதி நாளான எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (இ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- நம் ஒவ்வொருவரிடமும் எல்லையற்ற ஆற்றலும், தூய்மையும், மகிழ்ச்சியும் நிறைந்திருக்கின்றன.
- என்னால் முடியும் என்று நினைத்து செயலாற்றினால் அனைத்தையும் செய்து முடிப்பீர்கள்.
- மனிதனைப் பிணைத்திருக்கும் பந்தம் என்னும் கட்டுகள் அனைத்தும் கடவுளின் கருணையால் மட்டுமே அவிழும்.
- தூய்மையான நல்லெண்ணம் கொண்டவர்கள் இந்தப் பிறவியிலேயே கடவுளைக் காணும் பேறு பெறுவர்.
- உலகத்தைப் போல நம் உள்ளமும் பரந்து விரிந்ததாக இருக்கட்டும்.
- மனிதனை உருவாக்குவதில் இன்ப துன்பம் இரண்டும் சமமான இடத்தைப் பெறுகின்றன.
- தன்னைச் சரிபடுத்திக் கொண்டால் உலகையும் சரிப்படுத்தும் தகுதியைப் பெற முடியும்.
- இன்பத்தை விட துன்பமே சிறந்த ஆசானாக இருந்து நமக்கு வழிகாட்டுகிறது.
- மனித உயர் தெய்வத்தன்மை கொண்டது, ஆனால், ஜடப்பொருளின் கட்டுக்குள் அகப்பட்டு கிடக்கிறது.

# வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக் பிளே ஓவ் சுற்றில் 4 அணிகள்









வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின் பிளே ஓவ் சுற்றுக்கு ரில்கோ கொங்கியூறஸ், கிளியூர் கிங்ஸ், வல்வை எப்.சி. மற்றும் மன்னார் எப்.சி. அணிகள் தகுதி பெற்றுள்ளன.

வடக்கு, மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு,கிழக்கு பிறிமியர் லீக்கின் போட்டிகள் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு, கிளிநொச்சி உதய தாரகை விளையாட்டு மைதானம் மற்றும் கழுகுகள் மைதானங்களில் நடைபெற்றது.

சம்பியனாகும் அணிக்கு 5 மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையில் அதிகூடிய பரிசில் பொதிகளை உள்ளடக்கிய வகையில் நடைபெறும் இந்த பிறிமியர் லீக்கில் கிளியூர் கிங்ஸ், தமிழ் யுனைட்டட், ரில்கோ கொங்கியூறஸ், மன்னார் எப்.சி, றிங்கோ ரைரன்ஸ், வவுனியா வாரியர்ஸ்,. நொதேர்ன் எலைட், முல்லை பீனிக்ஸ், வல்லை எப்.சி, மட்டுநகர் சுப்பர் கிங்ஸ், அம்பாறை அவஞ்சேர்ஸ், மாதோட்டம் எப்.சி. ஆகிய 12 அணிகள் பங்குபற்றின.

முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் இடம்பெற்றன. அந்த வகையில், 11 சுற்றுக்களாக நடைபெற்ற லீக் சுற்று ஆட்டங்களில் ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் ஒரு தடவை மோதின.

லீக் சுற்று தொடங்கியது முதல் வெற்றிகளையே தொடர்ச்சியாகப் பதிவு செய்து வந்த ரில்கோ கொங்கியூறஸ் அணி 8 ஆவது சுற்று ஆட்டங்கள் நடைபெறும் போதே தமது பிளே ஓவ் சுற்றை உறுதிப்படுத்தியது. ரில்கோ கொங்கியூறஸ் அணி விளையாடிய 11 போட்டிகளில் 10 போட்டிகளில் வெற்றிபெற்று 30 புள்ளிகளுடன் புள்ளி பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்து பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெறுகின்றது.

இரண்டா வதாக, கிளி யூர் கிங்ஸ் அணி, 11 போட்டிகளில் 8 போட்டிகளில் வெற்றியும், 1 போட்டியில் சம நிலையும் பெற்று 25 புள்ளிக ளுடன் உள்ளது.

மூன்றாவதாக வல்வை எப்.சி. அணி 11 போட்டிகளில் 7 போட்டிகளில் வெற்றிபெற்றும், 3 போட்டிகளை சமநிலையில் முடித்தும், 24 புள்ளிகளுடன் உள்ளது.

நான்காவது இடத்தில், மன்னார் எப்.சி. அணி 11 போட்டிகளில் 7 போட்டிகளில் வெற்றிபெற்று 3 போட்டிகளை சமநிலையில் முடித்து 24 புள்ளிகளுடன் உள்ளது.

பிளே ஓவ் சுற்றின் முதல் போட்டியில், புள்ளிப் பட்டியலில் முதலிரு இடங்களையும் பெற்ற ரில்கோ கொங்கியூறஸ் அணிக்கும் கிளியூர் கிங்ஸ் அணிக்கும் இடையிலான போட்டி 20 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது. இதில் வெற்றிபெறும் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெறுவதுடன், தோல்வி பெறும் அணியானது இரண்டாவது சந்தர்ப்பத்திற்காக காத்திருக்கும்.

தொடர்ந்து இன்று 21 ஆம் திகதி நடைபெறும் பிளே ஓவ் சுற்றின் இரண்டாவது போட்டியில் வ்வல்வை எப்.சி.அணியை எதிர்த்து மன்னார் எப்.சி. அணி மோதவுள்ளது. இதில் தோல்வியடையும் அணி, சுற்றிலிருந்து வெளியேறும்.

வெற்றிபெறும், அணியானது, பிளே ஓவ் முதல் போட்டியில் தோல்வியுறும் அணியுடன் மோதும். இந்தப் போட்டியே இறுதிப்போட்டிக்கான இரண்டாவது அணியை தெரிவு செய்யும்.இந்தப் போட்டி 23 ஆம் திகதி நடைபெறும். (க-26)

# மன்னார் எப்.சி. அணி வெற்றி



வடக்கு, கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றனர்.

இதில், 11 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

லீக் சுற்றின் 61 ஆவது போட்டியில் மன்னார் எப்.சி. அணியை எதிர்த்து முல்லை பீனிக்ஸ் அணி மோதியது.

மன்னார் எப்.சி. அணியின் ஜி.அன்ரு டிலக்ஸன் 15, 25 மற்றும் 61 ஆவது நிமிடங்களில் ஹெட்ரிக் கோல்களை அடித்தார். 76 ஆவது நிமிடத்தில் மன்னார் அணியின் எம்.டபிள்யூ. எம்.இசாதீன் கோல் ஒன்றை அடித்தார்.

பதிலுக்கு தமது முதலாவது கோலை 79 ஆவது நிமிடத்தில் முல்லை பீனிக்ஸ் அணி அடித்தது. அந்தக் கோலை, ஏ.ஜேசுரட்ணம் அடித்தார்.

தொடர்ந்து, 85 ஆவது நிமிடத்தில் மன்னார் அணியின் எம்.என்.எம். றமீஸ் கோல் ஒன்றை அடித்தார். முடிவில், மன்னார் எப்.சி. அணி, 05:01 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. (க-26)

# வல்வை எப்.சி.அணிக்கு இலகு வெற்றி



வடக்கு, கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில், 11 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது. லீக் சுற்றின் 62 ஆவது போட்டியில் வல்லை எப்.சி. அணியை எதிர்த்து ரிங்கோ ரைரன்ஸ் அணி மோதியது.

போட்டியில் தனித்து ஆடிய வல்வை எப்.சி. அணி 26, 50, 72, 73 மற்றும் 82 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல்களைப் போட்டு, 05:00 என தமது வெற்றியை உறுதி செய்தது. ஞானரூபன் 2 கோல்களையும், அகீபன், கலிஸ்ரர் மற்றும் துசிகரன் ஆகியோர் தலா ஒரு கோலையும் அடித்தனர். (க-26)





கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் தமிழரின் பாரம்பரிய விளையாட்டான மாட்டுவண்டில் சவாரி சிறப்பாக இடம்பெற்றது. குறித்த விளையாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி பூநகரி நல்லூரில் அமைந்துள்ள சவாரி திடலில் இடம்பெற்றது. குறித்த போட்டிக்காக யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 70 ஜோடி மாடுகள் அழைத்து வரப்பட்டன. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற குறித்த போட்டியில் பலரும் ஆர்வத்துடன் பங்கு கொண்டனர். (க)

## சுவர் இடிந்து வீழ்ந்ததில்...

சேர்ந்தவரும் முறிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இரண்டு பிள்ளைகளின் தந்தையான கதிரவேலு வசந்தகுமார் (வயது 36) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் மண்டைதீவு முதலாம் வட்டாரத்தில் உள்ள வீடு ஒன்றுக்கு மேசன் வேலை செய்வதற்காக சென்றுள்ளார்.

குறித்த வீடு பழைய வீடு என்பதால் சுவர்களை திருத்தம் செய்யும் பணியில் நேற்று ஈடுபட்டிருந்தனர். அப்போது குறித்த நபர் நின்றிருந்த பகுதிக்கு எதிர்திசையில் இருந்த சுவரில் வெடிப்பு ஏற்பட்டிருந்தது. இந் நேரத்தில் குறித்த சுவர் இடிந்து குறித்த நபரின் முதுகுப்புறமாக விழுந்துள்ளது.

உடனடியாக அவரை மீட்ட ஏனைய வேலையாட்கள் அவரை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தார்கள். சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி சில மணி நேரத்தில் அவர் பரிதாபமாக உயிரிழந்தார். (ம-9)

## உறுப்பினர் ஒருவர்...

தியாகி திலீபனின் தூபியை சுற்றியுள்ள வேலியை அமைப்பதாக தீர்மானித்து அதற்கான பணி இடம்பெற்றவேளையில் புலனாய்வாளர்கள் அச்சுறுத்துவதாக பணியாளர்கள் பணிக்கு மறுத்திருந்தனர்.

இந்த நிலையில் சபை உறுப்பினர் பார்த்தீபன், குறித்த பணியை வெளி ஆட்களை கொண்டு பொறியியலாளரின் அனுமதியுடன் குறித்த வேலி அமைக்கும் பணியை நிறைவு செய்திருந்தார்.

இந்த விடயம் குறித்து சபையில் ஏனைய உறுப்பினர்கள் கேள்வியெழுப்பியிருந்தனர். அதாவது தனி உறுப்பினர் ஏன் இதை மேற்கொண்டார் ஏனைய உறுப்பினர்கள் அனைவருக்கும் அறிவித்திருந்தால் அவர்களும் அங்கு வந்து குறித்த பணியை மேற்கொண்டிருப்பார்கள் என தெரிவித்தனர்.

இந்த விடயம் குறித்து பொறியியலாளர் வீளக்கமளித்த போது, சபை பணியாளர்கள் இருநாள் பணியாற்றிய நிலையில் தொடர்ந்தும் பணியாற்ற முடியாது . எனவும் குறித்த இடத்துக்கும் வீடுகளிலும் வந்து புல னாய்வாளர்கள் அச்சுறுத்துவதாக குறிப்பிட்டமையினால் அந்த பணி நிறுத்தப்பட்டது

குறித்த பணி ஏன் நிறுத்தப்பட்டது என ஓர் உறுப்பினர் கோரினார் அச்சுறுத்தலே காரணம் முடிந்தால் வெளியாரை பயன்படுத்தி மேற்கொள்ளுமாறு கோரியபோதே அவர் அதனை மேற்கோண்டதாக பொறியியலாளர் கருத்துரைத்தார்.

அதே விடயத்தை உறுப்பினர் பார்த்தீபனும் தெரிவித்ததுடன், அனைத்து உறுப்பினர்களையும் தொலைபேசி மூலம் அழைக்க முடியாது நான் அவதானித்தேன் பின்னர் பொறியியலாளரின் அனுமதியுடன் மேற்கொண்டேன் என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து மாநகர முதல்வர் கருத்து தெரிவிக்கையில் தனிப்பட உரு உறுப்பினர் அமைப்பது முறையல்ல. அவ்வாறு நான் தெரிவிக்கவும் இல்லை. குறித்த விடயம் சபை ஆரம்பித்தவுடனேயே பணியும் ஆரம்பிக்கப்பட்டமை அனைவருக்கும் தெரியும். அதேநேரம் புலனாய்வாளர்கள் அச்சுறுத்தியமை எனக்கு தெரியாது.

இது பக்குவமாக செய்ய வேண்டும். செய்ய முடியாத நிலைக்கு கொண்டுவந்துள்ளீர்கள். முதல் வேலி அமைத்தவர்களை அச்சுறுத்திய புலனாய்வாளர்கள். பின்னர் வேலி அமைத்தவர்களை அச்சுறுத்தாதது கேள்விக்குரிய விடயம். பலர் கேள்வியெழுப்பியுள்ளார்கள். அதன் பின்னர் நடந்த விடயம் புலனாய்வாளர்களுக்கு தெரியவில்லையா என கேட்கிறார்கள்.

தூபிக்கான சுற்றுவேலி அமைப்பிற்கு நாடாளுமன்ற உறுப்பின் சி.சிறிதரன் 2017-ம் ஆண்டு ஒதுக்கிய 2 லட்சம் பணத்திலேயே இந்த சுற்றுவேலி அமைக்கப்பட்டது. எவ்வாறு தூபி அமைப்பிற்கு நடவடிக்கை மேற்கொண்டோமோ அதன் பிரகாரம் சபை பணியாளர்கள் சம்மதித்தாலும் சம்மதிக்காவிட்டாலும் பணி இடம்பெறும் என தெரிவித்தார்.

இது குறித்து ஆணையாளர் கருத்து தெரிவிக்கையில், வேலைத்திட்டம் கடந்த வருடம் பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்டது. அப்போது ஊழியர்கள் அதை மேற்கொள்ள முடியாத நிலை இருந்தது. தற்போது வேலை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து பணி எவ்வாறு நடைபெறுகிறது என கேட்டு அறிந்தேன் அப்போது வேலி அமைக்க ஊழியர்கள் தயாராக இல்லை என பொறியியலாளர் தெரிவித்தார். அந்த விடயத்தை கொழும்பில் இருந்து முதல்வருக்கு நான் தெரிவித்தேன் என தெரிவித்தார். (ம-9)

## போதனா வைத்தியசாலை...

யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில் மருத்துவர் ஒருவரை அச்சுறுத்தும் வகையில் அவரது வீடு தாக்கப்பட்டமையை கண்டித்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக நேற்று திங்கட்கிழமை மதியம் அரை மணிநேர கண்டன போராட்டத்தில் மருத்துவர்கள் ஈடுபட்டனர். (ம-9)

## பெரும்பான்மை...

செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், நாங்கள் விடுதலைப் புலிகளை அழித்துவிட்டோம். அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கான பின்னணியையும் அந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்குமான சூழலை உருவாக்கியிருக்கிறோம். அது போதுமானதல்ல.

சில தமிழ் அரசியல்வாதிகள், இன்னமும் பிரிவினைவாதம் பேச முயன்று கொண்டிருக்கிறார்கள். அதனை அனுமதிக்க முடியாது. தெற்கிலுள்ள சிங்கள மக்கள் அதற்கு இணங்கமாட்டார்கள் என தெரிவித்தார். (ம)

## 6 கைக்குண்டுகள்...

கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கைக்குண்டுகள், விடுதலைப் புலிகளின் காலத்தில் வீசப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம)

# மரண அறிவித்தல்



## அமரர் கந்தப்பு வேலாயுதம் (இந்திரன்)

(வங்கி முகாமையாளர்-சதாவதானி கதிரவேற்பிள்ளை சி.க.வ.கூ.ச)

பிறப்பு:25-09-1947

இறப்பு:20-08-2018

சாளம்பை புலோலி மேற்கு, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர் கந்தப்பு வேலாயுதம் நேற்று (20.08.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான கந்தப்பு-மாணிக்கம் தம்பதிகளின் புதல்வனும், அமரர்களான வேலுப்பிள்ளை-இரத்தினம் தம்பதிகளின் மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், திருமகள், திருச்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும், இளங்கோ, இராஜ்குமார் ஆகியோரின் மாமனாரும், கமலாம்பிகை, சபாபதிப்பிள்ளை, தங்கராஜா, பாலகிருஸ்ணன், அமரர் தர்மகுலசிங்கம் (ஜெயம்), கதிர்காமநாதன், இராமச்சந்திரன் ஆகியோரின் சகோதரனும், பிரியங்கா, பிரதீப், கௌதமி, சங்கவி, ராகவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2018) பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று புலோலி மேற்கு இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-குடும்பத்தினர்

0778200748, 0773735259

(சி-3583)

### மெகா பவர்

திகதி 20/08/2018

சீட்டிழுப்பு இலக்கம் 268

வெற்றி எழுத்து: L | சுப்பர் இலக்க: 08 | வெற்றி இலக்கங்கள்: 11 13 17 32

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2018.08.20

சீட்டிழுப்பு இலக்கம் 1857

ஆங்கில எழுத்து: H | வெல்லப்பட்ட இலக்கங்கள்: 38 49 52 70

தேசிய லொத்தர் சபை

### சுபிரி வாசனா

திகதி 2018/08/20

சீட்டிழுப்பு இலக்கம் 1353

எழுத்து: 26 | வெற்றி இலக்கம்: 06 41 45 46 | 49 27

தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2018/08/20

சீட்டிழுப்பு இலக்கம் 3728

ஆங்கில எழுத்து: N | வெல்லப்பட்ட இலக்கங்கள்: 1 2 8 1 4 3

தேசிய லொத்தர் சபை

## இந்திய அதிகா...

பாதை மற்றும் விமான நிலைய அமைவிடம் என்பன தொடர்பில் ஆராய்ந்து பிற்பகலே கொழும்பு திரும்புவர் என விமானப் படைத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக சீரமைக்க இலங்கை - இந்திய அரசுகளுக்கு இடையே இணக்கம் காணப்பட்டது.

அத்துடன், பலாலியிலிருந்து தமிழகத்துக்கான விமான சேவையை ஆரம்பிக்கவும் இந்தியா, இலங்கையிடம் விருப்பம் தெரிவித்தது.

இந்த நிலையை பலாலி விமானத் தளத்தை பிராந்திய விமான நிலையமாக விரிவாக்கும் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்க இந்தியா தயாராகி உள்ளது. அதனை யாழ் இந்திய துணைத் தூதுவர், கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் பலாலி விமானத் தளத்தை நேரில் ஆராய இந்திய அதிகாரிகள் மூவர் இன்று பலாலிக்கு வருகை தருகின்றனர்.

இதேவேளை, 2016ஆம் ஆண்டும் இந்திய சிவில் விமான போக்குவரத்து அதிகாரிகள் பலாலிக்கு நேரில் வருகை தந்து ஆராய்ந்தனர்.

அதன்போது, தற்போதுள்ள நிலப்பரப்பை வைத்தே பிராந்திய நிலையம் அமைக்க முடியும் என்றும் மேலதிகமாக காணிகளை சுவீகரிக்கத் தேவையில்லை என்றும் அவர்கள் அறிக்கை வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## வடக்கு, கிழக்கி...

சேரி இணக்கம் தெரிவித்துள்ளது.

விடுவிக்கப்படும், காணிகளிலுள்ள படை முகாம்களை வேறு இடங்களில் நிறுவி, பொதுமக்களுக்கு உரிய அந்தக் காணிகளை விடுவிக்க அரசாங்கம் 780 மில்லியன் ரூபாயை ஒதுக்கவுள்ளது.

வடக்கு, கிழக்கில் காணிகளை விடுவிப்பது தொடர்பில், கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை முக்கியமான கூட்டமொன்று இடம்பெற்றது. அதன்போதே, காணிகளை விடுவிப்பதற்கான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு திறைசேரி இணங்கியுள்ளது .

அதற்கமைய, யாழ். குடாநாட்டில் அச்சுவேலி, மயிலிட்டி வடக்கு, தென்மராட்சி, கிளாலி, பளை மற்றும் முகமாலை உள்ளிட்ட இடங்களிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில், முறக்கொட்டஞ்சேனையிலும் காணிகள் விடுவிக்கப்படவுள்ளன. விடுவிக்கப்படவிருக்கின்ற காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் குறித்த காணிகளை உறுதிப்படுத்துவதற்கு, அந்தந்த பிரதேசங்களின் செயலாளர்கள், உரிமையாளர்களுடன் தொடர்புகொள்வார்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)


### ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken With Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 076 707 0069

M.Suren


## பட்டதாரிகளுக்...

வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் யோசனைக்கமைய இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சரவையின் அனுமதியின் பிரகாரம் 30 புனர்வாழ்வு பெற்ற பட்டதாரிகளுக்கு அரச தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்திலும் புனர்வாழ்வளிக்கப்பட்ட 30 பட்டதாரிகளுக்கு அரச தொழில் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம)

## புராதன சின்னங்...

முக்கிய உள்ளூராட்சி நிர்வாகமாக யாழ்.மாநகர சபை திகழ்கின்றது. எனவே இச் சபைக்கு வருமானத்தை ஈட்டிக் கொள்ள வேண்டிய தேவையும் உள்ளது.

எனவே யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள புராதான சின்னங்களை சபையின் நிர்வாகத்தின் கீழ் எடுத்து, அதனை சுற்றுலா தளமாக மாற்றி அதன் ஊடாக வருமானத்தை ஈட்ட முடியும். குறிப்பாக யாழ். கோட்டையினை எமது கட்டுப்பாட்டுக்குள் எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

மேற்குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த உறுப்பினர் தனுஜன், மத்திய அரசாங்கம் இங்குள்ள புராதன சின்னங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியை செய்து வருகிறார்கள். அதனை தடுக்க வேண்டும். இல்லாவிட்டால் எமது புராதன சின்னங்கள் எமக்கு இல்லாமல் அழிக்கப்பட்டுவிடும், அல்லது வரலாறு மாற்றப்பட்டுவிடும். முதலில் யாழ்.கோட்டையினை மாநகர நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்து சுற்றுலா தளமாக மாற்ற வேண்டும்என தெரிவித்தார்.

அதனடிப்படையில் குறித்த தீர்மானம் சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பிரேரணை எந்தவித எதிர்ப்பும் இன்றி நிறைவேற்றப் பட்டது. (ம-9)

## போராளிகளுட...

மாகாண முதலமைச்சர், அந்த நிலை தொடராமல் இருப்பதற்கு முன்னாள் போராளிகளுக்கான அனைத்து செயற்திட்டங்களையும் அரசும் நாமும் இணைந்து முன்னெடுக்க வேண்டும் எனவும் வெளிநாட்டு பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்

சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த சுமார் நாற்பதிற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது அலுவலகத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்கள். குறித்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் போராளிகள் பலர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த காலத்தில் இராணுவத்தினர் அவர்களை தம்வசமாக்கினார்கள். அதாவது நாங்கள் உங்களை விடுவிக்கின்றோம், நீங்கள் எம்முடன் இணைந்து பணியாற்றுங்கள், தகவல்களை சேகரித்துத் தாருங்கள் என்ற முறையில் கேட்டுக்கொண்டதற்கிணங்க, முன்னாள் போராளிகளில் பலர் இராணுவத்தினருடன் சேர்ந்து வேலை செய்கின்றனர்.

இப்போதும் அப்படித்தான். அவர்களுடைய வாழ்கை நிலை உயர்ந்தது. ஆனால் அவர்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதை நான் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் உணர்த்தினேன்.

மேலும் எமது சமுதாயத்திலே முன்னாள் போராளிகள் தொடர்பில் ஒரு விதமான கரிசனை இருப்பதையும் சுட்டிக்காட்டினேன். ஏனெனில் முன்னாள் போராளிகளுடன் நாங்கள் சேர்ந்து கொண்டால், அரசு என்ன நினைக்குமோ, ஏதாவது நடைபெறுமோ? என்ற அச்சம் மக்களிடையே உள்ளது. அதனால் எங்களுடைய முன்னாள் போராளிகளோடு சேர்ந்திருப்பதை ஊர் மக்கள் தவிர்ப்பதையும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு எடுத்துக்காட்டினேன்.

அது அவ்வாறு இருக்கக் கூடாது. ஆனால் நாங்களும் அரசும் இணைந்து முன்னாள் போராளிகளுக்கான பல திட்டங்களை செய்து முடிக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்தினேன். அவ்வாறான செயற்றிட்டங்களை நாங்கள் ஆராய்ந்து செய்துகொண்டிருக்கின்றோம் என்பதையும் கூறினேன் என மேலும் தெரிவித்தார். (ம-9)


### பதிவுத் திருமணம் பிற்போடப்பட்டுள்ளது

23.08.2018 வியாழக்கிழமை இடம்பெறவிருந்த நிறூஜன் - ஹம்சவதனி ஆகியோரின் பதிவுத் திருமணம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். ஏற்படும் சிரமங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

க.இராமச்சந்திரன்
சாளம்பை, புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
077 719 1203

(C-3573)



### Immediate Vacancy

யாழ் நகரில் இயங்கி வரும் எமது EDM நிறுவனமான்து புதிதாக திறக்கவிருக்கும் 5 கிளைகளுக்கான 50 பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்யவுள்ளது.

- பயிற்சியின் போது 15,000/= - 25,000/=
- பயிற்சியின் பின் 45,000/= - 60,000/=
- EPF, ETF, Medical உள்ளடங்கலாக தங்குமிட வசதிகள் ஒழுங்கமைத்து கொடுக்கப்படும்.

இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

மேலதிக விபரங்களுக்கு:
021 314 2828 (8.00am - 5.00pm)

(5428)



### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

(C-3472)

0768226240

V2 TRAVELS

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை



### காணி விற்பனைக்கு

பண்டத்தரிப்பு பனிப்புலம் செட்டிய குறிச்சியில் வீட்டுடன் கூடிய ஏழு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0777009049, 0779932692

(5429)



### காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் வசாவிளான் மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் 15 பரப்பு சற்சதுர காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0772487572

(5418)



### வேலைவாய்ப்பு

கொக்குவிலில் இயங்கும் பிரபல பிறிண்டிங் நிறுவனம் ஒன்றிற்கு கீழ்க்காணும் பணியாளர்கள் உடன் தேவை!

அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புவர்கள்

- புத்தகம் கட்டுநர்கள் (Binding) பெண்
- Screen Printing தெரிந்தவர்கள் ஆண்/பெண்
- Envelope ஒட்டுபவர்கள் பெண்
- திருமண அழைப்பிதழ் தயாரிப்பவர்கள் பெண்

- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

வியாழக்கிழமை (23.08.2018) காலை 9.00 மணிமுதல் மதியம் 1.30 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.

136, கே.கே.எஸ் வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

PRINT MASTER 0776622981 | 0777481696



10 வருட கல்வி - தொழில் - விசா சேவையில் உங்கள் நம்பிக்கையின் சிகரம் தரும்

### நியூசிலாந்து மலேசியா வேலைவாய்ப்புக்கள்

தொழிற்சாலை பணியாளர் (மலேசியா), அலுமினியம் ஃபிற்றர், வாகன பெயின்ரர், கட்டட பணியாளர், படகு கட்டுமான பணியாளர், தேனீ வளர்ப்போர், தோட்டப் பணியாளர், தச்சுவேலையாட்கள், மின்னிணைப்பாளர், காப்பெற் விரிப்பாளர், மின்னிணைப்பாளர், தையல் பணியாளர், பேக்கறி பணியாளர், பிற்சா தயாரிப்பாளர், சமையல் பணியாளர், குழாய் பொருத்துநர், மோட்டார் சைக்கிள் மற்றும் வாகன மெக்கானிக், ஆரம்ப பாடசாலை மற்றும் விசேட தேவையுடையோருக்கான ஆசிரியர்

உட்பட 50க்கு மேற்பட்ட வேலைவாய்ப்புக்கள்

விளக்கக் கருத்தரங்கும் நேர்முகத் தேர்வும்

22-08-2018 புதன்கிழமை பிற்பகல் 2 மணி

கல்விச் சான்றிதழ்கள், தொழில் அனுபவ கடிதங்கள், கடவுச் சீட்டு என்பவற்றுடன் நேரில் வரவும்

விபரங்களுக்கு 0777 324 004

10வது ஆண்டில் கால்பதிக்கும் SIKARAM ACADEMY

Business - Hospitality - English

FAST TRACK to CAREERS

Sri Lankan Entrepreneur of the Year 2017

இல. 221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்

021 - 222 00 11

(R-3563)



### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் இராசாவின் தோட் வீதியில் 8 பரப்பு 5 3/4 குளி காணியில் 4 படுக்கை அறை கொண்ட வீடும் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
00447544452647
(Viber)

(5425)



### உத்தரவாத FRENCH பாசை பயிற்சி

நாளுக்கு 1:30 மணி வீதம் கிழமைக்கு 4:30 மணி நேர வீதப்படி மூன்று மாதங்களில் FRENCH பாசை சாதாரணமாக பேசவும், எழுதவும் பயிற்சி வழங்கப்படும்.

குறிப்பு:

- இப்பயிற்சி எங்கள் இடத்திலோ தங்கள் இடத்திலோ வழங்கப்படும்.
- இம்மூன்று மாத பயிற்சி காலமானது ஆங்கில அறிவுகொண்டவர்களுக்கும், ஆசிரியர் பயிற்சியின் பின் சுயமுயற்சி பயிற்சி செய்பவர்களுக்கும் மட்டுமே பொருத்தமானது.

தொடர்பு: 0759396600

(C-3574)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.